# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

22 JUL 1967
MADRAS



ஶ்ரீராமபிரான், கோயம்பேடு.

மாலை 9] பிலவங்க - ஆனி - ஜூலை, 1967 [மணி 10

சென்னை அரசாங்க அறநிலையப்



திண்டுக்கல் வட்டம், ரெட்டியார் சத்திரம், ஸ்ரீ கோபிநாத சுவாமி தேவஸ்தானம்
அலுவலகக் கட்டிடத் திறப்பு விழா (7—6—67)

## பொருளடக்கம்


1. தேனூறு செஞ்சொல் திருக்கோவை
2 முருகனின் திருவுருவங்கள்
3. திரு இயமகப் பதிகத்தின் சிறப்பு
4. விடை தெரியுமா ?
5. விடை விளக்கம்
6. திருச் சந்த விருத்தம்
7. ஸ்ரீ ராமாயண ரஸப்ரவாஹம்
8. கம்பன் பிறந்த ஊர்
9, கோது குலாவிய குணம்
10. வேதங்களில் காவியரசம்
11 பெரும் பயணம்


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சநதா ரூ. 10/- தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவருமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

— ஆசிரியர்

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 9] பிலவங்க-வைகாசி-ஜூலை, 1967 [மணி 10


## "தேனூறு செஞ்சொல் திருக்கோவை"

எண்நிறைந்த தில்லை எழுகோ புரம்திகழக்
கண்நிறைந்து நின்றருளும் கற்பகமே!—
நண்ணியசீர்த்
'தேனூறு செஞ்சொற் றிருக்கோவை' என்கின்ற
நானூறும் என்மனத்தே நல்கு!

முன்னுரை :

திருவாசகம் திருக்கோவை என்னும் இரு பெருநூல்களும் மாணிக்கவாசகப் பெருமானரால் அருளிச் செய்யப் பெற்றன வாகும். திருவாசகத்தினை மாணிக்க வாசகர் அருளிச் செய்தார் என்பதனை மட்டும் பெரும்பாலோர் அறிவர். ஆனல் அவரே திருக்கோவை என்னும் பிறிதொரு நூலையும் அருளிச் செய்துள்ளனர் என்பது, நம்மில் மிகப் பெரும்பாலோர்க்குத் தெரியாது. திருக்கோவையினை இயற்றியவர் மாணிக்க வாசகர் அல்லர்; அதனைச் "சிவபாத்தியன்" எனப் பெயரிய வேறு பிறர் எவரோ இயற்றினராதல் வேண்டும் எனக் கூறுவோரும் சிலர் உண்டெனின், திருக்கோவையைப் பற்றி எத்துணையளவுக்கு மக்கள் ஏதும் தெரிந்து கொள்ளாமல் இருக்கின்றனர் என்பது புலனகும். திருக்கோவையினைத் திருக்கோவையார் எனவும், திருச்சிற்றம்பலக் கோவையார் எனவும், சான்றோர்கள் போற்றிவழங்குவர்.

நூற்சிறப்பு :

திருக்கோவையாரின் முதற் செய்யுள் "திருவளர் தாமரை' எனத் தொடங்குகின்றது. ஆதலின் திருக்கோவையாரின் சிறப்பை விளக்க விரும்பிய பெரும் புலவர் ஒருவர், அதனையே ஒரு "திருவளர் தாமரை" என்று உருவகம் செய்து புகழ்ந்து போற்றுகின்றார்.

தாமரை மலர், பொய்கையில் தோன்றும்; ஒளியை உடையதாக விளங்கும்; இதழ்கள் பல கொண்டதாக இருக்கும்; சூரியனின் கதிர்களால் மலரும்; சிறந்த இனிய தேன் நிரம்பி, வண்டுகள் சூழ்ந்து, மொய்த்துண்ணும்படி திகழும். இவை அனைத்தும் தாமரை மலரின் இயல்புகளாகும். இவ்வியல்புகள் எல்லாமும் திருக்கோவையார் ஆகிய செந்தாமரை மலருக்கும் உண்டு என்கின்றார் அப்பெரும் புலவர்.

உருவாருந் தமிழ்ச்சங்கத் தடம்பொய்கைத்
தோன்றி,
உயர்ந்தோங்கு மெய்ஞ்ஞான வொளியை
யுடைத்தாகி,
மருவாருங் கிளவிஇதழ் நானூறு ஆகி,
மதுப்பொருள்வாய் மதிப்புலவர்
வண்டாக உண்ணத்,
தருவாரும் புலியூரின் உலகுய்யக் குனிப்போன்
தடங்கருணை யெனுமிரவி தன்கதிரால்
அலரும்
திருவாத வூராளி திருச்சிற்றம் பலவன்
திருவடித்தா மரைச்சாத்துந் திருவளர்
தாமரையே
—தனிப்பாடல்.

திருக்கோவையாரின்கண் பண்டைச் சங்ககாலப் புலவர்களின் சொற்பொருட்

சுவை நலங்கள் பலவும் அமைந்து முதிர்ந்து திகழும் ஆதலின், அது தமிழ்ச் சங்கமாகிய தடம் பொய்கையில் தோன்றியது; மெய்யுணர்வு விளக்கம் ஆகிய ஒளியை உடையதாய், அஃது உயர்ந்தோங்கித் திகழ்கின்றது. கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் ஆகிய நானூறு இதழ்களைக் கொண்டுள்ளது. தில்லைக் கூத்தப் பெருமானின் திருவருளாகிய ஞாயிற்றின் ஒளியால், மலர்ச்சி பெற்றுத் திகழ்கின்றது. உலகியற் பொருளும் அறிவன் நூற்பொருளும் ஆகிய சிறந்த தேன் நிரம்பித் திகழ்கின்றது. வண்டுகள் போன்ற புலவர் பெருமக்கள், அதனை விரும்பிச் சூழ்ந்து இடைவிடாது பயின்று சுவைத்து, இன்புற்று மகிழ்கின்றனர். ஆதலின் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதி, இறைவனின் திருவடியிற் சாத்தி வழிபடுவதற்கு, இதனினும் சிறந்த நறுமண மலர் பிறிதொன்றில்லை என்று கூறி வியந்து துதிக்கின்றார், அப்பழம் பெரும் புலவர்.

திருவாசகமும் திருக்கோவையாரும் :

(1) திருவாசகம் திருக்கோவையார் என்னும் இரு பெரு நூல்களும், நம் தமிழ் மொழிக்கண் உள்ள அரும்பெறல் நூல்களுள் முதன்மைச் சிறப்பிடம் பெறுதற்குரியனவாய்ப் பெரும்புகழ் வாய்ந்து திகழ்வனவாகும்.

(2) திருவாசகம் மாணிக்கவாசகரது அயரா அன்பின் திறனை விளக்குகின்றது; திருக்கோவையார் அவர்தம் அரிய புலமையறிவின் பெற்றியினைத் திறம்படப் புலப்படுத்து கின்றது.

(3) சிவபெருமானின் அருள் நலங்களைப் புகழ்ந்து பாடிப் போற்றுகின்றது திருவாசகம்; நமதருமைச் செந்தமிழ் மொழியின் சீரிய அகப்பொருள் இலக்கணங்களைத் திறம்படத் தெளித்துணர்த்தித் தேற்றுகின்றது திருக்கோவையார்!

(4) மாணிக்க வாசகப் பெருமானின் சிவானுபவ நலங்களைத் திருவாசகத்தால் உணரலாம்; அவர்தம் அளப்பரிய செந்தமிழ்ப் புலமை நலத்தின் சிறப்பினைத் திருக்கோவையார் நமக்குத் தெள்ளிதிற் புலப்படுத்தும்.

(5) திருவாசகம் சிவநெறித் திருநூல்; திருக்கோவையார் செந்தமிழ் மொழிப் பெருநூல்! திருவாசகம் தெவிட்டாத தேனையனைய சிறப்பினதெனின், திருக்கோவையார் அத்தேனிடை யூறிய தெய்வ நலம் சிறந்த செந்தமிழ் அமிழ்தம் போல்வதாகும்!

(6) திருவாசகம் திருக்கோவையார் என்னும் இவ்விரண்டும், சங்க கால இலக்கியங்களுக்கும் பிற்கால நூல்களுக்கும் இடையே ஓர் எல்லைக்கல் போல விளங்கும் மேம்பாடு உடையன.

(7) பிற்காலக் கவிதை வகைகள் பலவும் தோன்றுதற்கு வழி வகுத்துக் காட்டிய கழிபெருஞ் சிறப்பினவாய், முற்காலச் சங்கத் தொகை நூல்களின் பிழிவாய், அவற்றினின்றும் ஓரளவு வேறுபட்ட பொருளும் போக்கும் நடையும் அமைப்பும் உடையனவாய், புதுமையும் பழமையும் பொருந்தக் கலந்த பொலிவும் வளமும் மிக்க மாட்சிமையவாய், இவ்விரண்டும் வீறுற்றுயர்ந்து விளங்குகின்றன. இவற்றின் சிறப்பினையெல்லாம் முற்ற எடுத்து மொழிதல், எத்தகையோர்க்கும் இயல்வதன்று!

திருக்கோவையாரின் சிறப்பியற் பண்பு :

"தேனூறு செஞ்சொல்திருக்கோவை" என்னும் இந்நூலுக்கு எத்தனையோ பல திறப் பெருஞ் சிறப்புக்கள் உண்டு. அவைகளுள் ஒன்று பற்றி மட்டும் ஈண்டு விளக்குதல் சாலும்! சங்ககால நல்லிசைப் புலவர் பெருமக்களின் ஒப்புயர்வற்ற சான்றாண்மைப் பண்புகளையெல்லாம், ஓரளவேனும் நாம் நன்கினிதுணரப் பெற்றுள்ளோம். அளப்பருஞ் சிறப்பை யுடைய சங்ககால நல்லிசைப் புலவர் பெருமக்கள் எல்லோரும், விரிந்து பரந்து விளங்கும் இவ்வுலகினையும், இவ்வுலகின்கண் வேறு வேறுஉருவும் வேறு வேறு இயற்கையும் வாய்ந்து திகழும் எண்ணற்ற பலதிற உலகியற்புறப் பொருள்களையும், அவற்றின் அடிப்படையாகவும் வினைவாகவும் மனித மனத்தின்கண் எழும் உலப்பிலா உள்ளுணர்ச்சிகளையும் தெள்ளிதின் உணர்ந்து, கலை நலம் எலாம் கனியச் செழும் பொருட் பாடல்களாகத் திறம்பட வெளியிட்டருளியுள்ளனர். அவர்தம் அவ்வருமைத் திறம் சாலவும் பெருகிச் சிறந்தது என்பதில் ஐயமில்லை!

ஆயினும், அவர்தம் அளவிலடங்காக் கவிதை யனுபவ உணர்ச்சிகள் அனைத்தும்

நம்மனோரின் ஐம்பொறி யனுபவ அளவிற் குட்பட்டு அடங்கிவிடும் இயல்பினவேயாம். மற்று, நம் மாணிக்கவாசகர் பாடிய திரு வாசகச் செழும் பாடல்களின்கண் வெளிப் படும் மிக மேலான தூய சிவானுபவ நிகழ் வின் உணர்ச்சிகளோ, "பூண்ட ஐம்புல னிற் புலப்படா இன்பம் புணர்ந்து, மெய்யு ணர்வினிற் பொங்கும்" உணர்ச்சிகளாகும்! சுருங்கக் கூறல் வேண்டின், சங்கச் சான் றோர்கள் ஐம்பொறியளவிற் புலப்படக் கூடியஉலகியல்உணர்ச்சிகளையேபெரும்பா லும் பாடிச் சென்றனராக, மாணிக்கவாசகர் ஐம்பொறி யளவிற்குட் படாமல் ஓங்கும் கடவுளருளின்பப் பேருணர்ச்சிகளைப் பாடி விளக்கினர் எனலாம்.

இங்ஙனம், தாம் ஒருவர் மட்டுமே தம் தனி நிலையில் நுகர்ந்திருந்த ஐம்பொறி யளவிற் புலப்படாச் செம்பொருள் அருள னுபவ இன்ப உணர்ச்சிகளை, அவை இயல் பாகத் தாமே தம் உள்ளத்திற்பொங்கி யெழுந்து வழிந்தவாறு, திருவாசகமாகத் திருவாய் மலர்ந்த மாணிக்க வாசகர், அக்கடவுளருளின்ப நல உணர்ச்சிகளை, ஏனைய மக்களாயினுர்க் கெல்லாமும் எடுத் துரைத்துணர்த்தி, அவர்தம்மையும் அப் பேரின்ப நலம் தலைப்படுமாறு செய்வித்தற் பொருட்டுப் "பெற்ற பெருவளம் பெறுஅர்க்கு அறிவுறீஇச், சென்று பயன் எதிரச் சொன்ன பக்கம்" போல, பல்லாற்றுனும் நினைந்து, "மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்துகொண்டு, இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண் டும்" முறையில் இயற்றிய நூலே, திருக் கோவையார் ஆகும்.

திருக்கோவையாரின் சிறந்த புது விளக்கம் :

திருக்கோவையாரின்கண் மாணிக்கவாச கர் தாம்பெற்ற ஐம்பொறியளவின் மேம் பட்ட தூய கடவுளருளனுபவப் பேரின்ப உணர்ச்சிகளை, நம்மனோர் எளிய இனிய முறையில் உணர்தற் பொருட்டு, நமக்குக் கைவந்த "கண்டு கேட்டு உண்டுயிர்த்துற் றறியும்" காதலின்ப அனுபவ உணர்ச்சி நிலையின்கண் வைத்து விளக்கி யருளியுள் ளார். இங்ஙனம் கடவுளின்ப நலத்தின் பெற்றியினைக் காதலின்ப நலத்தினோடு ஏற்ற பெற்றி இயைத்து விளக்கும் திருக் கோவையாரின் சிறப்பியற் பண்பொன் றுமே, நம்மை மெய்சிலிர்த்து விம்மிதமுறச் செய்யப் போதியதாகின்றது.

திருக்கோவையார் ஒன்றில்தான், முதன் முதலாக இத்தகைய அழகிய புதியதொரு சிறந்த விளக்கத்தினை, நாம் காண்கிறோம்! மாணிக்கவாசகர்க்கு முன்னரும் பின்னரும் எத்துணையோ பல புலவர்களும் சான்றோர் களும், காதலின்ப நலத்தையும்கடவுளின்ப நலத்தையும்பற்றிப் பாடியுள்ளனராயினும், அவர்களெல்லாம் நம்மருமை மாணிக்க வாசகப் பெருமானைப்போல, "பேதையைக் காதல் காட்டிக் கைவிடுக்க" என்னும் நுட் பம் அறிந்து, "கடுத்தின்னுதானைக் கட்டி பூசிக் கடுத்தீற்றுமாறு போலக்" காதலின்ப நலத்தையும் கடவுளின்ப நலத்தையும் ஒன்று சேர்த்து ஒருங்கியைத்துப் பாடி, நம்மனோர்க்கு உய்யுநெறி விளக்கிஉணர்வு கொளுத்தக் காண்கின்றலம்.

மாணிக்க வாசகரின் "தேனூறு செஞ் சொல் திருக்கோவை" நூல் ஒன்றுதான், நம்மனோர் நலங் கருதி இத்தகைய வித்த கச் செயலை, முதன்முதற் புதிது புரிந்து வழி காட்டியுள்ளது!

காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.

எனவரும் தொல்காப்பிய நூற்பா, 'காத லின்பவாழ்வின்பயன்கடவுளின்பவாழ்வினை அடைய முயலும் படிநிலைப் பயிற்சியாதலே யாகும்' என்று மிக நுண்ணிதாகக் குறித்த அரிய கருத்தினை, உரிய முறையில் விரி வாக எடுத்துத் தெளிவுற முழுவதும் விளக் கிய பெருஞ் சிறப்பு, மாணிக்கவாசகர்க் கும், அவர் அருளிச் செய்த திருக்கோவை யார்க்குமே உரியதாகும்.

இச்சிறப்புடைமை கருதியே குமரகுருபர அடிகள், "காமஞ்சான்ற ஞானப்பனுவல்" எனத் திருக்கோவையாரை வியந்துபுகழ்ந் துரைத்தார். திருக்கோவையாரினை மாணிக்கவாசகர்,

அறிவன் நூற் பொருளும் உலகநூல்
வழக்கும்என
இருபொருளும் நுதலி எடுத்துக்கொண்டனர்

என அதற்கு உரைவகுத்த பேராசிரியர் தாமும் குறித்திருத்தல் ஓர்ந்துணரற் பாலது! எனவே திருக்கோவையாரானது இங்ஙனம் காமச்சுவையையும் ஞானப் பொருளினையும் ஒருங்கியைத்து விளக்கும் திறத்தினை யுணர்த்தும் ஒரு சான்றினை மட் டும், ஈண்டு நாம் கண்டமைவோம்!

அருட் பொருள்:

(1) "இதோ வந்து நின்றது என் மன்னுயிரே"

சிவபெருமான் மாணிக்கவாசகர்பாற் பேரருள் பூண்டான். அவரை முன்னொருகால் திருப்பெருந்துறையிற் குருந்தமர நிழலின்கண், ஞானாசிரியனாகப் போந்து கலந்தாண்டு கொண்டான். பின்னர் அவருள்ளம் வருந்துமாறு பிரிந்து சென்றான். சென்று, தன் மெய்யடியவர் கூட்டத்தோடு சேர்ந்தான். இத்தகைய சிவபெருமான், நினைக்குந்தோறும் இன்பஞ் செய்தலின் மாணிக்கவாசகர்க்கு அமிழ்தமாக விளங்கினான். பின்னர் அவனே, மறைந்து நின்று கட்புலனாகாது துன்பஞ் செய்தலின், அவர்க்கு அணங்கு (துன்பம்) என இருந்தான். தில்லையம்பலம் போன்ற பல நல்ல தலங்களில் எழுந்தருளியிருப்பது மட்டுமன்றி, அச் சிவபெருமான் மாணிக்கவாசகரின் சிந்தையிலும் நிலை பெற்றுத் திகழ்ந்தான். இங்ஙனம் சிவபெருமான் ஒருவனே பல பண்பும் செயலும் கொண்டு வஞ்சகன் போல, மாணிக்கவாசகர்பால் திருவிளையாடல்கள் பல செய்து நின்றான். அவர்க்குக் கண்முன்னே தோன்றிக் காட்சியும் நல்கினான். சிவபெருமானைக் கண்ணாரக் கண்ட மணிவாசகர், தமது உயிர்க்குரிய சிவமே தமது முன்னே போந்துதோன்றியதனை, "இதோ வந்து நின்றதென் மன்னுயிரே" எனக் கூறி மகிழ்ந்து பெரிதும் வியப்புறுகின்றார்.

அவ்வியப்பினை எல்லாம் மாணிக்கவாசகர் நம்மனோர்க்கு உணர்த்த விரும்புகின்றார். ஆயின், அவற்றை உடனே நேரே நிரல்பட, எடுத்த எடுப்பிற் கூறிவிடுவதற்கு அவர் முற்பட்டிலர். நம்மனோர்க்கு விருப்பம் மிக்க உலகியற் காமச்சுவையின்கண் வைத்தே, தமது அருளியல் ஞானப் பொருட் செய்தியினை அவர் கூறத் தலைப்படுகின்றார்.

அகப் பொருள்:

"ஓர் ஆடவன் அழகிய பெண்ணொருத்தியை ஒரு பொழிலிடைக் கண்டான். அன்பின் வயப்பட்டு இருவரும் ஒருவரை ஒருவர் காதலித்தனர். காதலித்த இருவரும் இன்பம் பெருகத் தம்முட் சேர்ந்து மகிழ்ந்தனர். சேர்ந்து மகிழ்ந்ததற்பின் இருவரும் பிரிய நேர்ந்தது. காதலியைப் பிரியுங்கால் காதலனின் உள்ளம் பெரிதும் வருந்தியது. பிரிந்த காதலி தன் தோழியர் கூட்டத்தைச் சென்று சேர்ந்தாள். காதலன் மறுநாளும் அப்பொழிலின்கண் வந்து நின்றான். அன்றும் தன் காதலியை அங்குக் கண்டு, கூடி மகிழ்தல் வேண்டும் என்று, அவன் மிகவும் விருப்பங் கொண்டிருந்தான். தன் காதலியை அவன் அங்குக் கண்டிலன். இனிச் சிறிது பொழுதில் வருவாள் என்ற எண்ணத்தோடு, நேற்றுத் தான் அவளைக் கூடி மகிழ்ந்த இன்பத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தான். அந்த நினைவால் அவனுக்கு ஒரு புறம் மகிழ்ச்சியும், பிறிதொரு புறம் துன்பமும் உண்டாயின. காதலியின் பேரழகில் அவன் தன் மனத்தைப் பறி கொடுத்து விட்டிருந்தான். அவனது உள்ளக் கோயிலில் அப்பெண்ணின் வடிவம் நீங்காது நிலைபெற்று விட்டது. அவளது வருகைக்காக அவன் அங்கேயே நெடு நேரம் காத்துத் தவங்கிடந்தான். நெடும் பொழுது கழித்து, அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்ட அவ்வஞ்சகக் கள்வி. அங்கு வந்து நின்றாள். தன் உயிரினும் இனிய காதலியைக் கண்டதும். அவன் அகமிக மகிழ்ந்து, "இதோ வந்து நின்றது என் மன்னுயிரே" என வாய்விட்டுக் கூறிப் பாராட்டிப் பெருங்களிப்புற்றான். "உயிர் என வியத்தல்" என்னும் அகத்துறைக் குரிய இச்செய்தியை,

நேயத்த தாய், நென்னல் என்னைப் புணர்ந்து,
நெஞ்சம் நெகப்போய்;
ஆயத்த தாய், அமிழ் தாய், அணங் காய்,
அரன் அம்பலம்போல்
தேயத்த தாய், என்றன் சிந்தைய தாய்த்,
தெரியிற் பெரிதும்
மாயத்த தாகி, இதோவந்து
நின்றதென் மன்னுயிரே!

என, ஏதோ ஒரு கதை கூறுவதுபோலக் கூறுகின்றார் நம் மாணிக்கவாசகர். அவர் கூறுவது உண்மையில் ஒரு கதையும் அன்று. தமது உயிர்க்குயிராகிய சிவம் தம் மாட்டுப் பலவகைத் திருவிளையாடல்கள் நிகழ்த்தி, "இதோ வந்து நின்றதென் மன்னுயிரே" என்னலாம்படி, பின்னர்த் தமக்குக் காட்சி நல்கிய சிறப்பினையே அவர் இங்ஙனம் குறிப்பிட்டருளுகின்றார்.

"என் மாட்டு அருளுடையதாய் முற்காலத்து என்னை வந்துகூடி, அருளில்லதுபோல என்நெஞ்சுடையும் வண்ணம் பிரிந்து சென்று, தன் மெய்யடியார் குழாத்ததாய், நினையும்தோறும் அமிழ்தம் போல இன்பஞ் செய்து, கட்புலனாகாமையிற் றுன்பஞ்செய்து, அம்பலம் போலும் நல்ல தலங்களில் எழுந்

தருளி, என் மனத்தினுள்ளே வந்து புகுந்து நிலைபெற்று, இங்ஙனம் பல தன்மைத்தாகலிற் பெரிதும் மாயத்தை யுடையதாய், எனது நிலைபெறும் உயிர்(சிவம்) இதோ இங்கு வந்து தோன்று நின்றது''

என்னும் வேறொரு நுண்ணிய சிறந்த பொருளும் இதன்கண் அமைந்திருத்தல் காணலாம். காதலின்ப நலத்தில் கடவுளின்ப நலத்தினை இனிதியைத்து விளக்கும் திருக்கோவையாரின் பெருமைக்கு, இவ்வொரு பாடல்தானே சான்றுதல் அமையாதோ?

(2) ''அறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே''

கடவுளின்ப நலத்தினைக் காதலின்பச் சுவையுடன் இயைத்து விளக்கும் திருக்கோவையாரின் சிறப்புக்கு, மற்றும் ஒரு சான்றும், நாம் இங்குக் காண்டல் நலம்.

ஒரு தலைமகன், ஒரு தலைமகளைக் காதலித்தான். அக்காதல் விருப்பம் நிறைவேறத் தோழியின் துணையை நாடினான். அவளும் அவனது வேண்டுகோளுக்கு இசைந்தாள். இசைந்த தோழி, தலைமகள்பாற் சென்று, தலைமகனை ஏற்றுக் கொள்ளல் இன்றியமையாதது எனத்தலைவியிடம் வற்புறுத்தி மொழிந்தாள்.

அதுகேட்ட தலைவியும், தான் முன்னொரு நாள் சுனை நீராடச் சென்ற போழ்து, அதன்கண் தவறிவிழுந்து இறக்க இருந்த நிலையில், அவ் வழியே தற்செயலாகப் போந்த தலைமகன், உடனே சுனையிடைப் பாய்ந்து, தன்னைக் காப்பாற்றிய அருஞ் செயலை நினைவு கூர்கின்றாள், அவன் காலத்தினாற் செய்த - செய்யாமற் செய்த- அரிய பேருதவிக்கு நன்றி பாராட்டுகின்றாள். ''உற்றார்க் குரியர் பொற்றொடி மகளிர்'' என்னும் முதுமொழியை எண்ணுகின்றாள். அதன் பயனாகத் தலைவனைக் கடிமணம் புணர்ந்து அணைய உடன்படுகின்றாள். அவ்வுடன்பாட்டுக் குறிப்பினையே தோழியை நோக்கித் தலைமகள், 'அவர்க்கு அறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே' என்பதனாற் புலப்படுத்துகின்றாள்.

'உற்ற காலத்தில் வந்து, என் உயிரைக் காத்து உதவிய அப்பெருந்தகைக்கு, யான் சொல்லத்தக்க நன்றியுரை இன்னதென்று எனக்குத் தெரியவில்லை' என்பது இத் தொடரின் பொருள். தன் நன்றி யுணர்வுக்கு அறிகுறியாகத் தலைவனை மணந்து கொள்ள உடன்பட்டு இசைவு தரும் முறையில் இங்ஙனம் தலைவி கூறினாள் என்பது கருத்து. ''புனல்தரு புணர்ச்சி'' என இதனை அகப்பொருளிலக்கணங்கள் கூறும். அவ்வகப் பொருள் துறைக்கு உரிய இக் கருத்தை,

ஓங்கும் ஒருவிடம் உண்டு, அம் பலத்தும்பர்
உய்ய, அன்று
தாங்கும் ஒருவன் தடவரை வாய்த், தழங்கும்
அருவி
வீங்கும் சுனைப்புனல் வீழ்ந்த(அ)ன்று, அழுங்
கப் பிடித்தெடுத்து
வாங்கும் அவர்க்(கு), அறி யேன்சிறி யேன்
சொல்லும் வாசகமே!

என அழகுறப் பாடுகின்றார் மாணிக்கவாசகர். இப்பாடலில், தலைவி தலைவன் தன்னைச் சுனையிடை வீழ்ந்திறவாமல் காத்து உதவிய செயலை நினைவு கூர்ந்து நின்று, நன்றிபாராட்டியதாக மட்டும்கூறி, மாணிக்கவாசகர் அமைந்து விடவில்லை.

''பிறவியாகிய பெரிய கடலில், துன்பங்களாகிய வலிய அலைகளால் மோதித் தாக்கப் பெற்று, பற்றிக் கொள்ளத்தக்க துணை ஏதும் இன்றி, வரைவின் மகளிர் ஆகிய புயற் காற்றினால் கலக்கப்பட்டு, காமம் என்னும் சுறு மீனின் வாயில் அகப்பட்டுக் கொண்டு, இனி நாம் தப்பி உய்யும் வழி யாது? என்று பல வகைகளில் எண்ணமிட்டு, திருவைந்தெழுத்தாகிய புணையையே பிடித்துக் கிடக்கின்ற தம்மை, வீடுபேறு கிய வளப்பம் நிறைந்த கரையில் சேர்த்துச் சிவபெருமான் ஆட்கொண்டருளினான்'' என்ற வேறொரு சிறந்த கருத்தையும், இவ்வகப் பொருட் பாடலில் மாணிக்க வாசகர் இனிது புலப்படுத்தியுள்ளார்.

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்
தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு, பற்றொன்
றின்றிக்
கனியைநேர் துவர்வாயார்என்னும் காலால்
கலக்குண்டு, காமவான் சுறவின் வாய்ப்
பட்(டு),

இனிஎன்னே உய்யுமா(று) என்றென்
றெண்ணி,
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்
கின்றேனை
முனைவனே முதல் அந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க
னேற்கே!

எனத் திருவாசகத்திற் பாடியவாறு போல, சிவபெருமான் தம்மைப் பிறவிப் பெருங் கடலில் விழுந்தலைந்து வருந்தாமல், வா வா என்று வலித்துப் பிடித்து ஈர்த்துக்காத் தாண்டு கொண்டருளிய பேருதவியையும் நினைவு கூர்ந்து, அத்தகைய சிவபெரு மானுக்கு நன்றியுரை கூறுவது யாங்ஙனம் என்று யான் அறுகின்றிலேன் என்னும் தம் கருத்தும் அமைய, "அறியேன் சிறி யேன் சொல்லும் வாசகமே" எனப் பாடிப் பரவுகின்றார் மாணிக்கவாசகர்.

முடிவுரை :

ஐம்பொறிகளினால் நுகர்ந்தறியும் உணர்ச் சிகட்கு அப்பாற்பட்டு, ஐம்பொறிகளின் அளவுக்கு அடங்காமல் மேம்பட்டுத்திகழும் அருளியல் அநுபவ நலங்களை, 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் நிலையில், அகப்பொருளுக்குள் அமைத்து அருட்பொருளை யுணர்த்தும் சிறப்பு மிகுந்த 'தேனூறு செஞ்சொல் திருக்கோவையினை, நாம் நன்கினிது கற் றுணர்ந்து ஓதி, நலம்பெற முயலுவோமாக!

—ஆசிரியர்.

---

## சுழல் கோப்பைப் பரிசு பெற்ற கோயில்கள்.

(கோயில்களில் 'தூய்மையும் துப்புரவும் அமைந்து, தெய்விகச் சூழ்நிலை சிறந்தோங்கித் திகழச் செய்தற் பொருட்டும், கோயிற் பணியாளர்களிடையே ஊக்கமும் நற்போட்டியும் உண்டாகுமாறு செய்தல் குறித்தும், அந்தந்தத் துணை ஆணையர், உதவி ஆணையர்களின் பிரிவில் உள்ள கோயில்களை ஆராய்ந்து, அவற்றில் மிகவும் முதன்மையுற்று விளங்குவனவற்றைத் தேர்ந்தெடுத்து, சுழல் கோப்பைப் பரிசளிக்கும் விழாக்கள், ஆணையர் அவர்களின் உத்தரவின்படி ஆங்காங்கே நிகழ்ந்து வருகின்றன. பின்வரும் கோயில்கள், 1966-ஆம் ஆண்டிற்கான சுழல் கோப்பைப் பரிசைப் பெற்றுள்ளன.)

1. ஸ்ரீ அருணாசலேசுவரர் ஆலயம், திருவண்ணாமலை, வடாற்காடு மாவட்டம்.
2. ஸ்ரீ அமிர்தகடேசுவரர் ஆலயம், திருக்கடவூர், தஞ்சை மாவட்டம்.
3. ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம், பழநி, மதுரை மாவட்டம்.
4. ஸ்ரீ மல்லிகேசுவரர் ஆலயம், லிங்கிச்செட்டித் தெரு, சென்னை-1.
5. ஸ்ரீ திருக்கரை ஈசுவரர் ஆலயம், மாணம்பதி, செங்கற்பட்டு மாவட்டம்.
6. ஸ்ரீ தில்லைக் கோவிந்தராஜப் பெருமாள் ஆலயம், கள்ளக்குறிச்சி. தென்னாற்காடு மாவட்டம்.
7. ஸ்ரீ கன்னிகா பரமேசுவரி ஆலயம், செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
8. ஸ்ரீ கொண்டத்துக் காளியம்மன் ஆலயம், பாரியூர், கோவை மாவட்டம்
9. ஸ்ரீ ஜயங்கொண்டநாத சுவாமி ஆலயம், மன்னார்குடி, தஞ்சை மாவட்டம்.
10. ஸ்ரீ சாயாவன ஈசுவரர் ஆலயம், சாயாவனம், சீர்காழி வட்டம்.
11. ஸ்ரீ வடதீர்த்தநாதர் ஆலயம், அந்தநல்லூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
12. ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் ஆலயம், தாடிக்கொம்பு. மதுரை மாவட்டம்.
13. ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம், கண்டனூர், திருப்பத்தூர் வட்டம். இராமநாதபுரம் மாவட்டம்.
14. ஸ்ரீ சங்கர ராமேசுவரர் ஆலயம், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டம்.
15. ஸ்ரீ கன்னி விநாயகர் ஆலயம், வடிவீசுவரம், நாகர்கோயில்.

—ஆசிரியர்.

# முருகனின் திருவுருவங்கள்

முன்னுரை :

இறைவன் ஒரு நாமமும், ஓருருவமும் இல்லாதவன். ஆயினும் அடியார்களின் பொருட்டு அவன், பல வடிவமும் பல பெயரும் கொள்கின்றான்.

" ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம்
கொட்டாமோ "

என்பது திருவாசகம். அம்முறையில் தனக்கென ஓருருவம் இல்லாத இறைவன், அடியார்களுக்கு அருள் செய்தல் குறித்து, வெவ்வேறு திருவுருவங்களை மேற்கொள்ளுகின்றான். 'நானாவித உருவாய் நமையாள்வான்' 'பல பல வேடம் ஆகும் பரன் நாரிபாகன்' என்பன தேவாரம். இறைவன் தன்னியல்பில் இத்தகையவன், 'இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று எழுதிக் காட்டொணாதவன்' என்பது உண்மையே யாயினும், அவ் இறைவனை நம் பழம் பெரும் சான்றோர்கள் வெவ்வேறு வடிவங்களில், பல்வேறு நிலைகளில் கண்டு அறிந்து பணிந்து போற்றியுள்ளனர். சிவபிரானுக்கு உரிய அருட்கோலங்கள் 25 என்றும், 64 என்றும் நூல்கள் நுவலும். அவ்வாறே முருகனுக்கும், பலவகையான அழகிய அருள் வடிவங்கள் உண்டு என்று, பெரியோர்கள் கூறுவர். குமார தந்திரம், ஸ்ரீ தத்துவ நிதி முதலிய வடமொழி நூல்களில் முருகனுக்குரிய திருவுருவங்கள் பற்றி விளக்கப் பெற்றுள்ளன.

கச்சியப்ப முனிவர் :

தமிழகத்தில் அண்மைக் காலத்தில் தோன்றியருளிய சிறந்த பெருஞ் சான்றோர்களிலும், ஒப்புயர்வற்ற மாபெருங் கவிஞர்களிலும் ஒருவராக மதித்துப் போற்றிப் பாராட்டுதற்குரியவர், கச்சியப்ப முனிவர் என்பவராவார். இவர் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்தவர். மாதவச் சிவஞான சுவாமிகளின் மாணவர். பல கலைகளில் வல்லவர். விநாயக புராணம், பேரூர்ப் புராணம், திருவானைக்காப் புராணம் முதலிய பல நூல்கள் இயற்றியவர். அவர் தாம் இயற்றிய தணிகைப் புராணத்தில், முருகனின் திருவுருவங்கள் பலவற்றைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சிற்ப நூல்கள், முருகனின் திருவுருவங்கள் எவ்வெவ்வாறு செய்யப் பெறுதல் வேண்டும் என்று விளக்கிக் கூறுகின்றனவோ, அக் கருத்துக்களைக் கச்சியப்ப முனிவர் கவின்மிகு தமிழில் கவிதை வடிவில் ஆக்கித் தந்தருளுகின்றார். அக் கவிதைகளின் எளிய இனிய கருத்துச் சுருக்கம் வருமாறு :—

(1) ஞான சத்திதரன் :

சத்தி என்பது வேலுக்கு ஒரு பெயர். ஞானமே முருகனுக்கு வேலாக அமைந்திருக்கின்றது. ஆதலின் அதனை ஞானசத்தி எனவும் வழங்குவர். ஞான சத்தியாகிய வேலை, முருகன் தனது வலக்கையில் ஏந்தியிருக்கின்றான். இடக்கையைத் தனது தொடையில் வைத்திருக்கின்றான். இங்ஙனம் இரண்டு கைகள் உடையவனாய், வேலேந்தி நிற்கும் கோலத்துடன் விளங்கும் முருகனை ஞானசத்திதரன் என்பர். திருத்தணிகையிலுள்ள முருகன், ஞான சத்திதரன் என்னும் திருவுருவம் உடையவனே என்பது, நாம் சிந்தித்து மகிழ்தற்குரியது.

(2) கந்த சுவாமி :

முருகனுக்கு உரிய சிறப்புப் பெயர்களில் கந்தன் என்பது ஒன்று. கந்தன் என்னும் சொல்லுக்குத் திரண்டவன் என்பது பொருள். "சேயவன் வடிவம் ஆறும் திரட்டி நீ ஒன்றாய்ச் செய்தாய்;ஆயதனாலே கந்தனும் நாமம் பெற்றான்" என்பது கந்த புராணம். கடவுளர் பலரின் ஆற்றலும் கூறும் ஒருங்கே திரண்டவன் எனவும் கொள்ளலாம். அடியார்களுக்குப் பற்றுக் கோடானவன், கந்தன் எனக் கொள்ளுதலும் பொருந்தும். கந்து என்பது நடுதறி அல்லது தண்டாயுதத்தையும் குறிக்கும். ஆதலின், கந்த சுவாமி என்பது, பழனி

ஆண்டவரின் திருவுருவத்தைக் குறிக்கும் சிற்ப நூற்பெயர் எனலாம்.

இத்திருவுருவம் ஒரு முகமும், இரு கைகளும் கொண்டிருக்கும். வலக்கரத்தில் தண்டாயுதத்தை ஏந்தி, இடக்கையை இடுப்பில் ஊன்றி, துறவுக் கோலத்தில், தலை முண்டிதமாய், உருத்திராக்க மணி வடம் தாங்கிக் கோவணம் அணிந்த நிலையில், நின்ற கோலத்துடன் இருக்கும்.

(3) தேவ சேனுபதி :

முருகன் 6 திருமுகங்களும், 12 திருக்கைகளும் கொண்டு, தெய்வயானையம்மையாருடன் எழுந்தருளியிருக்கும் நிலை. இதன்கண், முருகன் தனது இடப்பக்கத்தில் அமர்ந்திருக்கும் தெய்வயானையம்மையை ஒருகை தழுவி இருக்க, மற்றொரு கை அடியார்களுக்கு 'அஞ்சேல்' என்று அபயம் அளிக்கும் நிலையில் விளங்குவன். ஏனைய பத்துக் கைகளும் முறையே கேடயம் அரிவாள் சூலம் வச்சிரம் வேல் வாள் வில் தண்டு புள்ளம் அம்பு ஆகிய பத்து படைக்கலன்களைத் தாங்கி இருக்கும். இங்ஙனம் அமைக்கப்பெறும் சிற்பம், தேவ சேனுபதி எனப் பெறும். 'தெய்வயானையின் கணவர்' என்பது இத் தொடருக்குப் பொருள் ஆகும்.

(4) சுப்பிரமணியர் :

முருகன் தனது இடப்பக்கத்துக் கையினை, இடுப்பில் அமைத்துக் கொண்டு, வலப்பக்கத்தில் ஒருகையை அஞ்சல் அளிக்கும் அபய நிலையில் ஏந்திக் கொண்டு, தன்னை வணங்கும் அடியவர்களுக்கு அருள் பொழிகின்ற கண்களுடன் விளங்குகின்ருன். இந்நிலையிலேயே அவனைச் சிற்ப நூல்கள், சுப்பிரமணியன் எனக் கூறித் துதித்துப் போற்றுகின்றன.

சுப்பிரமணியன் என்னும் சொல்லுக்குப் பிராமணர்க்கும் வேதத்திற்கும் முதன்மை மிக்க தேவன் (சு+ப்ரமணியன்); இன்பத்தினையே இயல்பாக உடைய சிவபரம் பொருளின் வேறன்றி விளங்குபவன் (சு+பிரமம்+ந்யம், ண்யம்) எனப் பாம்பன் சுவாமிகள் பொருள் கூறுவர்.

(5) களிற்றூர்திப் பெருமான்:

முருகனுக்கு மயில் ஒன்றே வாகனம் என அன்பர்கள் பலரும் கருதுவர். ஆயினும், முருகனுக்கு வேறு வாகனங்களும் உண்டு. முருகன் யானையையும் ஓர் ஊர்தியாகக் கொண்டருளுவன். யானையை ஊர்தியாகக் கொள்ளும் நிலையில் முருகனைக் களிற்றூர்திப் பெருமான் (கஜவாகனர்) எனச் சிற்ப நூல்கள் குறிப்பிடும். இத்திருவுருவத்தினை ஆசிரியர் நக்கீரரும் தமது திருமுருகாற்றுப்படையில் திருச்சீரலைவாய் பற்றிய பகுதியில், அதன் தொடக்கத்தில் விரித்துரைத்து விளக்கி யிருத்தல் காணலாம்.

" நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறு ஊர்ந்தாங்கு "
—பதிற்றுப்பத்து, 11:3-6

ஆண் யானையின் மீது, ஒரு திருமுகமும், நான்கு கைகளும், இடப்பக்கக் கைகள் இரண்டில் இரண்டு உரு எழுதிய கோழிக் கொடிகளும், வலப்பக்கக் கைகள் இரண்டில் வேலும் வாளும் கொண்டு விளங்குபவன், களிற்றூர்திப் பெருமான் ஆவன்.

(6) சரவணபவன் :

சிவபிரானிடம் சென்று சூரபதுமனுல் தாங்கள் படும் துயரங்களைக் கூறித் தேவர்கள் முறையிட, அப்பெருமான் தனது 6 திருமுகங்களினின்று ஆறு தீப்பொறிகளை வெளிப்படுத்தினுன். விசும்பில் பரவிய அப்பொறிகளை வருவித்து இறைவன் வாயு தேவனிடம் சேர்ப்பித்தான். அவன் அவற்றைத் தாங்கமுடியாமல் அக்கினித் தேவனிடத்தில் ஒப்படைத்தான். அக்கினியும் அதனைக் கங்கையில் விடுத்தான். அதுவும் அவற்றைத் தாங்கும்ஆற்றலின்றி நாணற்புல் நிறைந்த சரவணப் பொய்கையில் விடுத்தது. பின்னர் அப்பொறிகள் ஆறும், ஆறு குழந்தைகளாகி, அப் பொய்கையில் இருந்த தாமரை மலர்களில் வீற்றிருப்பன ஆயின என்பது, முருகனைக் குறித்த கந்த புராண வரலாறு. சரவணப் பொய்கையில் தோன்றியதனுலேயே, முருகனுக்குச் சரவணபவன் என்பது பெயராயிற்று.

மறைகளின் முடிவால் வாக்கால்
மனத்தினுல் அளக்கொணுமல்
நிறைவுடன் யாண்டும் ஆகி
நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி
அருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதில்
வீற்றிருந் தருளி னுனே.
—கந்தபுராணம்.

ஆறு திருமுகங்களுடன், ஒருகை வரங்கள் தரும் நிலையிலும், மற்றொரு கை அஞ்சல் அளிக்கும் நிலையிலும் விளங்க, ஏனைய பத்துக் கைகளிலும் முறையே வேல்-கேடயம்-கண்டாமணி-தாமரைமலர்-சேவல்-தண்டு-உளி-அம்பு-வாள் என்னும் பத்துக் கருவிகளைத் தாங்கிக் கொண்டு, தாமரை மலரில் எழுந்தருளி நிற்கும் நிலையில் அமைந்துள்ள முருகனைச் 'சரவணபவன்' எனச் சிற்ப நூல்கள் குறிக்கும்.

(7) கார்த்திகேயன் :

சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளாக வடிவம் கொண்டிருந்த முருகனுக்குக் கார்த்திகைப் பெண்கள் அறுவரும் திருமுலைப்பால் அளித்தனர் என்பது வரலாறு. அதனாலேயே முருகனுக்குக் கார்த்திகேயன் என்னும் பெயர் ஏற்பட்டது. தமிழ் நாட்டு முருகனை, வட இந்திய மக்கள் கார்த்திகேயன் என்னும் பெயரிலேயே சிறப்புற அறிந்து, வழிபட்டு மகிழ்ந்து வருகின்றனர்.

கார்த்திகேயன் என்னும் நிலையில் முருகன் ஆறு திருமுகங்களும், ஆறு திருக்கைகளும் மட்டுமே கொண்டு விளங்குவன். வலப்பக்கத்திலுள்ள மூன்று கைகளும் முறையே வேலும் வாளும் ஏந்தி அஞ்சல் அளிக்கும் நிலையில் இருக்கும்; இடப்பக்கத்திலுள்ள மூன்று கைகளும் முறையே குலிசம்-கேடயம் என்பனவற்றை ஏந்திக் கொண்டு வரங்கள் தரும் நிலையில் அழகுற விளங்கும்.

(8) குமாரன் :

தனது நெற்றிக் கண்ணினால் 'மாரனை' எரித்தருளிய சிவபெருமான், அந் நெற்றிக் கண்ணினின்றே குமாரன் ஆகிய முருகனை அளித்தருளினான். மாரனை எரித்தது, நிக்கிரகம்; குமாரனை அளித்தது அநுக்கிரகம். குமாரன் என்னும் சொல்லே, குமரன் எனவும் வழங்கப்படும். கு-குற்சிதம், அருவருப்பு, மலம். மாரன்-மரிக்கச் செய்பவன், அழிப்பவன். உயிர்களின் மலப் பிணிப்பை அழித் தொழிக்க வல்லவன் எவனோ, அவனே குமாரன் எனப்படுவான்.

குமாரன் என்னும் நிலையில், முருகன் ஒரு திருமுகமும், நான்கு திருக்கைகளும் கொண்டிருப்பான். அவனது வலப்பக்கத்தில் வள்ளியம்மை விளங்குவள். வலப்பக்கத்துத் திருக்கைகளில் வேலும் வாளும் இருக்கும். இடப்பக்கத்துத் திருக்கைகளில் கோழிக் கொடியும், கேடயமும் ஏந்தி யிருப்பான்.

(9) ஆறுமுகவர் :

இறைவன் தன் அடியார்களுக்கு அஞ்சும் முகம் (இடுக்கண்) தோன்றும் போதெல்லாம், ஆறுமுகம் கொண்டு வந்து தோன்றி அருள் புரிகின்றான்.

" அஞ்சுமுகம் தோன்றுமல்
ஆறுமுகம் காட்டவந்த
செஞ்சரணச் சேவடியைச்
சிந்தைவைப்பது எந்நாளோ "

—தாயுமானவர்.

பிற தெய்வங்களுக்கு இல்லாத வகையில், முருகன் ஆறு திருமுகங்கள் உடையவனாக விளங்குகின்றான். அஃது அவனது தனிப்பெரும் சிறப்பியல்பினை உணர்த்துகின்றது. ஞானம் ஐசுவரியம் திரு வீரியம் வைராக்கியம் புகழ் என்னும் இறைமைக் குணங்கள் ஆறும், முருகனுக்கு ஆறு முகங்களாயின என்பர் சான்றோர். ஆதலின் ஆறுமுகன், ஷண்முகன் என்பன அவனுக்குப் பெயர்களாயின. முருகன் வேல்-அம்பு-வாள்-திகிரி-பாசம் (கயிறு)-அபயம் என்பவற்றைத் தன் ஆறு வலக்கைகளிலும், வச்சிரம்-வில்-கேடயம்-கோழிக்கொடி - அங்குசம்-வரதம் என்பவற்றைத் தன் ஆறு இடக் கைகளிலும் உடையவனாய், வலத்தும் இடத்தும் முறையே வள்ளி தெய்வயானையர் விளங்க, மயில் மீது இவர்ந்தோ உடனிருக்கவோ திகழும் நிலையில், ஆறுமுகவன் எனப் போற்றப்படுவான். திருச்செந்தூரில் முருகன் ஆறுமுகனாகக் காட்சி தருகின்றான். திருமுருகாற்றுப்படை இந்நிலையினைச் சிறந்தெடுத்துப் போற்றித்துதித்து இருத்தல் காணலாம்.

(10) தாரகாந்தகர் :

சூரபதுமன் சிங்கமுகன் தாரகன் என்னும் அசுரர்கள் மூவரையும் அழித் தருளினான் முருகன் என்பது வரலாறு. தாரகன் என்பவன், சூரனின் இளையதம்பி. மாயைகள் செய்து, பகைவரை மயக்கி வருத்தி வெல்லுதலில், தாரகன் மிகவும் வல்லவன். அவன் கிரவுஞ்சம் என்னும் தனது மலையின் குகைக்குள் புகுந்த வீரவாகு தேவர் முதலினோரை மயக்கமுறச்செய்தான். அந்நிலையில் முருகன் தனது வேலை விடுத்துத் தாரகாசுரனை அழித்தருளினான். ஆதலின் தாரகாந்தகர், தாரகாரி, 'குருகு

பெயர்சகுன்றம் கொன்றேன்' என முருகன் பல பெயர்கள் பெற்ருன்.

ஆறு திருமுகங்களுடன், தனது பன்னிரண்டு திருக்கைகளிலும் வலப்பக்கத்தில் வரதம்-கொடி-கேடயம் - அங்குசம் - பாசம் - குலிசம் ஏந்திக் கொண்டு, இடப்பக்கத்தில் அபயம்-வாள் - சூலம் - சக்கரம் - முசலம் - வேல் என்பவற்றுடன் முருகன் காட்சி தரும் நிலேயே தாரகாந்தகர் என்னும் திருவுருவமாகும்.

(11) சேனுபதி :

முருகன் வீரர்களுக்கெல்லாம் பெரு வீரனுகை விளங்குபவன். வீரம் பெற விரும்புவோர் அனைவரும் முருகனை வழிபடு கடவுளாகக் கொண்டு போற்றுவர். 'வீரர்களுக்குள் யான் கந்தனுகத் திகழ்கின்றேன்' எனக் கீதையில் கண்ணபிரான் கூறியதாகப் பெரியோர் கூறுவர். மேலும் சூரபதுமன் முதலிய அசுரர்களை வெல்லுதற் பொருட்டுப் புறப்பட்ட தேவர்களின் படைகளுக்கு முருகனே தலைவனுக விளங்கினுன். சேனைக்குப் பதியாகத் திகழ்ந்ததனுல், 'சேனுபதி' 'சேனனி' என்னும் பெயர்கள் முருகனுக்கு அமைந்தன. தேவசேனுபதி,தேவர்களின் படைக்குத்தலைவன் எனவும், முருகனைப் பெரியோர்கள் வழங்குவர்.

ஆறு திருமுகங்களுடன், அபயம் முசலம் வாள் சூலம் அம்பு அங்குசம் என்பனவற்றை ஆறு வலக்கைகளிலும், வச்சிரம் வில் தாமரை மலர் பிரம்பு தண்டாயுதம் என்பனவற்றை ஆறு இடக்கைகளிலும் தாங்கிக் கொண்டு, அடியார்களின் துன்பங்களை நீக்கும் முருகன், சேனுபதி எனப் படுவான்.

(12) பிரம சாத்தன் :

சிவபெருமானை வணங்கப் பிரமன் ஒரு சமயம் திருக்கயிலைக்குச் சென்ருன். அங்கே வழியில் வீற்றிருந்த முருகனை மதியாது, எளிதாக எண்ணிச் செருக்குடன் அவரைக் கடந்து சென்ருன். அந்நிலையில் முருகன் வீரவாகு தேவரை ஏவிப் பிரமனைப் பிடித்துக் கொணருமாறு செய்து, அவனது பெயர்-தொழில் முதலியவற்றை உசாவிப் பிரணவப் பொருள் யாது?' என வினவினுர். அவன் கூற அறியாது மயங்கி நிற்க, அவன் செருக்கு அடங்குமாறு தலையிற் குட்டிச் சிறையில் அடைப்பித்தார்.

பின்னர் அவனது படைப்புத் தொழிலைத் தாமே செய்ய மேற்கொண்டருளினுர். இந்நிலையே பிரமசாத்தன் என்னும் திருவுருவமாகும். காஞ்சிபுரம் குமர கோட்டத்திலும், திருப்போரூர்க் கோயிலிலும் முருகன் இத்திருவுருவிலேயே எழுந்தருளி விளங்குகின்ருன். பிரமசாத்தன் என்னும் தொடர், பிரமனைத் தண்டித்தவர் எனப் பொருள் படும்.

இத்திருவுருவில் முருகன், ஒரு திருமுகமும், நான்கு கைகளும் உடையவனுகத் திகழ்வான். வலக்கைளில் அபய முத்திரையும், உருத்திராக்க செப மாலையும் இருக்கும். வரத முத்திரையும், கமண்டலமும் இடக்கைகளில் விளங்கும். கந்த புராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியர், குமரகோட்டத்தில் தாம் நாடோறும் பூசித்து வழிபட்ட இத்திருவுருவின் இயல்பினைப் பின்வரும் பாடலால் குறிப்பிட்டிருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

ஒரு கரம்தனில் கண்டிகை
  வடம்பரித்து, ஒருதன்
கர தலம்தனில் குண்டிகை
  தரித்து, இருகரங்கள்
வரதமோடு அபயம் தரப்
  பரம்பொருள் மகன், ஓர்
திரு முகம்கொடு சதுர்முகன்
  போல்விதி செய்தான்.

(13) வள்ளி கல்யாண சுந்தரர் :

முருகன் தெய்வயானையாருக்கும் கணவனுயினும், அவனை 'வள்ளி கணவன்' என்றே பெரும்பாலும் புலவர்கள் புகழ்ந்து போற்றுவர். முருகனுக்குத் தெய்வயானை கிரியா சத்தி என்றும், வள்ளியம்மை இச்சா சத்தி என்றும் நூல்கள் கூறும். களவு கற்பு என்னும் திருமண முறைகள் இரண்டினுள், தெய்வயானையின் திருமணம் கற்பு நெறிக் குரியது என்றும், வள்ளியம்மையின் திருமணம் களவு நெறிதழுவியது என்றும், அறிஞர்கள் கூறுவர்.

குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே

என்பது திருமுருகாற்றுப்படை. உலகில் இல்வாழ்க்கை இனிது நடத்தற்பொருட்டே முருகன் வள்ளியம்மையை மணந்து கொண்டு, அவளுடன் இனிதுறப் பேசி நகையமர்ந்தருள்கின்ருன் என ஞான நூல்கள் கூறும். இங்ஙனம் வள்ளியம்மையை மணந்து கொண்ட இனிய எழில் நிலையி

லுள்ள முருகனே, வள்ளி கல்யாண சுந்தரர் ஆவர்.

வலக்கையில் அபய முத்திரையும், உருத்திராக்க மணிவடமும் ஏந்தி, இடக்கைகளில் ஒன்றை வரத முத்திரையிலும் மற்றொன்றை இடுப்பிலும் அமைத்துக் கொண்டு ஒரு முகமுடையவராய், திருமால் தாரை நீர் வார்த்துக் கொடுக்க, வலப் பக்கமுள்ள வள்ளியை ஏற்று, மணந்து கொள்ளும் நிலையில், இத்திருவுருவம் எழிலுற அமைந்திருக்கும்.

(14) பாலசுப்பிரமணியர் :

முருகன் என்னும் சொல்லுக்கு இளமை உடையவன், அழகு மிக்கவன் என்பது பொருள். 'என்றும் இளையாய் அழகியாய்' எனப் புலவர் ஒருவர் முருகனைப் புகழ்ந்து துதித்திருத்தலைக் காணலாம். இளமையையும் அழகையும் விரும்பாதவர்கள் எவரும் உலகத்தில் இலர். முருகனை அன்புடன் வழிபட்டு வந்தால், இளமை அழகு முதலிய எல்லா நலங்களையும் பெற்று இன்புற்று வாழலாம் இளமையும் அழகும் இறைமையும் மிக்க நிலையில் விளங்கும் முருகனே, பாலசுப்பிரமணியர் எனப்படுவர். இவர் ஒரு திருமுகமும் இரண்டு திருக்கைகளும் உடையவராய் இருப்பர். இவர், வலக்கையில் தாமரை மலரை ஏந்திக் கொண்டு, இடக்கையை இடுப்பில் அமைத்திருப்பர். இவரைப் பாலசுந்தரம், பாலசுவாமி என்றும் பெரியோர் குறிப்பிடுவர். இவர், தம் திருவடிகளில் இளஞ் சிறுர்க்குரிய கிண்கிணி என்னும் சதங்கையை அணிந்திருப்பார்.

(15) கிரவுஞ்ச பேதனர் :

கிரவுஞ்சம் என்பது, சூரபதுமனின் தம்பியாகிய தாரகனுக்கு உறைவிடமானதும், மாயையில் வல்லதுமாகிய ஒரு மலையாகும். முருகன் தன் தம்பியும் துணைவருமாகிய வீரவாகு தேவரை நோக்கி, நீ தாரகனின் தலைநகரமாகிய மாயாபுரிக்குச் சென்று அவனை வென்று வருக! என்று பணித்தனர். அங்ஙனமே சென்ற வீரவாகு தேவரை எதிர்த்துப் போர் செய்ய முடியாமல், தாரகன் தன் தேரைவிட்டு இறங்கி ஓடி, கிரவுஞ்ச மலையின் உட்புகுந்து ஒளிந்தான். அந்நிலையில் அவனைப் பிடிக்கத் தொடர்ந்து சென்ற வீரவாகுதேவரும், அவர்தம் துணைவர்களும், அம் மாய மலையின் குகையிற் சிக்கி, இருளில் வழி தெரியாது திகைத்து, மயக்கமுற்றனர். அஃதறிந்த முருகப்பெருமான், தமது ஞானசக்தியாகிய வேலை ஏவி, அம்மலையைப் பிளந்து வீரவாகு தேவர்முதலியோரை விடுவித்துத் தாரகாசுரனைக் கொன்றனர். கிரவுஞ்ச மலையைப்பிளந்து அழித்த முருகனின் திருவுருவமே 'கிரவுஞ்ச பேதனர்' எனப்படும். இதனைச் சங்க நூல்கள் 'குருகுபெயர்க் குன்றம் கொன்றோன்' எனச் சிறப்பித்துப் புகழும். சங்க நூல்களுள் ஒன்ருகிய குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடல், இத்திருவுருவத்தைப் பற்றியதே ஆகும் என்பர். கிரவுஞ்சம் - அன்றிற்பறவை; அதன் வடிவாகிய மாயமலை. பேதனர் - பிளந்தவர்.

> தாமரை புரையும் காமர் சேவடி;
> பவளத் தன்ன மேனி; திகழொளிக்
> குன்றி ஏய்க்கும் உடுக்கை: குன்றின்
> நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்;
> சேவலங் கொடியோன் காப்ப,
> ஏம வைகல் எய்தின்ருல் உலகே.
>
> குறுந்தொகை, 1.

கிரவுஞ்ச பேதனர் ஆறுமுகமும் எட்டுக் கைகளும் உடையவர். வலக் கைகளில் வேல் வாள் பகழி அபயம் என்பவற்றையும், இடக்கைகளில் வச்சிரம் கேடயம் வரதம் வில் என்பவற்றையும் ஏந்திக் கொண்டு, எட்டுக்கைகள் உடையவராய் ஆறுமுகங்களுடன் இருப்பர்.

(16) சிகி வாகனர் :

முருகன் மயில் வாகனத்தை ஊர்தியாகக் கொண்டவன் என்பதுயாவரும் அறிந்தது. சிகி என்பது மயிலுக்குப் பெயர். அதனை வாகனமாகக் கொண்டவன் முருகன். முருகனுக்கு மயில் கொடியாகவும் இருக்கும். இதனை 'மணிமயில் உயரிய மாருவென்றிப் பிணிமுக ஊர்தி ஒண் செய்யோனும்' என வரும் சங்கப் பாடல்கொண்டு உணரலாம். சுத்த மாயை ஆகிய விந்து தத்துவமே, முருகனுக்கு மயிலாக விளங்குகின்றது. 'சால விந்து எனும் தடமா மயிலாய்! தாலோ! தாலேலோ!!' என்பது திருப்போரூர்ச் சந்நிதி முறை. மயில் தோகை விரித்தாடும் காட்சி ஓங்கார வடிவம் போன்றிருக்கும். முருகன் அத்தகைய மயிலின்மீது அமர்ந்து எழுந்தருளிக் காட்சி தரும் பேற்றையே, அருணகிரி நாதர் ''ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு தூங்கார்'' என அருளிச் செய்து போற்றியுள்ளார்.

இத்திருவுருவில், வலக்கைகளில் வேலும் அபயமும் தாங்கி, இடக்கைகளில் வரதமும் வச்சிரமும் உடையவராய், ஒரு திருமுகத்துடன், மயிலின் மீது முருகன் வீற்றிருப்பார்.

இந்தப் பதினறு திருவுருவங்களே அன்றி அக்கினி ஜாதர், சௌரபேயர், காங்கேயர், குகர், பிரமசாரி, தேசிகர் முதலிய திருவுருங்களும் சிற்ப நூல்களில் முருகனுக்குச் சொல்லப்படுகின்றன. ஆயினும் தணிகைப் புராணம் மேற்குறித்த 16 திருவுருவங்களையே சிறப்புற எடுத்து விளக்கியுள்ளது.

முடிவுரை :

இங்ஙனம் அடியார்களின் பொருட்டுப் பல திருவுருங்களை மேற்கொண்டு, அன்பர்களுக் கெல்லாம் அருள் புரிந்து வரும் முருகப் பெருமானின் திருவடிகளைப் பல காலும் பணிந்து பத்தி செய்து, பரவித் தொழுது, நாம் உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்



ஸ்ரீமத் பாம்பன் குமர குருதாச சுவாமிகள்



திருமுருகன்

# திரு இயமகப் பதிகத்தின் சிறப்பு

**முன்னுரை :**

திருஞான சம்பந்தர் அருளிய தேவாரத் திருமுறைகளில், தமிழிலக்கியங்களில் வேறு பிறிதெங்கும் காணப்பெறாத பலபல புதுவகைப் பாடல் அமைப்புகளை, முதன் முதலாகக் காணலாம். சங்க கால இலக்கியங்களுள், பெரும்பாலும் அகவற்பா வெண்பா கலிப்பா வஞ்சிப்பா முதலிய பாடல் வகைகளையே, நாம் பெரும்பாலும் காண்டல் இயலும். ஆனால் திருஞான சம்பந்தர் அருளிய திருமுறைகளிலோ, மொழிமாற்று மாலைமாற்று சக்கரமாற்று ஏகபாதம் எழுகூற்றிருக்கை கோமூத்திரி கூடசதுக்கம் முதலிய புதியபுதிய பாடல் அமைப்புக்களை, நாம் காண்கின்றோம். அவைகளுள் திருஇயமகம் என்னும் பதிக வகையும் ஒன்று.

**இயமகம் :**

'இயமகம்' என்பது, ஒரு செய்யுளின் கண் ஒருமுறை வந்த சொல்லையோ சீரை யோ அடியையோ, பின்னரும் பலமுறை திரும்பத் திரும்பப் பயின்று வருமாறு திறம் பட அமைப்பதாகும். இங்ஙனம் வந்த ஒரு சொல்லையோ சீரையோ, மடக்கி மடக்கிப் பின்னரும் பயின்று வரும்படி செய்யப் பெறுதலால், அத்தகைய செய்யுட்களைத் தமிழில் மடக்கு எனவும் வழங்குவர்.

**கலைத்திறன் :**

இத்தகைய இயமகம் அல்லது மடக்கு என்னும் செய்யுள் வகைகளை இயற்றும் ஆற்றல், கற்பனை நலன் செறிந்து, அற்புதத் திறன் மிக்க அரும் பெருங் கவிஞர்களுக்கே அமைவதாகும். ஓவியக் கலைஞனுக்கு வண்ணமும் தூரிகையும் போலவும், சிற்பக் கலைஞனுக்கு உளியும் கல்லும் போலவும், கவிஞர்களுக்குச் சொல்லும் பொருளும் கருவிகளாக விளங்குகின்றன. கருவிகளைத்தன் திறனுக்கு ஏற்பப் பலவேறு வகைகளிற் பயன்படுத்திக் கலைஞன் தன் கலைப் பொருள்களைக் கவின் மிகப்படைத்து உதவுகின்றான். அதுபோலவே ஒரு சிறந்த பெருங்கவிஞனும், தனக்குரிய சொல்லையும் பொருளையும், தன் கற்பனைத் திறனால் வெவ்வேறு பொருள்படுமாறு திறம்பட வழங்கித் தன் கவிதையினை எழிலுற இயற்றி யளிக்கின்றான்.

**'நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தர்' :**

ஒவ்வொரு சொல்லும், முதன் முதலாகக் கண்டு பிடிக்கப் பெறும் நிலையில், ஒரு சிறந்த அறிவொளித் துணுக்காக அமைகின்றது (1). அந்நிலையில், ஒரு சொல்லையே வேறுவேறு பொருள்படும் வண்ணம் அழகுறக் கையாளுதல், அதனிலும் சிறந் துயர்ந்த அரிய பெரிய கலைத்திறன் மிக்க செயலாகும். அவ்வாறு கையாளும் அரும் பெரும் ஆற்றல், ஒப்புயர்வற்ற வித்தகப் பெருங் கவிஞர்களுக்கே இயலும் (2). இனைய ஆற்றலில் நனிமிகச் சிறந்து விளங்குபவர் "நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தர்" பெருமானே யாவர்.

இதனை ஒருவகையில் திரு இயமகப் பதிகங்களும் சிறப்புற விளக்குகின்றன. திருக்கழுமலம், திருவாலவாய், திருவீழிமிழலை முதலிய தலங்களுக்குத் திருஞான சம்பந்தர் திருஇயமகப் பதிகங்கள் அருளிச் செய்துள்ளார்.

**திருக்கழுமலப் பதிகம் :**

அவற்றுள் முதற்கண்ணதாக விளங்குவது திருக்கழுமலம் பற்றிய பின்வரும் திருப்பதிகம் ஆகும். மதுரை சென்று சைவம் வளர்த்து மீண்டதன்பின், திருஞான சம்பந்தர் சீர்காழியை அடைந்து, அங்கே விளங்கும் திருத்தோணியப்பர் திருவடிகளைத் தொழுது, மகிழ்ந்து பாடியருளியது இப்பதிகம். இதன்கண் அவர் சீர்காழிக்குரிய 12 திருப் பெயர்களையும், தமது வழக்கப்படி, வரிசைநிலை பிறழாமல் முறையே விதந்தெடுத்துக் குறிப்பிட்டருளி யிருத்தல், கண்டு மகிழத் தக்கது.

—ஆசிரியர்.

(1) "Each word was, at first, a stroke of genius" —*Ralph Waldo Emerson.*

(2) The greatest authors in their most serious work, make frequent use of puns. The sermons of Bishop Andrews, and the tragedies of Shakespeare are full of them..." —*Joseph Addison, Spectator, 61.*

# திருஞான சம்பந்தர் அருளிச் செய்த

# திருஇயமகத் திருப்பதிகம் (உரை)

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே,
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே,
அற்றம் மறைப்பது முன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே,
பெற்று முகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே!

(பொழிப்புரை) உமையம்மையார் பொருந்திச் சேர்ந்திருப்பது நின் திருமேனியையே, சிவஞானிகள் உணர்ந்து வழிபடுவது நின்னுடைய அருளின் உண்மையினையே; கற்றறிந்த பெரியோர்கள் வெறுப்பது பிறன் காவலுக்குரிய மனைவியை விரும்புதலையே; நின்னுடைய நெருப்பு மயமான நெற்றிக்கண் சினந்து எரிப்பது மன்மதனையே; நினது மறைவிடத்தினை மறைத்துக் கொண்டு நிற்பது முன்னேயுள்ள பாம்பே; தேவர்கள் அனைவரும் இயற்றுவது உன்னுடைய திருத்தொண்டே; மகனைப் பெற்று வாரி எடுத்து, நீ அணைத்தது முருகனையே; இத்தகைய நீ, பிரமபுரம் என்னும் சீர்காழியினையே விரும்பியருளினாய்.

(குறிப்புரை) உமை - உமாதேவியார். மெய்-திருமேனி, உண்மை. கா+மனை-பிறன் காவலுக்குரிய மனைவி. காமன்+ஐ-மன்மதனை. அற்றம்-மறைவிடம். 'அற்றம் மறைத்தலோ புல்லறிவு' என்பது திருக்குறள். பணி-பாம்பு, தொண்டு. கந்தனை-முருகனை. உகந்தனை—விரும்பினாய். முகந்தது-வாரி எடுத்தது. (1)

சதிமிக வந்த சலந்தரனே
தடிசிரம் நேர்கொள் சலம்தரனே,
அதிரொளி சேர்திகி ரிப்படையால்
அமர்ந்தனர் உம்பர்துதிப் படையால்,
மதிதவழ் வெற்பது கைச்சிலையே
மருவிட மேற்பது கைச்சிலையே,
விதியினி லிட்டவி ரும்பரனே
வேணு புரத்தை விரும்பரனே!

(பொழிப்புரை) வஞ்சனை மிகும்படி எதிர்த்து வந்த சலந்தரன் என்னும் அசுரனை, அவனோடு ஒத்த வஞ்சனையுடன் மிக்க ஒளி பொருந்திய சக்கரப் படையினை உண்டாக்கி, அதனால் அவனது தலையை வெட்டி யருளியவனே! அது கண்டு மகிழ்ந்து தேவர்கள் உன்னைத் துதித்தலை மேற்கொண்டார்கள். சந்திரமண்டலத்தை அளாவிய மேருமலை, நின் கையில் ஏந்துதற்கு உரிய வில் ஆகும். கடலில் எழுந்த ஆலகாலவிடத்தினை உணவாக ஏற்றுக் கொள்வதை நீ வெறுக்கவில்லை. அறநூல்களில் விதித்த நெறி முறைகளின்படி உலக மக்கள் ஒழுகுவதில் விருப்பத்தையுடைய மேலான தலைவனே! வேணுபுரம் என்னும் சீர்காழியை விரும்புகின்ற சிவபெருமானே!

(குறிப்புரை) சதி-வஞ்சனை: சலந்தரன்-ஓர் அசுரன். சலம்+தரன்-வஞ்சனையைத் தரித்தவன். துதிப்பு+அடையால். திகிரிப் படையால்-சக்கரத்தினால். கைச்சிலை-கையில் உள்ள வில்; நீவெறுக்கவில்லை. கைத்தல் (கைச்சல்)-வெறுத்தல். 'கைத்திலை' என்பது'கைச்சிலை'என வந்தது. இட்ட(ம்)-விருப்பம். இரும்-பெரிய. பரன்-மேலானவன். விரும்பு+அரனே. அரன்-சிவபிரான். (2)

காதம ரத்திகழ் தோடினனே
கானவ னுய்க்கடிது ஓடினனே,
பாதம தாற்கூற் றுதைத்தனனே,
பார்த்தன் உடலம் புதைத்தனனே,
தாதவிழ் கொன்றை தரித்தனனே
சார்ந்த வினையது அரித்தனனே,
போதம் அமரும் உரைப்பொருளே
புகலி அமர்ந்தரம்பொருளே.

(பொழிப்புரை) திருச் செவிகளில் பொருந்த விளங்குகின்ற அழகிய தோட்டினை அணிந்தவனே! அருச்சுனன் பொருட்டு வேடுவனுக்கோலம் கொண்டு பன்றி வடிவில் வந்த மூகன் என்னும் அசுரனைக் கொல்லுவதற்கு வேகமாக ஓடியவனே! திருவடியினாற் கூற்றுவனை மார்க்கண்டேயர்க்காக உதைத்தவனே! பாசுபதக்கணை கொடுத்து அருச்சுனனின் உடம்பைக் கவசம் போலப் பாதுகாத்து மூடியவனே! மகரந்தம் சொரிகின்ற கொன்றை மலர்மாலையை அணிந்தவனே! அடியவர்களைச் சார்கின்ற வினைகளையெல்லாம் அழித்தொழிப்பவனே! ஆசாரியனின் ஞானம் நிறைந்த செவியறிவுறூஉப் பொருளாக விளங்குபவனே! புகலி என்னும் சீர்காழியை விரும்பி எழுந்தருளியுள்ள முழுமுதற் பெருமானே!

(குறிப்புரை) அமர-பொருந்த. தோடினன்-தோடு அணிந்தவன். கடிது+ஓடினன். பார்த்தன்-அருச்சுனன். உடலம்-உடம்பை. புதைத்தனன்-கவசத்தால் மூடினான். அரித்தனன்-அழித்தான். போதம்-ஞானம். உரை-உபதேசம். (3)

மைத்திகழ் நஞ்சுமிழ் மாசுணமே,
மகிழ்ந்தரை சேர்வது மாசுணமே,
மெய்த்துஉடல் பூசுவர் மேன்மதியே
வேதம தோதுவர் மேன்மதியே,
பொய்த்தலை யோடுஉறும் அத்தமதே
புரிசடை வைத்தது மத்தமதே,
வித்தகர் ஆகிய எங்குருவே
விரும்பி யமர்ந்தனர் வெங்குருவே.

(பொழிப்புரை) கரிய நிறம் பொருந்திய நஞ்சைக் கக்குகின்ற பாம்பே, நீ மகிழ்ச்சியுடன் இடுப்பில்அரைஞாணுகவும்கோவணமாகவும் சேர்த்து அணிந்து கொள்வது. சிறந்த திருநீற்றுப் பொடியையே சந்தனம் போன்று உடம்பு முழுவதும் பூசிக் கொள்வர். அவர்தம் சடையின் மீது அணிந்திருப்பது சந்திரனையே. மேலான அறிவைத் தரும் கருத்துக்களையே வேதம் முதலிய நூல்களால் ஓதியருளியவர். பொய்ம்மை கூறிய பிரமனின் தலைஓடு பொருந்தியிருப்பது தம்முடைய திருக்கையே. பின்னப் பெற்ற சடையின்கண் தரித்திருப்பது ஊமத்த மலரே. ஞான வடிவினர் ஆகிய எங்கள் குருவே! நீர் விரும்பி அமர்ந்திருப்பது வெங்குரு என்னும் பெயரையுடைய சீர்காழியே ஆகும்.

(குறிப்புரை) மாசுணம்-பாம்பு. மாசு(ண்)ணம்-பெருமை மிக்க திருநீறு. மெய்த்து-மெய்யின்கண் பூசப்படுவது ஆகிய சந்தனம். மதி-சந்திரன், அறிவு. அத்தம்-கை. மத்தம்-ஊமத்த மலர். எம்குரு-எங்களுடைய குருதேவர். வெங்குரு-சீர்காழி. (4)

உடன்பயில் கின்றவன் மாதவனே
உறுபொறி காய்ந்துஇசை மாதவனே,
திடம்பட மாமறை கண்டனனே
திரிகுண மேவிய கண்டனனே,
படங்கொள் அரவரை செய்தனனே
பகடுரி கொண்டரை செய்தனனே,
தொடர்ந்த துயர்க்கொரு நஞ்சுஇவனே
தோணி புரத்துறை நம்சிவனே.

(பொழிப்புரை) தம் திருமேனியின் ஒரு பகுதியில இருந்து உடன் பழகுகின்ற சிறப்புப் பெறறவன் திருமால். நம்மோடு பொருந்தியுள்ள ஐம்பொறிகளைக் காய்ந்து விலக்கி, மனம் இசைந்து ஒருமையுற்றுச் செய்யப்படும் பெரிய தவத்தினுல் அடையத் தக்கவன் அப் பெருமான். உயிர்கள் எல்லாம் நன்மைகள் பெறுமாறு சிறந்த வேதங்களைத் தோற்றுவித்தருளியவன். சாத்துவிகம் இராசதம் தாமதம என்னும் முக்குண வயப்பட்ட கொடியவர்களின் செயல்களை அழித்தான். படத்தினைக் கொண்ட பாம்பினை இடுப்பில் அணிந்தான். கஜாசுரன் என்னும யானையின் தோலையுரித்துப் போர்வையாகக் கொண்டு, அதனை அழித்தொழித்தான். தன் அடியவர்களைத் தொடர்ந்து நின்ற துன்பங்களை நீக்குதலில், அவற்றிற்கு ஒரு பெருங்கொடிய நஞ்சு ஆக இருபபவன். தோணிபுரம் என்னும் சீர்காழியில் உறைகின்ற நம்முடைய சிவன்.

(குறிப்புரை) மாதவன்- திருமால். மா+தவன்-பெரிய தவத்தின் பயனுக விளங்குபவன். கண்டனன்-உண்டாக்கியவன், கண்டித்து அழிப்பவன். பகடு-யானை. அரை செய்தனன் - இடுப்பில் அணிந்தான்; அரைத்துத் தேய்த்து அழித்தான். நஞ்சு+இவன். நம்+சிவன். (5)

திகழ்கைய தும்புகை தங்குஅழலே
தேவர் தொழுவதுந் தம்கழலே
இகழ்பவர் தாமொரு மான்இடமே
இருந்தனு வோடெழில் மானிடமே,
மிகவரு நீர்கொளும் மஞ்சுஅடையே
மின்நிகர் கின்றதும் அம்சடையே,
தகவிர தங்கொள்வர் சுந்தரரே
தக்க தராய்உறை சுந்தரரே.

(பொழிப்புரை) திகழ்கின்றகையில் ஏந்திய தூம் புகைதங்குகின்ற நெருப்பே! தேவர்கள் வணங்குவது திருவடிகளையே. இகழ்ந்தவர்கள் ஆகிய தாருகாவன முனிவர்கள் ஏவிய மான் இடக்கையில் உள்ளது. தகுதியுடைய அடியவர்களை ஆட்கொள்வதற்காக எழுந்தருள்வது சிறந்த மானிடத் திருமேனி கொண்டே. மிகுதியாகப் பெருகி வருகின்ற நீரைத் தம்மிடம் கொண்டுள்ள மேகங்கள் அடைந்து தங்கியிருப்பதும், மின்னலைப் போன்று ஒளி மிக்குத் திகழ்வதும் அழகிய சடையே. தகுதியாகச் செய்யப் பெறும் தவமும் நோன்புகளும் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டு அருள் புரியும் உலக முதல்வர், சிறந்த பூந்தராய் என்னும் சீர்காழியில் உறைகின்ற அழகர் ஆகிய சிவபெருமானே!

(குறிப்புரை) தங்கு + அழல். தம் + கழல். மான் + இடம். மானிடம்-மனித வடிவம். மஞ்சு + அடை. மஞ்சு-மேகம். அம் + சடை. சுந்தரர் - அழகர். (வ)சுந்தரர் - உலக முதல்வர். வசுந்தரை, பசுந்தரை-உலகம். பூந்தராய்-சீர்காழி. (6)

ஓர்வரு கண்கள் இணைக்குஅயலே,
உமையவள் கண்கள் இணைக்கயலே,
ஏர்மரு வுங்கழல் நாகமதே,
யெழில்கொள் உதாசனன் ஆகமதே;
நீர்வரு கொந்தள கங்கையதே,
நெடுஞ்சடை மேவிய கங்கையதே,
சோர்வரு யோகதி யம்பகனே
சிரபுர மேயதி யம்பகனே.

(பொழிப்புரை) தியானித்தல் இல்லாத புறக்கண்கள் இரண்டிற்கும் அப்பாற்பட்டவர். உமையம்மையின் கண்கள் கயல் மீன்கள் போல்வன. அழகு பொருந்திய கழல் என்னும் கால் அணியாகத் திகழ்வது பாம்பே. எழுச்சி கொண்ட அக்கினியே திருமேனியாக விளங்குவது. நீர்மை பொருந்திய கொத்தான கூந்தலானது ஒழுங்காக உள்ளது. நீண்ட சடையின் மேல் இருப்பது கங்கையாறே. சேர்தற்கு அரிய யோக நிலையில் மூன்று கண்களை யுடையவன். சிரபுரம் என்னும் சீர்காழியில் மேவியுள்ளவன். தீயை அம்பாகக் கையிற் கொண்டிருக்கும் சிவபெருமான்.

(குறிப்புரை) ஓர்வு + அரு - தியானித்தல் இல்லாத. இணைக்கு + அயல் - இரண்டிற்கும் அப்பாற்பட்டவர். இணை + கயல் - இரண்டு கயல் மீன்கள் போன்றவை. இணைக்கு + அயல். இணை + கயல். நாகம் - பாம்பு. ஆகம் - உடம்பு. உதாசனன் - அக்கினி. நீர்வரு - நீர்மையுடைய, அழகு பொருந்திய. கொந்து + அளகம் + கையது- கொத்தான கூந்தல் ஒழுங்காக உள்ளது. கை - ஒழுங்கு. தியம்பகன் (திரியம்பகன்) - மூன்று கண்களையுடையவன். தியம்பகன் (தீ + அம்பு + அகன்) - தீயை அம்பாகக் கையிற் கொண்டிருப்பவன், சிவபெருமான். (7)

ஈண்டு துயில்அமர் அப்பினனே,
இருங்கண் இடந்து அடி அப்பினனே;
தீண்டல் அரும் பரிசு அக் கரமே,
திகழ்ந்தொளி சேர்வது சக்கரமே;
வேண்டி வருந்த நகைத்தலையே,
மிகைத்தவ ரோடு நகைத்தலையே
பூண்டனர்; சேரலும் மாபதியே,
புறவம் அமர்ந்த உமா பதியே.

(பொழிப்புரை) இவ்வுலகில், அப்பு (நீர்) ஆகிய கடலின்கண் விரும்பித் துயில்கின்றவன் ஆகிய திருமால், தன்னுடைய பெரிய (தாமரை மலர் போன்ற) கண்ணைத் தோண்டி, நின் திருவடிகளில் அப்பி வழிபட்டான். தீண்டுதற்கு அரிய தன்மையை யுடைய அந்தக் கையில், ஒளி மிகுந்து சேரப் பெற்றது சுதர்சனம் எனும் சக்கரம் ஆகும். தாருகாவன முனிவர்கள் விரும்பி வருந்தி முயன்று வேள்வியினின்று வருவித்தது, நகைக்கின்ற வெண்தலையையே; பகைத்துநின்ற அம் முனிவர்களையே நகைத்து ஏளனம் செய்வது போல, அவ் வெண்தலையைச் சிவபெருமான் ஏற்று அணிந்து கொண்டனர். புறவம் என்னும் பெயருடைய சீர்காழியை விரும்பிய உமையம்மையின் கணவர் ஆகிய இறைவன், சேர்ந்து உறைவது அன்பர்களின் உள்ளம் ஆகிய சிறந்த இடமே யாகும்.

(குறிப்புரை) அப்பு-நீர், கடல். அப்புதல் - சார்த்துதல். இடந்து - தோண்டி. மிகைத்தவர்-செருக்கினுற் பகைமைகொண்டவர்கள். பரிசு+அ+கரமே. சேரலும்+மா+பதியே. உமா+பதியே. மாபதி-சிறந்த இடம். உமாபதி-உமாதேவியின் கணவர். (8)

நின்மணி வாயது நீழலையே,
நேசம தானவர் நிழலையே;
உன்னி மனத்தெழு சங்கமதே.
ஒளி அதனேடு உறு சங்கமதே;
கன்னி யவரைக் கவரும் களனே,
கடல்விடம் உண்ட கருங்களனே;
மன்னி வரைப்பதி சண்பையதே,
வாரி வயல்மலி சண்பையதே.

(பொழிப்புரை) நின்னுடைய, மணிகள் கட்டிய கோயில் வாயிலின் குளிர்ச்சியையே விரும்பி நிற்கும் அடியவர்களுக்கு, நீ சிறிதும் தொலைவிற் செல்லாமல், அவர்களின் அருகிலேயே இருப்பாய், நின் திருவடியினை உள்ளத்தில் எண்ணி வழிபடுகின்ற அடியவர்களே, திருவருள் ஒளியிற் பொருந்துகின்ற திருக்கூட்டம் ஆவர். பக்குவம் உற்ற ஆன்மாக்கள் ஆகிய கன்னிப் பெண்களின் உள்ளங்களைக் கவர்ந்து கொள்ளுகின்ற கள்வனே! கடலில் தோன்றிய ஆலாலம் என்னும் நஞ்சினை யுண்டதனுல், நீலநிறம் பெற்ற கழுத்தை யுடையவனே! நிலைபெற்றுத் தங்கி, நீ நினக்கே உரியதாக வரைந்து கொண்டதிருத்தலம், சண்பங்கோரைகள் நிறைந்து, வளம் மிகுந்தவயல்கள் சூழ்ந்த, சண்பை என்னும் பெயருடைய சீர்காழியே யாகும்.

(குறிப்புரை) அடியவர்கள் இறைவனின் கோயில் வாயிலையே தம் புகலிடமாக விரும்புவர். ஆதலின் 'நின் மணி வாயது நீழலையே நேசமதானவர்' என்று சம்பந்தர் அடியவர்களைச் சிறப்பித்தார். ''புலையனேனை உன் கோயில் வாயிலிற் பிச்சன் ஆக்கினுய், பெரிய அன்பருக்கு உரியன் ஆக்கினுய்'' என்று மாணிக்க வாசகர் அருளிச் செய்திருத்தலும் காண்க. சங்கம்-திருக்கூட்டம். முன்னையது 'சங்கமம்' என்பதன் சிதைவு; அடியார் என்பது பொருள். 'களன்' கள்ளன் என்பதன் இடைக்குறை. கருங்களன்-நீலகண்டம். களன்-கழுத்து. சண்பை-சண்பங்கோரை; சீர்காழி. (9)

இலங்கை அரக்கர் தமக்கு இறையே,
இடந்து கயிலை எடுக்கிறையே;
புலன்கள் கெட, உடன் பாடினனே;
பொறிகள் கெட உடன்பாடினனே:
இலங்கிய மேனி இராவணனே,
எய்து பெயரும் இராவணனே;
கலந்தருள் பெற்றது மாவசியே,
காழி அரன்அடி மாவசியே,

(பொழிப்புரை) இலங்கையில் இருந்த அரக்கர்களுக்கு அரசன், கயிலை மலையைச் சிறிதே பெயர்த்து எடுக்க முயல, இறைவன் தன் பெருவிரல் நகநுதியால் மெல்லென ஊன்றலும், தன் வலிமை யனைத்தும் அழிதலால், உடனே அவன் இறைவனைத் துதித்துப் பாடினன். இறைவனும், அவ்வரக்கர் கோமான் பொறிகள் கெட்டுச் செருக்கொழிந்ததனுல், அவனது இசையை அப்போதே உவந்து ஏற்று, அவனுக்குத் திருவருள் புரிந்தான். இரவின் வண்ணம் போன்று கரிய நிறம் உடைய அவ்வரக்கன், அடைந்த பெயரும் இராவணன் என்பதாகும். இறைவனின் திருவருளிற் புகலிடம் அடைந்து, அவன் பெற்றது பெரியதொரு வாள்! காழி என்னும் தலத்தில் உள்ள சிவ பெருமானின் திருவடிகள் மிக்க கவர்ச்சி (அழகு) உடையன.

(குறிப்புரை) இறை-அரசன்; சிறிதளவு. உடன்+பாடினன்-உடனே துதித்தான். உடன் பாடினன்-உடன்பட்டான், இசைந்தான். இரா+வண்ணன்-இரவைப் போன்ற கரிய நிறம்உடையவன். இராவணன்-அழுதலைச் செய்தவன். இராவணம்-அழுதல். வசி-வாள், கவர்ச்சி. (10)

கண்நிகழ் புண்டரி கத்தினனே,
கலம்திரி புண்டரி கத்தினனே;
மண்நிக ழும்பரிசு ஏனம்அதே,
வானகம் ஏய்வகை சேனமதே;
நண்ணி அடிமுடி எய்லதரே,
நளிர்மலி சோலையில் எய்து அலரே;
பண்ணியல் கொச்சை பசுபதியே
பசுமிக ஊர்வர் பசுபதியே.

(பொழிப்புரை) தாமரை போன்ற கண்களை யுடைய திருமால், அவர்தம் உந்தித் தாமரையில் உதித்த பிரமன் ஆகிய இருவரும், மண்ணைத் தோண்டிச் செல்லும் தன்மையில் பன்றியாயும், வானகத்தைப் பொருந்தி ஆராயும் வகையில் அன்ன

மாயும் உருக்கொண்டு தேடியும், நின்னுடைய திருவடியையும் திருமுடியையும் அடையப் பெற்றிலர். குளிர்ச்சி மிக்க சோலைகளில் உள்ள மலர்களும், இனிய பண்களும் விளங்குகின்ற கொச்சைவயம் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவர், உயிர்களுக்கெல்லாம் தலைவராதலின் பசுபதி எனப்படுவார். பசுவாகிய காளை மாட்டின் மீது ஊர்ந்து செல்லுதலாலும், அவருக்குப் பசுபதி என்னும் பெயர் பொருந்துவதாகும்.

(குறிப்புரை) புண்டரிகம் - தாமரை. தாமரை போன்ற அழகிய கண்கள் உடைமையால் திருமாலுக்கும், அவர்தம் திருவுந்தியிற் கிளைத்த தாமரை மலரில் தோன்றிய தனுல் பிரமனுக்கும், புண்டரிகத்தன் என்பது பெயராயிற்று. பரிசு+ஏனம். ஏனம்-பன்றி. சேனம்-பருந்து, கழுகு. அஃது ஈண்டுப் பறவையாகிய இன இயைபு பற்றி அன்னத்தைக் குறித்தது. எய்தலர் (எய்து+அல்+அர்) - அடையாதவர்கள். எய்து+அலர்-எய்துகின்ற மலர்கள். பசுபதி-உயிர்களுக்குத் தலைவர். 'பசு' என்னும் சொல் ஈண்டுக் காளைமாட்டைக் குறித்தது. "பல பல வேடம் ஆகும் பரன், நாரிபாகன், பசு ஏறும் எங்கள் பரமன்" என்னும் கோளறு பதிகப் பாடல் காண்க. (11)

பருமதில் மதுரைமன் அவைஎதிரே,
பதிகமது எழுதுஇலை அவைஎதிரே;
வருநதி இடைமிசை வருகரனே,
வசையொடும் அலர்கெட அருகுஅரனே;
கருதலில் இசைமுரல் தரும்மருளே,
கழுமலம் அமர்இறை தரும்அருளே;
மருவிய தமிழ் விரகன மொழியே,
வல்லவர் தம்இடர் திடம்ஒழியே.

(பொழிப்புரை) பருத்த கனமான மதில்களால் சூழப் பெற்ற மதுரை மாநகர்க்கு, அரசனுகிய பாண்டியனின் அவைக் களத்துள்ளோர் முன்னிலையில், பதிகம் எழுதப் பெற்ற ஓலைகளானவை, வைகை யாற்றின் கண் எதிரேறிச் செல்லும்படி செய்தருளியவனே! புறச் சமயத்தவர் கூறும் வசையும் பழிகளும் ஒழியும்படி அருகர் ஆகிய சமணர்களை அழித்தவனே! எண்ணுதற்கு இயலாத சிவநெறியின் புகழானது, எங்கும் பரவி ஒலிக்கும்படி நீ செய்வித்தது, மிக்க வியப்பே யாகும். கழுமலம் என்னும் சீர்காழியை விரும்பி எழுந்தருளியுள்ள சிவபெருமான், திருவருளே புரிந்து நலம் செய்வார். அத்திருவருளைப் பொருந்திய தமிழ் விரகனது மொழியாகிய இத்திருப்பதிகத்தை, ஓதியுணர்ந்து இறைவனை வழிபட வல்லவர்களின் துன்பங்கள் ஒழிவது உறுதியாகும்.

(குறிப்புரை) மதுரைமன் - பாண்டியன். அவை எதிரே-அவைக்களத்தில் உள்ள சான்றோர்களின் முன்னிலையில். எழுது+இலை+அவை - எழுதப்பெற்ற ஓலைகளானவை. 'பதிகம்' என்றது, 'வாழ்க அந்தணர்' எனத் தொடங்கும் திருப்பாசுரப் பதிகத்தைக் குறிக்கும். வரு+கரன்-வருவித்த செய்கையை உடையவன். கரம்-செய்வது, கை. வசை-இழி சொற்கள். அலர்-பழிச் சொற்கள். அருகு+அரனே-அருகர் ஆகிய சமணர்களை அழித்தவனே. அரன்-அழிப்பவன். இசை-புகழ். மருள்-வியப்பு. தரும்+அருளே-திருவருளே புரிவார். தமிழ் விரகன்-தமிழில் ஆர்வம் மிகுந்தவன்; இது ஞானசம்பந்தருக்கு ஒரு திருப்பெயராக வழங்கும். 'தமிழ்+விரகன்+அ+மொழி' என்னும் தொடரில், அகரம் ஆறும் வேற்றுமை உருபு. 'மொழி' என்பது ஈண்டு இத்திருப்பதிகத்தைக்குறித்தது. இடர்-துன்பம். 'திடம்+ஒழி+ஏ' ஏகாரம் ஈற்றசை. 'ஒழி'-ஒழிதல்; முதல் நிலைத்தொழிற்பெயர். 'இடர்திடம் ஒழியே'-'இடர்கள் ஒழிதல் திடம்'; துன்பங்கள் நீங்குதல் நிச்சயம் என்பது கருத்து. (12)

# விடை தெரியுமா?

(1) “சாரம் கொண்ட சைவ சித்தாந்தம்” என்னும் அரிய தொடரை அருளிச் செய்தவர் யார்? அவ்வுருவகத்தின் கருத்தைக் குறிப்பிடுக.

(2) ‘‘ஒளியான திருமேனி உமிழ்தானம் மிகமேவு
களியார வரும் ஆனை கழல் நாளும் மறவாமல்
அளியாளும் மலர்தூவும் அடியார்கள், உளமான
வெளியாகும்; வலிதாய வினைகூட நினையாவே’’.

என்னும் பாடலின் நுண்பொருள்களைப் புலப்படுத்துக.

(3) ‘‘எட்டுக் கொண்டார் தமைத் தொட்டுக் கொண்டே நின்றார்
விட்டார் உலகம்என்று உந்தீபற
வீடே வீடாகும் என்றுந்தீ பற’’

என்னும் செய்யுளில் எட்டுக் கொண்டார், தொட்டுக் கொண்டே நின்றார் என்னும் தொடர்களின் பொருளை விவரிக்க.

(4) தேவாரப்பாடல் பெற்ற தலங்களில் திருவண்ணாமலைக்கு உள்ள தனிப்பெரும் சிறப்பு யாது?

(5) “தொண்டை நாடு சேர நாட்டுடன் மைத்துனக் கேண்மை பூண்டது” என்னும் செய்தி, யாரால், எந்த நூலில் கூறப்பட்டுள்ளது? தெளிவுறுத்துக.

(6) திருவாசகத்தில் மிகவும் ஈடுபாடு கொண்ட இராமலிங்க அடிகளார், அத் திருவாசகத்திலேயே தனிச் சிறப்புடையதாக விதந்து ஓதிப் புகழ்ந்த பகுதி எது? அங்ஙனம் புகழ்ந்தமைக்குக் காரணம் என்ன?

7. ‘‘பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருகணிள மூங்கில் வாங்கி—அருகிருந்த
தேன் கலந்து நீட்டும் திருவேங்கடங் கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை’’

என்னும் பூதத்தாழ்வார் பாசுரத்திற்கு அனந்தாழ்வான் என்பவர் விளக்கிய உள்ளுறைப் பொருள் யாது?

8. தாங்கரும்போர் மாலிபடப் பறவை யூர்ந்து
தராதலத்தோர் குறைமுடித்த தன்மை யானை,
ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்பு கூரும்
அடியவர்கட் காரமுத மானான் தன்னை,
கோங்கரும்பு சுரபுன்னை குரவார் சோலைக்
குழாவரிவண் டிசைபாடும் பாடல் கேட்டு,
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே.

என்னும் திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமொழிப் பாசுரத்தில், கோடிட்ட பகுதியில் அமைந்துள்ள அரும் பொருளை விளக்குக.

—ஆசிரியர்.

[விடை: மறுபுறம் காண்க.]

# விடை விளக்கம்

(1) "சாரம் கொண்ட சைவ சித்தாந்தம்" என்னும் அரிய தொடரை அருளிச் செய்தவர் குமர குருபர அடிகள். தமது ஞானசிரியரும் தருமையாதீனத்தின் நான்காம் குருமுதல்வரும் ஆகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் மீது, குமரகுருபரர் பாடியருளிய பண்டார மும்மணிக்கோவை என்னும் நூலில், இத்தொடர் அமைந்துள்ளது.

பிரணவம் (சுத்த மாயை) என்னும் வயலின் நடுவே, அருளாகிய விதையை விதைத்து, இரக்கமாகிய நீரைப் பாய்ச்சி, இறைவன் வேதமாகிய மரத்தை வளர்த்தான். அம்மரத்தின் வாயிலாகக் கிடைக்கப்பெறும் இலை தளிர் அரும்பு மலர் பிஞ்சு காய் என்னும் பயன்கள் பல. அவற்றுள் தார்க்கிகர் இலையையும், மீமாம்சகர் தளிரையும், சாங்கியர் அரும்பையும், யோகர் மலரையும், பாஞ்சராத்திரர் பிஞ்சையும், ஏகான்ம வாதியர் காயையும் கொய்து உவப்புற்றனர், அம்மரத்தின் உச்சியாகத் திகழ்வன, வேதாந்தம் என்னும் உபநிடதங்கள். அந்த உச்சியில் பழுத்த பழம், சிவாத்துவித வேதாந்தம் என்னும் சைவ உபநிடதத் தொகுதி. அப்பழத்தின் சாரமாக அமைந்திருப்பதே சைவ சித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கை. இத்தகைய சைவ சித்தாந்தம் என்னும் அரும் பெரும் தத்துவக் கொள்கையினை, ஆராய்ச்சி- அநுபூதி என்னும் இருவகை நெறிகளாலும் அறிந்து அநுபவித்து உணர்ந்து பயன் அடையும் பேறு பெறுபவர்கள், மிகச் சிலரே யாவர்.

இங்ஙனம் தமிழகத்துச் சைவ சித்தாந்தக் கொள்கையின் அருமை பெருமைகளைக் குமரகுருபர அடிகள் பின்வருமாறு விளக்கி யருள்கின்றார்.

''மாநிலம் புரக்கும் மாசி லாமணி
ஞான சம்பந்த ஞான தேசிக !
நல்லருள் திறத்தால் நம்பி, நீயே
பல் லுயிர்த் தொகுதியும் பயன்கொண்டு உய்கெனக்
குடிலை என்னும் தடவயல் நாப்பண்,
அருள் வித்து இட்டுக், கருணைநீர் பாய்ச்சி,
வேதம் என்னும் பாதவம் வளர்த்தனை;
பாதவம் அதனில் படுபயன் பலவே;
அவற்றுள்,
இலைகொண்டு உவந்தனர் பலரே; இலைஒரீஇத்
தளிர்கொண்டு உவந்தனர் பலரே; தளிர்ஒரீஇ
அரும்பொடு மலர்பிஞ்சு அரும்காய் என்றிவை
விரும்பினர் கொண்டுகொண்டு உவந்தனர் பலரே;
அவ்ஆறு உறுப்பும் இவ்வாறு பயப்ப,
ஒரும் வேதாந்தம் என்று உச்சியில் பழுத்த
ஆரா இன்ப அரும்கனி பிழிந்து, அதன்
சாரம் கொண்ட சைவ சித்தாந்தத்
தேன்அமுது அருந்தினர் சிலரே.''

— பண்டார மும்மணிக் கோவை.

(2) இப்பாடல், சைவ சித்தாந்த நூல்கள் பதினுன்கனுள் ஒன்ருகிய சிவப் பிரகாசம் என்னும் நூலின் காப்புச் செய்யுளாகும்.

ஒளி பொருந்திய திருமேனியையும், பெருகுகின்ற விழைவு அறிவு செயல் என்னும் ஆற்றலாகிய மதநீரையும் கொண்டவராய், மிகவும் பொருந்துகின்ற பேரின்பக் களிப்பு நிரம்புமாறு எழுந்தருள்கின்ற விநாயகராகிய யானையின் திருவடிகளை மறவாமல், அன்பு கொல்லாமை புலனடக்கம் வாய்மை பொறை அருள் அறிவு தவம்என்னும் மலர் களைத் தூவி நாள்தோறும் வழிபடும் அடியார்களின் உள்ளமானவை, ஞானப் பேரொளியின் வண்ணமாகும். கொடிய தீவினைகள், அவர்களை அணுக நினைப்பதற்கும் அஞ்சி நீங்கி அகன்ருெழியும் என்பது இப்பாடலின் பொருள்.

இதன்கண் கழல்நாளும் மறவாமல் என்பது **ஆன்மதரிசனம்**; உளமான வெளி யாகும் என்பது **ஆன்ம சுத்தி**; வினை கூடநினையா என்பது **ஆன்ம லாபம்**. ஞானம் பற்றல், பணிநீத்தல், நேயத்தழுந்தல் என்பவை, இம்மூன்றனுள் அடங்கும்.

ஒளியான திருமேனி என்பது **சிவரூபம்**; களியார வரும் ஆனை என்றது **சிவதரி சனம்**; அடியார்கள் உளமான வெளியாகும் என்பது **சிவயோகம்**; வினை கூட நினையா என்பது **சிவபோகம்**. எனவே இப்பாடலில், 'தசகாரியம்' எனப்படும் பத்தும் உணர்த்தப் பெற்றன எனலாம். இஃது இப்பாடலின் உள்ளே அமைந்துள்ள நுண்பொருள் ஆகும்.

(3) ''எட்டுக்கொண்டார் தமைத் தொட்டுக் கொண்டே
நின்ருர்
**விட்டார் உலகம்என்று உந்தீபற**
**வீடே வீடாகும் என்றுந்தீ பற''**

என்பது, திருவுந்தியார் என்னும் சைவ சித்தாந்த நூலில் வரும் ஒரு திருச்செய்யுள். இதன்கண் **'எட்டுக் கொண்டர்ர்'** என்பது இறைவனைக் குறிக்கும். இறைவன் நிலம் நீர் நெருப்பு காற்று விசும்பு சந்திரன் சூரியன் ஆன்மா என்னும் எட்டுப் பொருள்களாக விளங்குகின்ருன். இதனை,

''நிலம்நீர் நெருப்பு உயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன்
புலனுய மைந்தனேடு எண்வகையாய்ப் புணர்ந்து
நின்ருன்
உலகேழ் எனத்திசை பத்தெனத் தான்ஒருவனுமே
பலவாகி நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ.''

எனவரும் திருவாசகப் பாடலும் உணர்த்தும். இறைவன் இங்ஙனம் எண்வகைப் பொருளாய்ப் புணர்ந்து நிற்கும் நிலையே **''அட்ட மூர்த்தம்''** என்பது. "தொட்டுக் கொண்டே நிற்றல்'' ஆவது, இடைவிடாது நினைத்துத் தியானித்துத் தொடர்பு கொண் டிருத்தல். இதனை ''நாயகன் சேவடி தைவரு சிந்தை'' எனப் பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமானும் குறிப்பிட்டருளுவர். இறைவனை இடைவிடாமல் நினைத்துத் தியானித்து, அதனுல் அவனுடன் தொடர்பு கொண்டிருப்பவர்கள் உலகப் பற்றிலிருந்து விடுபடுவர். "அற்றது பற்றெனில் உற்றது வீடு'' என்றபடி. அங்நிலையே அவர்களுக்கு வீடுபேறு கைகூடும். அவர்கள் சீவன் முத்தர்களாக விளங்குவர் என்பது இப்பாடலின் கருத்து.

(4) தேவாரப்பாடல் பெற்ற தலங்களில் திருவண்ணமலைக்கு ஒரு தனிப்பெரும் சிறப்பு உண்டு. திருஞான சம்பந்தர் எத்துணையோ பல தலங்களுக்குச் (219) சென்று வழிபட்டுள்ளார். ஒவ்வொரு தலத்தையும் குறித்து, அதனதனைப் பற்றிய திருப்பதிகத்

திலேயே போற்றிப் புகழ்ந்து பாடுவார். ஆனால் திருவண்ணாமலையை மட்டும், எந்தத் தலத்திற்குச் சென்று எந்தத் திருப்பதிகம் பாடினாலும் மறவாமல் நினைவு கூர்ந்து குறிப்பிட்டுப் பாடியருளுவார். திருஞான சம்பந்தரின் திருப்பதிகங்களில் ஒரு சிலவற்றைத் த்விரப் பெரும்பாலானவற்றில் 8-ஆம் பாட்டில் இராவணன் வரலாற்றையும், 9-ஆம் பாட்டில் திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிய வரலாற்றையும், 10-ஆம் பாடலில் சமண பௌத்தர்கள் பற்றிய குறிப்புக்களையும் அமைத்துப் பாடியருள்வார். இவ்வாறு ஒவ்வொரு தலத்தின் திருப்பதிகத்திலும் 9-ஆம் பாடலில் அடிமுடி தேடிய வரவாற்றை மறவாமல் குறிப்பிட்டுப் பாடியிருத்தலால், அவ்வரலாற்றுக்குரிய தலமாகக் கருதப்படும் திருவண்ணாமலையைத் திருஞான சம்பந்தர், தாம் வேறு எந்தத்தலத்துக்குச் சென்றாலும் நினைவு கூர்ந்து துதித்துப் போற்றியருளினார் எனக் கொள்ளலாம். இதனைப் பின்வரும் சிவப்பிரகாச சுவாமிகள் பாடலும் வலியுறுத்துதல் அறிந்து மகிழத் தக்கது.

கூம்புறு கரமும், மலர்ந்திடு முகமுங் கொண்டு, நின்றனை வலம்புரிவோர்
மேம்படு சரண மலர்ப்பொடி, மேனி மேற்படிற் பவம் பொடிபடுமே!
பூம்பொழிற் புகலிக் கிறைவன் நானிலஞ்சேர் புண்ணியத் தலங்களி னடைந்து
தாம்புனை பதிகந் தொறும் புகழ் சோண சைலனே கைலை நாயகனே.

(5) தொண்டை நாடு சேர நாட்டுடன் மைத்துனக் கேண்மை பூண்டது என்னும் செய்தியைச் சேக்கிழார் அடிகள், தமது பெரிய புராணத்தில் பின்வரும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

"ஆணையாம் என நீறுகண்டு அடிச்சேரன் என்னும்
சேனுலாவு சீர்ச்சேரனார் திருமலை நாட்டு
வாணிலாவு பூண்வயவர்கள் மைத்துனக் கேண்மை
பேண நீடிய முறையது பெருந்தொண்டை நாடு."

இதன்கண் சேக்கிழார் சுவாமிகள், மிகப் பழைய அரிய வரலாற்றுக் குறிப்பொன்றை வெளியிட்டருளுகின்றார். ஒரு காலத்தில் சேர நாட்டில் கலகம் உண்டாயிற்று. அதனால் அந்நாட்டு மக்கள் அதனைவிட்டு நீங்கிப் பலதிசைகளிலும் சிதறிச் சென்று வாழத் தலைப்பட்டனர். அவர்களுள் ஒரு வணிகப்பெண், தொண்டை நாட்டை அடைந்து, அங்கே வேளாளர் ஒருவர் வீட்டில் அடைக்கலம் புகுந்து, அவர்களால் தமது பெண்போல அன்புடன் வளர்க்கப்பட்டு வந்தாள். சிலகாலம் சென்றபின், சேர நாட்டில் கலகம் தீர்ந்து, அமைதி ஏற்பட்டது. அப்போது, அவ்வணிகப் பெண்ணின் உறவினர்கள் அவளைப் பல இடங்களிலும் தேடி அலைந்தனர். பின்னர் அவள் இருக்கும் இடம் அறிந்து வந்து, அவளைத் தம்முடன் அழைத்துச் செல்ல விரும்பினர். அந்நிலையில், தொண்டை நாட்டைச் சேர்ந்த அவ்வேளாளர், தாம் வளர்த்து வந்த அப்பெண்ணைத் தம்முடைய பெண் என்றே கருதி, அவளுக்கு வரிசைகள் பல அளித்துச் சிறப்பித்து, உரிய முறைமகனுக்கு மணம் செய்வித்து, அன்புடன் அனுப்பி வைத்தனர். அதனால் சேர நாட்டினர், தொண்டை நாட்டினருடன் மைத்துனக் கேண்மை பூண்டு உறவு உரிமை பாராட்டி மகிழ்ந்தனர். இச் செய்தியைப் பின்வரும் தொண்டை மண்டல சதகப்பாடலும் குறிப்பிடுதல் காணலாம்.

"கொத்தலர் கோதை வியன்சேர மண்டலக் கொம்பைத்தம்பால்
வைத்திருந்து, ஆங்கவள் தன்கேளிர் தேடி வர, அவர்க்கே
உய்த்து, இருவோர்க்கும் வரிசையும் ஆற்றி, உடனும் சென்று,
மைத்துனக் கேண்மை படைத்தது அன்றோ தொண்டை மண்டலமே."

— படிக்காசுப் புலவர்.

மிகப் பழங்காலத்தில், பல்லவப் பேரரசு தோன்றுதற்கு முன்பெல்லாம், தொண்டை நாடு சோழர்களின் ஆட்சியிலேயே இருந்து வந்தது. சோழ வேந்தர்கள்

சேர வேந்தர்களோடு மைத்துனக் கேண்மை கொண்டிருந்தனர் என்னும் செய்தியைச் சிலப்பதிகாரம் பல இடங்களில் குறிப்பிடுகின்றது. சேரன் செங்குட்டுவன், தனது மைத்துனனாகிய கிள்ளிவளவன் என்னும் சோழ மன்னனுக்கு உதவியாகச் சென்று, அவனுக்குத் தொல்லை விளைத்துக் கொண்டிருந்த ஒன்பது மன்னர்களை, நேரிவாயில் ,என்னும் இடத்தில், நிகழ்ந்த போரில் வெற்றி கொண்டான் எனச், சிலப்பதிகாரம் கூறுதலும் நாம் இங்கு அறியத்தகும்.

"மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொறாஅர் ஏவல் கேளார்
வளநாடு அழிக்கும் மாண்பினர் ஆதலின்
ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்து, அவன்
பொன்புனை திகிரி ஒருவழிப் படுத்தோய்."

— சிலப்பதிகாரம்,
நீர்ப்படைக்காதை, 118—123.

(6) திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் வடலூர் இராமலிங்க அடிகளார். திருவாசகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என்பது அனைவரும் அறிந்த செய்தி, திருவாசகத்தினுள்ளும் திருவண்டப்பகுதி என்னும் திருஅகவலில், இராமலிங்க அடிகளார்க்குத் தனிப்பெரும் சிறப்பு நிலையில் மிக்க ஈடுபாடு இருந்ததெனத் தெரிகின்றது.

"உருவண்டப் பெருமறைஎன்று உலகமெலாம் புகழ்கின்ற
திருவண்டப் பகுதியெனும் திருவகவல் வாய்மலர்ந்த
குருவென்றெப் பெருந்தவரும் கூறுகின்ற கோவேநீ
இருவென்றத் தனியகவல் எண்ணமெனக்கு இயம்புதியே"

என்னும் திருவருட்பாப் பாடலில், இராமலிங்க அடிகளார் திருவண்டப்பகுதி எனும் திருவகவலைத் தனியகவல் எனச் சிறப்பித்து, அதன் கருத்தை விளக்கி அருளிச் செய்யும் படி, மாணிக்க வாசகரை வேண்டிக் கொண்டிருத்தல் காணலாம். சிவானுபவச் செய்திகளை இப்பாடல் இனிது விளக்குகின்றது.

(7) பூதத்தாழ்வார் திருவேங்கட மலையை வருணித்து அருளிச் செய்த இப் பாடலின் பொருளாவது:—மதநீர் பெருகப் பெற்ற யானையானது தனது துணையாகிய பெண் யானைக்கு இனிய உணவு கொடுத்து, அதனை மகிழ்ச்சியுறச் செய்ய விரும்பி, மூங்கிற் குருத்தைப் பறித்துத் தேனிலே தோய்த்து அப்பெண் யானையின் வாயின்கண் பிழிந்து ஊட்டுகின்ற திருவேங்கட மலையே, நீலமேக நிறத்தனான திருமால் எழுந்தருளி இருக்கும் மலையாகும் என்பது.

பொதுவான இப்பொருளைத் தவிர, இதன்கண் சிறப்பான ஓர் உள்ளுறை பொருளும் அமைந்திருப்பதாக, அநந்தாழ்வான் விளக்கியுள்ளார்.

(1) அவரது கருத்தின்படி, இப்பாசுரத்தில் "பெருகுமத வேழம்" என்பது இராமாநுசரைக் குறிப்பதாகும். திருவரங்கத்து அமுதனார், "பண் தருமாறன் பசுந் தமிழ் ஆனந்தம் பாய் மதமாய் நின்றிட எங்கள் இராமாநுச முனிவேழம்" (64) என இராமாநுசரை மதயானையாக உருவகம் செய்திருத்தல் காணலாம்.

(2) 'பிடி' என்பது பெண்யானைக்குப் பெயர். அஃது இங்கு இராமாநுசரின் உவப்புக்குரிய அன்பர்களையும் அடியார்களையும் உணர்த்தும்.

(3) "இருகண் இளமூங்கில்" என்பது இரண்டு பகுதிகளாய் உள்ள 'துவயம்' என்னும் மந்திரத்தைச் சுட்டும். மூங்கிலானது முத்துக்கள் தோன்றுதற்கு

இடமாக இருக்கும். அதுபோல, அரும் பொருள்கள் பலவற்றை உள்ளடக்கி உணர்த்திக் கொண்டிருக்கும் சிறப்புடைமை பற்றித் 'துவயம்' என்னும் மந்திரம், மூங்கிலாக உருவகிக்கப் பெற்றது. முற்றொடர்என்றும், பிற்றொடர் என்றும், இரண்டு கூறுகளாக விளங்குதலால், 'துவயம்' என்னும் மந்திரம் 'இருகண் இளமூங்கில்' எனப் பெற்றது.

(4) "அருகிருந்த தேன் கலந்து" என்பதில், திருவெட்டெழுத்து ஆகிய மந்திரம் ஒரு தேனாகவும், கீதையின் உள்ளீடான 'சரம சுலோகம்' ஒரு தேனாகவும் குறிப்பிடப் பெற்றன. திருவெட்டெழுத்தும், சரம சுலோகமும் துவயத்தின் இருபுறத்தும் அருகில் உள்ளனவயாதலின் 'அருகிருந்த தேன்' எனச் சிறப்பிக்கப் பெற்றன.

நம்மாழ்வாரின் திருவாய்மொழியாகிய பசுந்தமிழின் ஆனந்தம், மதநீராய்ப் பெருகப் பெற்ற "இராமானுசர் ஆகிய யானையானது, தன் அன்பர்களாகிய பிடி யானைகளுக்கு முன்னே நின்று, முற்றொடரும் பிற்றொடரும் ஆக அமைந்துள்ள துவயம் என்னும் மந்திரம் ஆகிய இருகண் மூங்கிலை வளைத்து, அதன் அருகில் உள்ள எட்டெழுத்துத் திருமந்திரம்-சரம சுலோகம் என்ற இரு தேன்களையும் கலந்து, விரித்துரைத்து விளக்கி ஊட்டி அருளிய திருவேங்கட மலையே, திருமாலின் திருமலையாகும்" என்பது, அநந்தாழ்வான் அழகுறக் கூறியருளிய நுண்பொருள்.

இராமாநுசர் திருவரங்கத்தினின்று பெரிய பெருமாளிடத்தில் விடைபெற்று, வழியில் உள்ள பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு, பெருமாள் கோயிலை வழிபட்டு, திருவேங்கட மலையை வணங்க விரும்பி, அங்குச் சென்றடைந்தார். அப்போது அங்கிருந்த அன்பர்கள் வேண்டுகோளின்படி, துவயம் என்னும் மந்திரத்தின் பொருளை,

'அகல கில்லேன் இறையும்' என்றலர்மேல் மங்கையுறை மார்பா
நிகரில் புகழாய்: உலக மூன்றுடையாய்; என்னை ஆள்வானே,
நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே
புகலொன் றில்லா அடியேனுன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே

எனவரும் திருவாய்மொழிப் பாசுரத்தோடு இணைத்து விரிவுரை நிகழ்த்தியருளினர் அதன்கண், திருவெட்டெழுத்து மந்திரத்தையும், சரம சுலோகத்தையும்கூட இடையே இயைத்து விளக்கி அன்பர்களை மகிழ்வித்தார். அப்போது அந்தப் பெருங்குழுவில் இருந்த அநந்தாழ்வான் எழுந்து, பூதத்தாழ்வார் அருளிய 'பெருகு மதவேழம்' என்னும் பாசுரத்தின் இனிய உள்ளுறை பொருளை இன்றே நாம் அறியப் பெற்றோம் என்று சொல்லி, இராமாநுசரைப் புகழ்ந்து பாராட்டிப் போற்றும் முறையில், தமது நுண்மாண் நுழைபுலம் தோன்ற, இவ்வரிய பொருள் விளக்கத்தைச் செவ்விதின் அருளிச் செய்தார்.

(8) ஆழ்வார்களுள் ஏனைய எல்லோருக்கும் காலத்தால் பிற்றோன்றிய திருமங்கையாழ்வார் திருக்கோவலூர்க்கு எழுந்தருளி, அருளிச் செய்த பதிகத்தில் வரும் ஒரு பாசுரம் இது. இதன்கண் திருமங்கை ஆழ்வார் தமக்கு முன்னே விளங்கியவர்களும், திருக்கோவலூரில் ஒருவரை ஒருவர் சந்தித்து மகிழ்ந்தவர்களும் ஆகிய முதலாழ்வார்கள் மூவரையும் நினைவு கூர்ந்து, அவர்களைப் போற்றிச் சிறப்பிக்கும் முறையில், பல குறிப்புக்கள் கொண்ட இப்பாசுரத்தைத் திருவாய் மலர்ந்தருளினர்.

இப்பாசுரத்தில் "ஆங்கு அரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்பு கூரும் அடியவர்கட்கு ஆரமுதம் ஆனான்" எனவரும் பகுதி மிகவும் சிறப்புடையதாகும், 'ஆசார்ய ஹ்ருதயம்' என்னும் சிறந்த வைணவப் பெருநூலில், **மணவாள மாமுனிகள்** என்னும் பேராசிரியர், இவ்வரியின் பொருளை அழகுற விரித்துள்ளார். அவரது கருத்தின்படி இவ்வரியை "அடியவர்—அன்பு கூரும் அடியவர்—ஆங்கு அரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்பு கூரும் அடியவர்" என்று மூன்று வகையாகப் பகுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

(1) அதன்படி, "அடியவர்" என்பது பேயாழ்வாரைக் குறிக்கும். 'இன்றே கழல் கண்டேன்'—'பொன் முடியான் அடி இணைக்கே பூரித்து என் நெஞ்சே புரி'—'முயன்று தொழு நெஞ்சே! தண்ணலங்கல் மாலையான் தாள்'—'வாழும் வகையறிந் தேன் எங்கள் பெருமான் அடி சேரப்பெற்று' என்று, பல இடங்களிலும் திருமாலின் திரு வடியையே சிக்கெனப் பற்றியவர் பேயாழ்வார். அடியையே பற்றி நின்றவராதலின்; பேயாழ்வார் 'அடியவர்' எனப் புகழப் பெற்றார்.

(2) இனி, "அன்பு கூரும் அடியவர்" என்பது பூதத்தாழ்வாரைக் குறிக்கும். 'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக' என்று தொடங்கிப் பாசுரம் பணித்தருளியவர் பூதத்தாழ்வார். 'விளவின் காய் கன்றினால் வீழ்த்தவனே! என்றன் அளவன்றால் யான் உடைய அன்பு' என்று, தொடக்கத்திற் போல முடிவிலும்கூட அன்பை வியந்து விதந்து பேசி மகிழ்ந்தவர் இவர். ஆதலின், பூதத்தாழ்வாரை 'அன்பு கூரும் அடியவா' என்றல் பொருந்தும்.

(3) இதன்மேல், 'அரும்பிக் கண்ணீர் சோரும் அடியவர்' எனப் பாராட்டப் பெற்றிருப்பவர் பொய்கை யாழ்வார் ஆவர். 'பழுதே பல பகலும் போயின என்று அஞ்சி அழுதேன்' என்று தாமே கூறியுள்ளபடி, இறைவனைப் பணியப் பெறாமல் பழுதே பகல் பல போயினமை குறித்து அழுது வருந்தியவராகலின், பொய்கை ஆழ்வாரை அரும்பிக் கண்ணீர் சோரும் அடியவராகக் கொள்ளுதல் பொருந்தும்.

இங்ஙனம் திருமங்கையாழ்வார் தமது திருக்கோவலூர்ப் பாசுரத்தில், அத்தலத் தில், தமக்கு முற்பட்டு வாழ்ந்து தம்முட் சந்தித்து மகிழ்ந்த முதலாழ்வார்கள் மூவரை யும் பற்றி, நினைந்து வியந்து புகழ்ந்து போற்றியதாக அமைந்துள்ள குறிப்புக்கள், நாம் அறிந்து சுவைத்தற்கு உரியனவாகும்.

—ஆசிரியர்.

## செய்திச் சுருக்கம்

(1) பைம்பொழில் திருமலைக்குமார சுவாமி தேவஸ்தானம் பெண்கள் உயர் நிலைப் பள்ளியில், 1967-ஆம் ஆண்டுக்குரிய பள்ளி இறுதித் தேர்வு எழுதிய மாணவியர் அனைவருமே (18), சிறப்புறத் தேறி வெற்றி பெற்றுள்ளனர். தேர்ச்சி விகிதம் 100%

(2) பழநி ஆண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரியில், இளங்கலை வகுப்பு (பி.ஏ.) இரண்டாம் ஆண்டுத் தேர்வுக்குச் சென்ற 18 மாணவர்களும்; இளங்கலை வகுப்பு (பி.ஏ.) மூன்றாம் ஆண்டுத் தேர்வுக்குச் சென்ற 20 மாணவர்களும், ஆகிய அனைவரும் மிகச் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி விகிதம் 100%

(3) பூம்புகார் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரியில், இளங்கலை (பி.ஏ.) இரண் டாம் ஆண்டுத் தேர்வு எழுதிய 20 மாணவர்களில் 19 மாணவர்களும்; இளங்கலை (பி.ஏ.) மூன்றாம் ஆண்டுத் தேர்வு எழுதிய 17 மாணவர்களில் அனைவரும் சிறப்புறத் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி விகிதம் முறையே இரண்டாம் ஆண்டில் 95%— மூன்றாம் ஆண்டில் 100%

மகாகும்பாபிஷேக விழா: (1) திருநணா என்னும் பவாநி கூடல், திரு. பண்ணார் மொழி அம்மை பாகத்து நண்ணாவுடைய சிவபிரான் ஸ்ரீ சங்கமேசுவர சுவாமி திருக்கோயில் திருப்பணி நிறைவு பெற்று, 14.7.67 வெள்ளிக் கிழமையன்று மிகப் பெருஞ் சிறப்பாக நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும், தேவார பாராயணங்களும், பிறவும் மிகவும் சிறப்புற நிகழ்ந்தன.

(2) மன்னார்குடி வட்டம் கோட்டூர் ஸ்ரீ தேனம்பிகை சமேத ஸ்ரீகொழுந்தீசுவர சுவாமி கோயிலில், அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா 14.7.67 அன்று சிறப்புற நிகழ்ந்தது.

# திருச்சந்த விருத்தம்

(முற்றுடர்ச்சி)

வைது நின்னை வல்லவா
 பழித்தவர்க்கும், மாறில் போர்
செய்து நின்ன செற்ற தீயின்
 வெந்தவர்க்கும், வந்துனை
எய்த லாகும் என்பர்; ஆதலால்,
 எம்மாய! நாயினேன்
செய்த குற்றம் நற்றம் ஆகவே
 கொள்! ஞால நாதனே!

(பொழிப்புரை) எல்லா உலகங்களுக்கும் தலைவனே! நும்மை நிந்தித்து வல்லமை உள்ளவரையில் இகழ்ந்து பழிப்புரைகளைக் கூறிய சிசுபாலன் முதலியவர்களுக்கும், ஒப்பு இல்லாத போரைச் செய்து நும்முடைய கோபமாகிய நெருப்பில் வெந்து போன வாலி முதலியவர்களுக்கும், நும்மைப் புகலிடமாக வந்து அடைந்து நும்முடைய அருளைப் பெறுதல் இயலும் என்று பெரியோர்கள் கூறுவர். ஆதலால் எங்கள் மாயப் பெருமானே! நாய் போன்ற வணுகிய யான் செய்த குற்றங்களைக் குண மாகவே கொண்டருளுதல் வேண்டும். (111)

வாள்கள் ஆகி நாள்கள் செல்ல
 நோய்மை குன்றி மூப்பு எய்தி
மாளும் நாளது ஆதலால், வணங்கி
 வாழ்த்து என் நெஞ்சமே!
ஆளது ஆகும் நன்மை என்று
 நன்குணர்ந்தது அன்றியும்,
மீள்வு இலாத போகம் நல்க
 வேண்டும் மால பாதமே.

(பொழிப்புரை) நாள்கள் ஆனவை நமது வாழ்க்கையை அறுக்கும் வாள்களைப் போன்றுகழிய,பலவகையானநோய்களால் உடல் வலிமை குறைந்து, முதுமைப் பருவம் வந்து சேர்ந்து, மாண்டு போகின்ற நாளும் நெருங்கி விட்டது. ஆதலால் என்னுடைய மனமே! இறைவனுக்கு ஆட்பட்டிருப்பதே நன்மையைத் தருவதாகும் என்று நன்ருகத் தெளிந்து, இறைவனை எப்பொழுதும் தொழுது துதிப்பாயாக! அதுவல்லாமலும் திருமாலினுடைய திருவடிகளே மறுபடி திரும்பி வருதலில்லாத நல்ல பேரின்பத்தை நமக்கு அளித்தல் வேண்டும்.

(குறிப்புரை) 'வாள்களாகி நாள்கள் செல்ல' என்னும் தொடரில் 'நாளென ஒன்றுபோற் காட்டி உயிர் ஈரும் வாள் அது உணர்வார்ப் பெறின்' என்னும் திருக்குறளின் கருத்து அமைந்திருத்தல் அறிந்து இன்புறற்பாலது. அங்ஙனமே 'மீள்வு இலாத போகம்' என்னும் தொடரினும், ''கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்றீண்டு வாரா நெறி'' எனவரும் திருக்குறளின் கருத்து அமைந்திருத்தல் சிந்தித்து இன்புறத் தக்கது. (112)

சலம் கலந்த செஞ்சடைக்
 கறுத்த கண்டன் வெண்தலை
புலன் கலங்க உண்ட பாதகத்தன்
 வன் துயர் கெட,
அலங்கல் மார்பில் வாசநீர்
 கொடுத்தவன் அடுத்த சீர்
நலங்கொள் மாலை நண்ணு வண்ணம்
 எண்ணு வாழி நெஞ்சமே!

(பொழிப்புரை) என்னுடைய மனமே! நீ வாழ்வாயாக! கங்கை நதியைச் சூடிய சிவந்த சடையை உடையவனும், நீல கண்டனும், புலன்கள் கலங்கும்படி வெண் தலையாகிய கபாலத்தில் பிச்சை ஏற்று உண்டல் ஆகிய இழிசெயலைச் செய்தவனும் ஆகிய சிவபிரானுடைய கொடிய துன்பம் தீரும்படி, திருத்துழாய் மாலை அணிந்த திருமார்பிலிருந்து மணம் கலந்த சிறந்த நீரைக் கொடுத்தருளியவனும், என்றும் நீங்காத இறைமைக் குணங்களை உடையவனும், இன்ப வடிவினனும் ஆன திருமாலை அடையும் வழியாகிய

அவனது திருவடிகளேயே இடைவிடாமல் தியானித்திரு.

(குறிப்புரை) சலம் - கங்கை நீர். கண்டன் - கழுத்தை உடையவன். வெண் தலே - கபாலம். பாதகம் - இழிசெயல். அலங்கல் - மாலே. நலம் - இன்பம். நண்ணுவண்ணம் - அடையும் உபாயம். (113)

ஈனமாய எட்டும் நீக்கி
ஏதம் இன்றி மீது போய்
வானம் ஆள வல்லேயேல்
வணங்கி வாழ்த்து என் நெஞ்சமே!
ஞானம் ஆகி ஞாயிறு ஆகி
ஞாலம் முற்றும் ஓர் எயிற்று
ஏனமாய் இடந்த மூர்த்தி
எந்தை பாதம் எண்ணியே.

(பொழிப்புரை) என்னுடைய மனமே! இழிவைத் தருவனவாய காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மார்ச்சரியம் அஞ்ஞானம் அசூயை என்ற எட்டுக் குணங்களேயும் நீக்கிவிட்டு, உலக வாழ்க்கையின் துன்பங்கள் எதுவும் இல்லாமல், மேல் நெறிக்குச் சென்று இறைவனின் பரம பதத்தை ஆண்டு அனுபவிக்கும் விருப்பம் இருந்தால், உயிரறிவைத் தருபவனுயும், சூரியனேப்போலப் புலனறிவைத் தருபவனுயும், வராக வடிவம் கொண்டு உலகம் முழுவதையும் ஒரு கோட்டினுலே விடுவித்துக் காப்பாற்றிய எந்தையாகவும் உள்ள திருமாலின் திருவடிகளே நினைத்துத் தொழுது துதிப்பாயாக!

(குறிப்புரை) ஈனம் - குறைவு, இழிவு. ஏதம் - துன்பம். வானம் - பரம பதம். ஞாலம் - உலகம். எயிறு - பல். ஏனம் - வராகம், பன்றி. இடந்த - அகழ்ந்த, விடுவித்த.

அத்தன் ஆகி அன்னே ஆகி
ஆளும் எம்பிரானு மாய்
ஒத்து ஒவ்வாத பல்பிறப்பு ஒழித்து
நம்மை ஆட் கொள்வான்
முத்தனுர் முகுந்தனுர் புகுந்து
நம்முள் மேவினுர்
எத்தினுல் இடர்க்கடல் கிடத்தி
ஏழை நெஞ்சமே!

(பொழிப்புரை) அறிவில்லாத மனமே! உலகியற் பற்றில்லாதவரும், வீடு பேற்றின்பத்தைத் தருபவரும் ஆகிய திருமால் அறிவுடைமையால் ஒத்தும், உருவ அமைப்பினுல் ஒவ்வாமலும் இருக்கின்ற பலவகைப்பட்ட பிறவிகளேப் போக்கி, நம்மை ஆட்கொண்டருளுவதற்காகத் தந்தையாகியும் தாயாகியும், ஆட்சி செய்கின்ற தலேவனுகியும் விளங்கி, நம்முடைய உள்ளத்தில் வந்து கலந்து பொருந்தினுர். இங்ஙனமாகவும் நீஎதற்காகத்துன்பமாகிய கடலில் அழுந்திக் கிடக்கின்றுய்?

(குறிப்புரை) முத்தன் - விடுபட்டவன். முகுந்தன் – வீட்டுலகத்தைக் கொடுப்பவன். 'ஒத்து ஒவ்வாத பல் பிறப்பு' என்னும் தொடருக்கு உயிர்க் கூட்டங்களின் மனத்திற்கு ஒத்தும் ஒவ்வாமலும் இருக்கின்ற பலவேறு வடிவங்களாகிய பிறப்புக்கள் என்றும் பொருள் கூறுவர். கண்ணபிரான் அருச்சுனனே நோக்கித் 'துக்கப்படாதே' என்று அருளிச் செய்தாற் போல, ஆழ்வார் மனத்தை நோக்கி 'எத்தினுல் இடர்க் கடற்கிடத்தி?' என்று அருளிச் செய்கின்றுர். இப்பாடலே முமுட்சுப்படி நூலின் முடிவில், பிள்ளே உலகாசிரியர் மேற்கோளாகச் சுட்டியுள்ளார். (115)

மாறு செய்த வாள்அரக்கன்
நாள் உலப்ப அன்று இலங்கை
நீறு செய்து சென்று கொன்று
வென்றி கொண்ட வீரனுர்,
வேறு செய்து தம்முள் என்னே
வைத்திடாமையால் நமன்
கூறு செய்து கொண்டு இறந்த
குற்றம் எண்ண வல்லனே?

(பொழிப்புரை) பகைமை கொண்டவாளே ஏந்திய அரக்கனுகிய இராவணனுடைய வாழ்நாள் முடியும்படி, இலங்கை மாநகரை அடைந்து அதனேப் புழுதியாக்கி, அவனேக் கொன்று வெற்றி பெற்ற பெரு வீரராகிய திருமால், எளியவனுகிய என்னேத் தம்மில் வேறுபடுத்திப் பிரித்து வைக்காமல் என்னேத் தம்முள் ஏற்றுக் கொண்டருளியிருத்தலால், எமன் என்பவன் என்னே இறைவனிடத்தினின்றும் தனியே பிரித்து, நான் முன்பு செய்த பாவங்களே நெஞ்சாலும் நினைத்துத் தண்டிக்க வல்லனே?

(குறிப்புரை) மாறு செய்தல்-பகைமை பாராட்டுதல். உலத்தல்-முடிவடைதல். நீறு செய்தல் - புழுதியாக்கி அழித்தல். இறந்த காலத்தில் செய்த குற்றங்களை 'இறந்த குற்றம்' என்றார். எண்ணுதல் - மனத்தால் நினைத்தல், எண்ணிக்கையிடு தல் எனினுமாம். (116)

அச்சம் நோயொடு அல்லல்
 பல்பிறப்பு அவாய மூப்புஇவை
வைத்த சிந்தை வைத்த வாக்கை
 மாற்றி வானில் ஏற்றுவான்:
அச்சுதன் அனந்த கீர்த்தி
 ஆதி அந்தம் இல்லவன்
நச்சு நாகணைக் கிடந்த
 நாதன் வேத கீதனே!

(பொழிப்புரை) அடியாரை ஒருநாளும் கைவிடாதவனும், எல்லை இல்லாத புகழ் களை உடையவனும், முதலும் முடிவும இல்லாதவனும், பகைவர்கள் மீது நஞ்சை உமிழ்கின்ற ஆதிசேடனாகிய படுக்கையில் கிடந்தருளும் தலைவனும், வேதங்களால் புகழ்ந்து ஓதப்படுபவனும் ஆகிய திருமால், மனத்தில் தோன்றும் பயம், உடலில் தோன்றும் நோய், உலகியலில் தோன்றும் துன்பம், அபாயத்துக்கு இடமான முதுமை, பலவகைப்பட்ட பிறப்புக்கள் ஆகிய இவற்றையும், இவற்றை அனுபவிப் பதற்குரிய மனத்தையும், இவற்றிற் கெல் லாம் நிலைக்களனான உடலையும் நீங்கும்படி செய்து, நம்மைப் பரம பதத்தில் சேர்த் தருளுவான்.

(குறிப்புரை) அச்சுதன் - அடியார்களைக் கைவிடாதவன். அனந்தம் - முடிவில்லா தது. கீர்த்தி - புகழ். அவாய மூப்பு - அபாயங்கள் நேர்தற்கு உரிய முதுமைத் தன்மை. 'நஞ்சு' என்பது 'நச்சு' என வலித்தல் விகாரம் பெற்றது. 'நாக + அணை' என்பது 'நாகணை' எனத் தொகுத் தல் விகாரம் ஆயிற்று. (117)

சொல்லிலும் தொழிற்கணும்
 தொடக்கு அறாத அன்பினும்
அல்லும் நன் பகலினோடு
 ஆன மாலை காலையும்,
வல்லி நாள் மலர்க் கிழத்தி
 நாத! பாத போதினைப்
புல்லி உள்ளம் விள்விலாது
 பூண்டு மீண்ட தில்லையே!

(பொழிப்புரை) செந்தாமரைக் கொடியில் அன்று பூத்த மலரின்மீது வீற்றிருக்கும் திருமகளின் கணவனே! என் மனமானது சொல்லிலும், செயல்களிலும், தொடர்ச்சி நீங்காத அன்பிலும், இரவுடன் கூடிய மாலையிலும், நல்ல பகலுடன் கூடிய காலையிலும், நின்னுடைய திருவடிகளாகிய மலரினைத் தழுவி, ஒரு நொடிப் பொழுதும் பிரிவு இல்லாமல் அவற்றை மேற்கொண்டு, அவற்றினின்று மீளாமல் நிலைத்து நிற் கின்றது.

(குறிப்புரை) வல்லி நாள் மலர்க் கிழத்தி - திருமகள். வல்லி - கொடி; அது தாமரையையும், திருமகளையும் குறிக்கும். கிழத்தி - உரிமையுடையவள். நாள் மலர் - அன்று அலர்ந்த புதிய மலர். தொடக்கு - தொடர்ச்சி. அல் - இரவு. போது - மலர். பாதம் - திருவடி. விள்வு - பிரிவு. (118)

பொன்னிசூழ் அரங்கம் மேய
 பூவை வண்ண மாய! கேள்!
என்னது ஆவி என்னும்
 வல்வினையினுள், கொழுந்து எழுந்து
உன்ன பாதம் என்ன நின்ற
 ஒண் சுடர்க் கொழு மலர்,
மன்ன வந்து பூண்டு
 வாட்டம் இன்றி எங்கும் நின்றதே!

(பொழிப்புரை) காவிரியாறு சூழ்ந்த திரு வரங்கம் என்னும் தலத்தில் எழுந்தருளி யுள்ள, காயாம்பூப் போன்ற திரு மேனியை உடைய மாயவனே! யான் செய்யும் இவ் விண்ணப்பத்தைக் கேட்ட ருள்க. என்னுடைய உயிர் என்கின்ற கொடிய தீவினைக் கூட்டத்தினுள், தேவரீ ரைக் குறித்த என் காதலானது, கொழுந்து போலக் கிளர்ந்து, தேவரீரு டைய திருவடி என்கின்ற அழகிய சுடர் மிக்க சிறந்த மலரின்கண் நிலையாக வந்து படிந்து, உலகமெங்கும் வாடுதல் இன்றிப் பரவி நின்றது.

(குறிப்புரை) பொன்னி - காவிரி. காவிரி ஆற்றில் பொன் சத்து நிறைந்துள்ளது என்பர். அரங்கம் - இரண்டு ஆறுகளின் நடுவே உள்ள நிலப்பகுதி. பூவை - காயாம்பூ. ஆழ்வார் தம்முடைய ஆவிக்கு 'வல்வினை' என்றும், இறைவன் திறத்தில் தமக்கு விளைந்த வேட்கை மிகுதிக்குக் 'கொழுந்து' என்றும் பெயரிட்டார்

என்பர். திருவரங்கத்திலுள்ள திருமாலின் கோலத்தையும் சீலத்தையும் வியந்து பாராட்டி, ஆழ்வார் நன்றி புலப்படுத்தியருளினர். (119)

இயக்கு அறுத பல் பிறப்பில்
என்னை மாற்றி இன்று வந்து
உயக்கொள் மேகவண்ணன்
நண்ணி, என்னில்ஆய தன்னுளே
மயக்கினன், தன் மன்னு சோதி
ஆதலால் என் ஆவிதான்
இயக்கெலாம் அறுத்து,
இன்பவீடு பெற்றதே!

(பொழிப்புரை) நம்மை எல்லாம் உய்யும்படி ஏற்றுக் கொள்ளுகின்ற, மேகம் போன்ற நிறத்தை உடைய பெருமாள், தொடர்ச்சி மாருத பல வகைப் பிறப்புக்களினின்றும் எளியேனை நீக்குவதற்கு இன்று இங்கே எழுந்தருளி வந்து என் அருகே போந்து, தன்னேடு சேர்ந்துள்ள என்னுள்ளே, தன்னுடைய நிலைபெற்ற ஒளி வடிவமான திருவுருவத்தைக் கலக்கும்படி செய்தான். இங்ஙனம் இடையீடின்றிக் கலந்ததனுல் என்னுடைய உயிர்ப் பொருளானது, ஒன்றேடொன்று பிணைந்து கிடந்த அறியாமை முதலிய குற்றங்களை வேருடன் அறுத்து, ஒரு நாளும் முடிவடையாத இன்பமாகிய வீடு பேற்றைப் பெற்றுவிட்டது.

(குறிப்புரை) இயக்கு - தொடர்ச்சி. மாற்றி - நீக்கி. உயக்கொள் - உய்யும்படி ஆட்கொள்ளுகின்ற. மயக்கினன் - கலக்கும்படி செய்தான்.

(திருமழிசை ஆழ்வார்அருளிச் செய்த
திருச்சந்தவிருத்தம்—முற்றிற்று.)

—ஆசிரியர்.

## செய்திச் சுருக்கம்

சித்த மருத்துவர்கள் கருத்தரங்கு ; திருக்குற்றுலம் சித்திர சபைக் கட்டிடத்தில் 6.7.67 அன்று, திரு. G. D. நாயுடு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு வீ. பலராமய்யா, பி.ஏ.பி.எல்., தவத்திரு. சங்கரானந்த சுவாமிகள், திரு. சி. எஸ். உத்தமராயன், அறநிலைய ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், மற்றும் 14 சித்த மருத்துவ வல்லுநர்கள் ஆகிய பெருமக்கள் பலர், கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்து தர்ம பிரசார சங்க ஆண்டு விழா : திருமயிலைக் கபாலீசுவரர் கற்பகாம்பாள் கல்யாணமண்டபத்தில் மதுரை ஆதீனம் திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீசோமசுந்தரஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தலைமையில்,சிறப்புற நடைபெற்றது. ஆணையர் திரு.மா.சே. சாரங்கபாணி முதலியார், தர்மரட்சாமணி திரு. கே. பால சுப்பிரமணிய ஐயர், எம்.எல்.சி., மகா வித்துவான் திரு. கே. ஆறுமுக நாவலர் முதலிய பெருமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அருளாட்சி ஏற்பு விழா : கோவை—பேரூர்—தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில், இளவரசு தவத்திரு. இராமசாமி அடிகளார் அவர்களுக்குத் தவத்திரு. ஆறுமுக சுவாமிகள் அவர்கள், 11.7.67அன்று கல்லாடை வழங்கி, முடிசூட்டுவிழா நிகழ்த்துவித்தார்கள். அருளாட்சி ஏற்பு விழாவில், தொண்டை மண்டல ஆதீன குருமகா சந்நிதானம் அவர்களும், தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஸ்ரீ ராமாயண ரஸப்ரவாஹம்

(மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்)

**திருமங்கையாழ்வார் பாசுரத்தின் சுவை நுகர்ச்சி :**

குகனுடைய தாழ்வை எடுத்துக் காட்டுகின்ற திருமங்கையாழ்வார், 'ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாதிரங்கி' என்கிறார். பெருமாள் குகனைக் கைவிடுகைக்கு இவ்விழி குணங்களில் ஓரொன்றே அமைவதாயிருக்க, அவை பலவுமுளவென்று கண்டும் அருட்கடலான பெருமாள் குகனிடம் உபேக்ஷை கொள்ளாமல் இருந்ததோடு அளவு கடந்தும் கலந்து பரிமாறினன்.

க்ஷத்திரிய ஜாதியில் ஸூர்ய குலத்தில் இட்சுவாகு வம்சத்தில் திருவவதரித்தவனும் சக்ரவர்த்தியின் திருக்குமாரனும் சகலைச்வர்ய ஸம்பன்னனும் மகாபுத்திமானும் பகைவரிடத்தும் அன்பு கொள்பவனுமான இராமபிரான் குகனை நோக்குங்கால், இவன் இழிவான வேடச்சாதியனென்றும், அதனால் பகுத்தறிவில்லாத அவிவேகி என்றும் அச்சாதிக்கு இயல்பாகக் கொடுமையினால் எல்லா உயிர்களோடும் பகைமை கொள்பவனென்றும், இப்படிப்பட்ட தன்மைகளைக் கண்டு இகழ்ச்சி கொள்ள வேண்டியிருந்தும் தனது பெருமைக் குணங்களையும் அவனது சிறுமைத் தன்மைகளையும் பாராமல் அவனுடன் கலந்து பரிமாறின விதம் எத்தகைத்தென்னில், 'சீரணிந்த தோழமை கொண்டதுமோ ரடையாளம்" என்று திருவடிவாக்கில் 'சீரணிந்த தோழமை' என்று வரும்படியாகவேயன்றோ கலந்தது.

குகனுடைய அளவு கடந்த அன்பைக் கண்டு பெருமாள் அவனோடு தோழமை கொண்டாரா? அல்லது, பெருமாள் சீரணிந்த தோழமை கொண்டதற்காகக் குகன் அன்பு பாராட்டினனா? என்று ஒரு கேள்வி பிறந்தால், எம்பெருமான் திருவுள்ளத்திற்கே தெரியவெளிதான இவ்விஷயத்தில் நாம் என்ன விடையிறுப்பது?

**ஸ்ரீராமாயணச்லோக விசேஷாநுபவம் :**

பெருமாள்கங்கைக்கரை சேர்ந்தவுடனே அதனைக்கேள்விப்பட்டகுகன்தன்னினத்தாரோடு பெருமாளிடம் வந்து சேர்ந்தானென்பதைக் கூறுகின்ற வான்மீகி முனிவர் "தத்ர ராஜா குஹோ நாமராமஸ்ய ஆத்மஸமஸ் ஸகா" என்கிறார். குகனைப்பற்றி முதன்முதலாக ப்ரஸ்தாவம் செய்யும் போதே 'நாமஸ்ய ஆத்மஸமஸ் ஸகா' என்று கூறியிருப்பது மிகமிக வியக்கத்தக்கது. இராமனுடைய உயிர்த்தோழனை குகன் இராமனது வரவைக் கேள்விப்பட்டு வந்து சேர்ந்தானென்று கூறியிருப்பதனால் இவ்விருவர்க்கும் தோழமை முன்னே பிடித்தேயுள்ளது போல்தோன்றுகிறது. குகன் வரும் போதே இராமனைத் தழுவிக் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது- 'தம் ஆர்த்தஸ் ஸம்பரிஷ்வஜ்ய குஹோ ராகவ மப்ரவீத்' என்ற மேல் சுலோகத்தினால்.

**ஆழ்வாருடையவும் கம்பருடையவும் பேச்சுக்கள் :**

ஆனால் ஆழ்வார்களருளிச்செயலினாலும் கம்பருடைய வாக்கினாலும் இந்தத் தோழமை அப்போதுதான் தோன்றியதென்று நன்கு தெரிகிறது. "குகனோடுங் கங்கை தன்னில் சீரணிந்த தோழமை கொண்டதுமோ ரடையாளம்" என்பது பெரியாழ்வார் திருவாக்கு. கம்பராமாயணம் விபீடண னடைக்கலப் படலத்தில் (146).

"குகனெடு மைவராளேம் முன்பு, பின்
குன்றுசூழ்வான்
மகனெடு மறுவராளேம்; எம்முழை
யன்பின்வந்த
அகனமர் காதலேய! நின்னெடு
மெழுவரானேம்;
புகலருங் கானந்தந்து புதல்வராற்
பொலிந்தானுந்தை."

என்ற செய்யுள் மிக இன்சுவையுடைத்து. இதன் கருத்தாவது: நகரில் நான்குபேர் நாங்கள் தசரதாத்மஜர்களாகப் பிறந்தோம்; நான்கு புத்திரர்கள் பிறந்தவளவிலும் திருப்திபெருத தயரதன் இன்னமும் புத்திரர்கள் வேண்டியே எங்களைக் காட்டுக்கனுப்பினன்; 'நீங்களிருவரும் காடு சென்று இன்னமும் சில தம்பிமார்களைச் சம்பாதித்துக் கொண்டு வாருங்கள்' என்றே எங்களைக் கானகம் போகவிட்டனன்; கானகம் வந்த நாங்கள் பல தம்பிகளைச் சம்பாதித்துக் கொண்டோம்; கங்கைக் கரையிலே குகனைத் தம்பியாகப் பெற்ருேம்; பம்பைக் கரையிலே சுக்ரீவனைத் தம்பியாகப் பெற்ருேம்; விபீடணு! கடற்கரையில் உன்னைத் தம்பியாகப் பெற்ருேம். ஆக, நம் தந்தை ஏழு புத்திரர்களைப் பெற்ருனுயினன் என்பதாம்.

இங்ஙனம் கூறுகின்ற இராமன், குகனிடத்தும் சுக்ரீவனிடத்தும் விபீடணனிடத்தும் கூடப் பிறந்த தம்பியினிடத்திற் போலத் தான் அன்பு பாராட்டுபவன் என்பதையன்ரே வெளியிட்டானுகிருன். மேலும் இங்குத் தசரதனை எந்தையென்னுமல் உந்தையென்றதும் உற்று நோக்கத் தக்கது; விபீஷணனது தந்தையாகவே யன்ரே தசரதன் கூறப்பட்டனன். இதனுல், பெருமாள் விபீடணனிடத்துப் புரையறக் கலந்த தன்மை புலனுகும். ஆகவிப்படி குகன் சுக்கிரீவன் விபீடணன் போல்வாரிடத்து ஒருநீராகக் கலந்து பழகும் பெருங்குணத்தை உன்னியே "க: குணவாந்?" என்று வினவப்பட்டது.

நிஹீனர்களோடு நட்பதினுண்டாகும் சங்கை,

இங்கு ஒரு சிறிய சங்கை தோன்றக் கூடியதுண்டு; அதாவது "ஹீநப்ரேஷ்யம் ஹீநஸக்யம் ஹீநகேஹ நிஷேவணம்" என்று உபபாதகங்களிலே படிக்கப்பட்டுளது; நீசர்களுக்குப் பணிவிடை செய்வது, நீசர்களோடு தோழமை கொள்ளுவது, நீசர்கள் மனைகளிலே சென்றிருப்பது ஆகியவிவை பாதகங்களாகச் சொல்லப்படாநிற்க, இவற்றைப் பெருமாள்செய்யலாமோ? செய்தவிது ஓர் ஏற்றமாகுமோ? என்று.

சங்கைக்குப் பரிகாரம் :

கேண்மின் ; நம்மைப் போன்றவர்கள் இவை செய்தால் நிறக்கேடாம். உயர்ந்தாரில் ஒப்பற்ற பெருமாள் இவை செய்தால் அவருடைய பெருமை இன்னமும் பொலிந்து தோன்றுமத்தனை. பாண்டவ தூதன், பார்த்தசாரதி என்பனபோன்ற திருநாமங்கள் எல்லாம் அவருடைய பெருமையைக் குன்றிலிட்ட விளக்காக்குமவையன்ரே?

தயாசதக ஸ்ரீஸூக்தியின்படி சபரியையுங் கொள்ளுதல் :

இராமபிரானுடைய சீலகுணம் விளங்கின விடங்கள் பலபலவு முண்டாகிலும், குகன் ஸுக்ரீவன் விபீஷணன் என்ற மூன்றிடங்களையெடுத்துக் காட்டினதேபோதும். வேதாந்த தேசிகன் தயாசதகத்தில் "நிஷாதாநாம் நேதா கவிகுலபதி; காபி சபரீ" என்னும் சுலோகத்தில் சபரியையும் எடுத்துக் காட்டி யிருக்கையாலே அவ்விடத்தையுங் கொள்வோம். வான்மீகி ராமாயணத்திலும் கம்பராமாயணத்திலும், பெருமாள் சபரியினிடம் கலந்து பரிமாறின வரலாறு விசேஷித்து ஸ்பஷ்டமாகக் கூறப்படவில்லையாயினும் இதர ராமாயணங்களிலுள்ளதைக் கொண்டோ, வான்மீகி ராமாயணத்தையே ஆழ்ந்து நோக்கியோ, நம் ஆசாரியர்கள் அருளிச் செய்துள்ள விசேஷம் குறிக்கொள்ளத் தக்கது.

சபரியிடம் பெருமாள் அமுது செய்தவகை :

ஸ்ரீவசனபூஷணத்தில் (233) "பெருமாள் ஸ்ரீசபரி கையாலே அமுது செய்தருளினர்" என்றவிடத்து வியாக்கியானத்தில் மணவாள மாமுனிகள் "ரகுகுலதிலகராய் ஆசாரப்ரதாநரான பெருமாள் 'சபர்யா பூஜிதஸ் ஸம்யக் ராமோ தசரதாத்மஜ:'

என்னும்படி வேடுவிச்சியாய் வைத்தே குரு சுச்ரூஷையிலே பழுத்து ஜ்ஞாநாதிகை யாய்த் தன் நாவுக்கு இனிதாயிருந்த பல மூலாதிகளெல்லாம் இங்குத்தைக் கென்று ஸஞ்சயித்துக் கொண்டு வரவுபார்த்திருந்த ஸ்ரீசபரி, தன் ஆதராநுகுணமாகத் தன் கையாலே அமுது செய்யப் பண்ண அதி ஸந்துஷ்டராய் அமுது செய்தார்" என்றருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் விசேஷித்து அநுஸந்திக்கத் தக்கவை. இதில் "தன் நாவுக்கு இனிதாயிருந்த" என்கிற வார்த்தையை மாமுனிகள் மூலப்ரமாண மின்றி அருளிச் செய்யார். வான்மீகி (ஸம்க்ஷேபத்தில்) "சபர்யா பூஜிதஸ் ஸம்யக்" என்றவிடத்து ஸம்யக் என்பதில் உள்ளுறையும் பொருளே இது என்றும் கொள்ளலாம்.

**குகனுக்கும் சபரிக்குமுள்ள வாசியை விளக்குதல் :**

அவளிடத்தில் பெருமாள் இவ்வளவு கலந்து பரிமாறக் காரணமென்ன? என்று சிலர் விமர்சிக்கவும் நேரும். கேண்மின்: குகனோடு கலந்து பரிமாறினபோது அவன் சில உணவுப் பொருள்களைக் கொணர்ந்து கொடுத்து இவற்றைத் திருவுள்ளம்பற்றி யருளவேணும் என்று வேண்டினன்; அதற்குப் பெருமாள் சொன்ன மறுமொழி—(வால்மீகி. அயோ-50)

யத்த்விதம் பவதா கிஞ்சித் ப்ரீத்யா ஸமுபகல்பிதம்,
ஸர்வம் தததுஜாநாமி ந ஹி வர்த்தே ப்ரதிக்ரஹே.
.. அச்வாநாம் காதகேநாஹமர்த்தீ நாந்யேந கேநசித்,
ஏதாவதாத்ர பவதா பவிஷ்யாமி ஸுபூஜித :

என்பது. 'நான் இந்த வனவாசத்தில் யாரிடத்திலும் ஏதும் பெற்றுக் கொள்வதில்லை யென்று விரதம் கொண்டிருக்கிறேன்; இதோ நமது தேர்க்குதிரைகள் விடாய்த்திருக்கின்றன; அவற்றுக்கு வேண்டிய உணவுகளையே நான் விரும்புபவன்' என்று சொல்லி அவற்றைத் தாம் கைப்பற்றாமலே யிருந்து விட்டார் பெருமாள்.

இங்கு பெருமாள் "நஹி வர்த்தே ப்ரதி க்ரஹே" (நான் தானம் வாங்கக் கூடாதென்று வைத்துக் கொண்டிருக்கிறேன்) என்பது அவசியம் சொல்லியாகவேண்டிய வார்த்தையோ? குகன் மதுபர்க்கம் முதலிய சில உணவுப் பொருள்களைக் கொணர்ந்து கொடுக்க வந்தானே யல்லது தன தான்ய வஸ்த்ராதிகளொன்றும் கொடுக்க வந்திலன். அவை கொடுக்க வந்தால் அப்போது'நான் ப்ரதிக்ரஹம் பண்ணுவதில்லை' என்று சொல்லி மறுக்க நியாயமுண்டு. தேன்முதலியகாட்டுணவுப்பொருள்களையே கொடுக்க வந்த போது "நஹி வர்த்தே ப்ரதிக்ரஹே" என்று சொல்லி மறுத்ததானது அவசியம் ஆராயத்தக்கதன்றோ? குகனிடம் இப்படிச் சொன்ன விவரே சபரியிடம் மறுத்துக் கூறாமல் "அர்ச்சிதோஹம் த்வயா பக்த்யா" என்று உகந்து கூறி அவளுடைய ஸமர்ப்பணையை ஏற்றுக் கொண்டார்.

**சபரியைப்பற்றி மணவாளமாமுனிகளின் திருவாக்கு :**

சபரீ விஷயத்தில் கீழே நாமெடுத்துக் காட்டியுள்ள ஸ்ரீவசநபூஷண வியாக்கியான ஸ்ரீஸூக்தியில் "குருசுச்ரூஷையிலே பழுத்துஜ்ஞாநாதிகையாய்". என்று மருமமாக வருளிச் செய்திருப்பதை இங்கு விவரிக்கிறோம். சபரியிடம் மிகச் சிறந்ததொரு தருமம் குருசுச்ரூஷை என்பது இருந்தது. இதைக் கபந்தன் பெருமாளுக்குத் தெரிவித்தனன். "ச்ரமணீ சபரீ நாம காகுத்ஸ்த! சிரஜீவிநீ, த்வாம்து தர்மே ஸ்திதா நித்யம்" என்றும், "ச்ரமணீம்தர்மநிபுணம் அபிகச்ச" என்றுமுள்ளகபந்தன் வார்த்தைகளில் தர்ம சப்தத்தினால் கூறப்பட்டது குருசுச்ரூஷையே.பெருமாளும்சபரியைக் கண்டவுடனே க்ஷேமம் வினவுகையில் "கச்சித்தே குருசுச்ரூஷா ஸபலா சாருபாஷிணி! என்று உன்னுடைய குருசுச்ரூஷை நிறைவேறியதாவென்று கேட்டிருக்கிறார். அவளும் தான் செய்த குருசுச்ரூஷையைப் பற்றி ஆனந்தமாக விடை கூறியிருக்கின்றாள். "இங்கு என்னுடைய பணிவிடைகளைக் கொண்ட ஆசாரியர்கள் திருநாடு சென்றிருக்கின்றார்கள். அவர்களது திருவடிவாரஞ் செல்ல எனக்கு அனுமதி தரவேணு"மென்றும் கோரியிருக்கிறாள். இத்தகைய தருமம் குகனிடத்து இல்லாமை பற்றியே, அவன் தந்த உணவுகளைத் திருவுள்ளம் பற்றவில்லை என்பர் பேராசிரியர்கள்.

இங்குச் சிலருடைய வார்த்தையின் பொருந்தாமை:

இங்குச் சிலர் வேறுகக் கூற வருவர். எங்ஙனே யென்னில் குகன் சபரியைப் போல் பழம் கொடுத்திருந்தானுகில் பெருமாள் அதை ஸ்வீகரித்தே யிருப்பர். அவன் பழம் கொடுக்கவில்லை யென்பது அந்த பிரகரணத்தில் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. ஆகவே குகனிடம் பெற்றுக் கொள்ளாமைக்கும் சபரியிடம் பெற்றுக் கொண்டமைக்கும் இங்குக் கூறிய காரணம் யுக்தமானதன்று என்று சிலர் சொல்லக் கூடும். அவர்கள் "நஹி வர்த்தே ப்ரதிக்ரஹே" என்று குகனிடம் இராம பிரான் கூறியுள்ளதை நன்கு ஆராய வேணும். "குகனே! நீ காய்கனி ஏதாவது கொணர்ந்து கொடுத்தால் ஸ்வீகரிக்கிறேன்" என்ருவது பெருமாள் கூறியிருக்க வேண்டுமே. அங்ஙனம் கூருது தாம் ஊர் திரும்பிச்சென்று சேருகிறவரையில் ஒருவரிடத்திலும் ஒன்றுமே பெற்றுக் கொள்வதில்லை என்று ஒரு விரதம் கொண்டிருப்பதாகப் பொருள்படும்படி கூறியது ஏதோ தட்டுக் கழிக்கிறபடியாகவன்றே காண்கிறது. உணவைக் கைக் கொள்ளும்படியான அதிகார பூர்த்தி குகனிடம் இல்லை யென்பதே பெருமாளுடைய திருவுள்ளம். அக்கருத்தைப் பெருமாள் செவ்வனே தெரிவியாமல் 'நஹி வர்த்தே ப்ரதிக்ரஹே' என்று கபடமாகக் கூறிக் கழித்தது, அவருடைய பெருங்குணத்திற்குக்குறையன்றே வென்று சிலர் சங்கிக்கக் கூடும். இதற்குச் சமாதானமாவது, "நஹி வர்த்தே ப்ரதிக்ரஹே" என்று பெருமாள் கூறியது, 'யாரிடத்திலும் எதுவும் நான் வாங்கிக் கொள்ள மாட்டேன்" என்றே பொருள்பட வேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. 'உன்னிடத்தில் வாங்கிக்கொள்ள எனக்குப் பிரியமில்லை' என்று சொல்லுவதாகவும் பொருள்படும். அப்படி விருப்பமில்லாமைக்குக் காரணம் கீழே நாம் விவரித்ததே.

வேதாந்த தேசிகருடைய திருவாக்கொன்று:

வேதாந்த தேசிகன் ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஆருவது அங்கத்தில், விவேகன் ஆனந்தமாகப் பாடுவதாய் வைத்து அற்புதமானவொருசுலோகமியற்றியுள்ளார்; "பகவதி பரத்வாஜே புக்திஸ் ததா சபரீக்ருஹே" என்பது அதன் முதற்பாதம். பெருமாள் பரமபவித்ரமான பரத்வாஜாச்ரமத்தில் அமுது செய்தாரென்று கேள்விப்படுவதுபோலவேசபரி திருமாளிகையிலும் அமுது செய்ததாகக் கேள்விப்படுகிருேம்: இது என்ன நீர்மை! என்றீடுபட்டுக் கூறியது காண்க.

இன்றுபோய் நாளைவாவென்ற சிலகுணநுபவம்:

"க:குணவாந்?" என்ற வால்மீகியின் வினவுக்குத் தகுதியான இராமனுடைய மற்ருெரு குணவிசேஷமும் அநுஸந்திக்கத் தக்கதாகும். கூரத்தாழ்வான் அதிமாநுஷ ஸ்தவத்தில் (சுலோ. 27) "கோயம் குண: கதரகோடிகத: கியாந் வா கஸ்ய ஸ்துதே: பதம் அஹோ பத கஸ்ய பூமி:" என்ருெரு குணவிசேஷத்தை யெடுத்துரைத்து மாய்ந்து போகிருர். அதாவது, 'யத் தாத்ரு சாகஸமரிம் ரகுவீர: வீக்ஷ்ய விச்ரம்ய தாமிதி முமோசித முக்தமாஜௌ) போர்க்களத்தில் "சசரல சாபஞ்ச முமோச வீர:" என்னும்படியே நிலைகலங்கிநின்ற இராவணனை நோக்கி 'இன்றுபோய் நாளைவா' என்று பெருமாள் கூறி விடை கொடுத்தனுப்பினதுண்டே, இது மிகச் சிறந்த குணமாகக் குலாவப்படுகின்றது. "திருவினைப் பிரித்த கொடுமையிற் கடுவிசையரக்கன்" என்ற திருமங்கையாழ்வார் அருளிய படியும், "பஞ்செனச் சிவக்குமென்கால் பாவையைப் பிரித்தபாவி வஞ்சன்" என்று கம்பர் கூறியபடியும் மஹாபராதிகளில் தலைவனை அவனை ஒரு நொடியிலே வதஞ் செய்து தொலைக்க வேண்டியிருக்க, அங்ஙனம் தொலைத்திடாமல் "கச்சாநுஜாநாமி ரணார்திதஸ் த்வம் ப்ரவிச்ய ராத்ரிஞ்சர ராஜலங்காம் ஆச்வாஸ்ய நிர்யாஹி" என்று விடை கொடுத்துப் போகவிட்ட பெருந்தகையாளனது இக்குணம் ஸ்ரீராமாயணத்திற் காணும் ஸகல குணங்களிலும் மேம்பட்டதாதலால் அதனையுமிங்குக் கொள்ளலாம்.

பிள்ளை லோகாசாரியர் அநுபவித்த சிலகுணம் :

அஷ்டாதச ரஹஸ்யத்தில் தனித்வயமென்னும் ரஹஸ்யத்தில் "கோந்வஸ்மிந்

குணவாங்" என்பதை யெடுத்து விவரித் தருளுகையில் "சீலவத்தையாகிறது அபி ஷே கவிக்னம் பிறந்ததென்று வெறுப்பின் றியே 'வநவாஸோ மஹோதய:' என்று காடேறப் புறப்பட்டுப் போவது. 'ஆவாஸம் த்வஹமிச்சாமி' என்று ரிஷிகள் பக்கலிலே சென்று தாழ நிற்பது, 'கிங்கரௌ ஸமுபஸ் திதௌ' என்பது, ஜன்ம வ்ருத்தங்களில் குறைய நிற்கிறவர்களை 'உகந்த தோழனீ' என்பது, இப்படிகளாலே சீலவத்தையை மூதலித்தது" என்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது. அதையும் சற்று விவரிப்போமிங்கு.

"ஜன்மவ்ருத்தங்களில் குறைய நிற்கிற வர்களை உகந்த தோழன் நீ என்பது" என் றதைக் கீழே விரிவாக விவரித்தாயிற்று. மற்றைய விரண்டு விஷயங்கள் இனி விவ ரிக்கப் படுகின்றன. தசரத சக்ரவர்த்தி இராமபிரானை ஒரு தடவைக் கிரண்டு தட வையாக அழைத்து 'உனக்கு ராஜ்யம் தந் தேன், முடிசூட ஸன்னுஹம் செய்' என்று சொல்லிவிட்டு, அப்படியே ஸன்னுஹங் கள் செய்து முடிந்த பின் ஒரு பெண்டாட் டியின் வார்த்தைக்கு இசைந்து நின்று 'உனக்கு நாடில்லை, காடுதான்' என்று சொல்ல, அப்போது சிறிதும் மனவேதனை யின்றிக்கே 'நாட்டையாள்வதிற் காட்டி லும் காடுசென்று உறைவதே எனக்குப் பரமானந்தம்' என்று உள்ளம் பொங்கிக் கூறியது மகாகுணம் என்று ஆசிரியர் திரு வுள்ளம் பற்றுகிருர்.

இவ்விஷயத்தைக் கம்பர் கூறுமிடத்து, (அயோத். கைகே. 108)

இப்பொழுதெம் மனோராலியம்புதற் கெளிதோ? யாருஞ்
செப்பருங்குணத்திராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசகமுரைக்கக் கேட்ட
அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்ற தம்மா

என்றுர். 'உனக்கு நாடில்லை; காடுதான் நீ செல்லவேண்டும்' என்று சொன்னபோது இராமபிரானது திருமுகக் கமலத்தில் தோன்றிய விகாஸத்தை 'அப்பொழுது கட் கூடாகக் கண்டவர்கள் சொல்ல வேண் டுமே யல்லது நாமா அதைச் சொல்ல வல் லோம்;' என்று கைவிட்டவர், ஆகிலுஞ் சொல்லுவோமென்று ஒருவாறு சொல்லு கின்றுர். காடு செல்லாயென்கிற சொல் செவிப்படுவதற்கு முன்னே இராமனது முகம் தாமரை போன்றிருந்ததாம்; அச் சொல் செவிப்பட்டதும் தாமரையை வென்று விளங்கிற்றும்.

இதனுல், காடு செல்வதைப்பற்றிச்சங்கட மில்லையென்பது மாத்திரமேயன்றி அளவு கடந்த ஆனந்தமுண்டாயிற்றென்றவாறு. அவ்வளவு ஆனந்தம் எதற்காக வென் னில், நாட்டில் அரசனுகிச் சிங்காசனத்து வீற்றிருந்தால் பரத்வகுணமொன்றையே காட்டமுடியுமே யல்லது சீலகுணத் தைக் காட்ட அவகாசமே நேரிடாது. அதி கமாக அக்குணத்தைக் காட்டுதற்கென்றே அவதாரம் செய்த தனக்கு அக்குணம் மிக மிக விளங்குதற்குரிய வனவாஸமே யன்றே ஆனந்த கந்தமாகும். ஆனது பற்றியே 'வநவாஸோ மஹோதய:' என்றனன்.

மகரிஷிகளிடத்துக் காட்டிய சீலம் :

இனி,ரிஷிகள் பக்கலிலே சென்று தாழ நின்ற சீலமும் நெஞ்சை யுருக்குவதாகும். ,மகரிஷிகளில் ஆச்ரமங்களிலே தானுகச் சென்று அவர்களைத்தெண்டனிட்டுக் குசல ப்ரச்னம் பண்ணவேணுமென்று தானிருக்க அவர்கள் முற்பட்டு வந்து தம்தம் குறை களை விண்ணப்பம் செய்தபோது 'ப்ரஸீ தந்து பவந்தோ மே ஹ்ரீரேஷா ஹி மமா துலா. யதித்ருசைரஹம் விப்ரை ரூபஸ் தேயை ரூபஸ்தித:' என்று அவர்கள்டம் இராமபிரான் தான் பொறை வேண்டினது சீலகுணத்தை விளக்கினபடியே யாகும். 'அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்ய பராக்ரமம்' என்று சொன்ன விச்வாமித்ர முனிவனை நோக்கி, 'இமௌ ஸ்ம முநிசார் தூல!; கிங்கரௌ ஸமுபஸ்திதௌ, ஆஜ் ஞாபய யதேஷ்டம் வை சாஸநம் கரவாவ கிம்' என்று தன்னையும் தம்பியையும் இவ னுக்கு வேலையாட்களாகத் தெரிவித்துக் கொண்டதும், உமக்கு விருப்பமானபடி யெல்லாம் எமக்குக் கட்டளையிட்டு எங்க ளிடம் பணிவிடை பெற்றுக் கொள்ள வேணுமென்றதும், ஒப்புயர்வற்ற மகாகுண மன்றே. இன்னமும் விரிப்பிற் பெருகு மென நிற்கிறேம்.

(தொடரும்)

# "கம்பன் பிறந்த ஊர்"

(என். எஸ். தாத்தாசாரியார், தஞ்சை)

ஊரும் பேரும் :

"கம்பனே கொம்பனே" என்பது தமிழ்ச் சொல்வழக்கு. கம்பனது சிறப்பை உணர்ந்தவே இச்சொல்வழக்கு ஏற்பட்டது. ஆனல் சமய வழக்கில் "கம்பன்" என்ற சொல் கம்பத்திலே தோன்றிய நரசிங்கப் பெருமானையும், "கொம்பன்" என்ற சொல் கொம்பு கொண்டு பசுக்களை மேய்த்த ஆமருவி அப்பனையும் குறிக்கும் என்பர். இக்கம்பனும் கொம்பனுமே, நம் கொம்பனைக்கம்பனுக்கியவர்கள் எனலாம். தேரழுந்தூரில் இவர்கள் சேர்ந்தே எழுந்தருளியுள்ளனர்.

இத்தேரழுந்தூர் மாயூரத்திற்கு எட்டுமைல் தொலைவில் பஸ் வசதி உள்ள இடமாகும். குற்றாலம்-கும்பகோணம் ரயில் பாதையில் உள்ள தேரழுந்தூர் என்ற புகைவண்டி நிலையத்துக்கு இரண்டு மைல் அருகில் உள்ள செழிப்பான ஊராகும். சேக்கிழார் பெருமான் இத்தலத்தை "ஆமடம்" என அழைக்கிறார். இது ஒரு சிறந்த வைணத்தலமும், சிவத்தலமும் ஆகும். சிவபெருமான் அத்யாபகேசரும் பெருமாள் ஆமருவியப்பனும், இடையே ஞானசம்பந்தப் பிள்ளையார் அமர்ந்திருக்க ஒருவரை ஒருவர் எதிர்நோக்கி இருக்கிறார்கள். திருமங்கை ஆழ்வாரின் பாடல் பெற்றதும், சம்பந்தர், அப்பர் இவர்களின் தேவாரப் பாடல் பெற்றதுமான மாபெரும் புண்ணிய க்ஷேத்திரமாகும்.

சனற்குமாரர் இத்தலத்தில் திருமால், சிவபெருமான் இருவர்களையும் வழிபட்டு உய்ந்தார் என்பர். மக்கட்பேறில்லாதவர்கள் இத்தலத்தின் பெருமையினல் நன் மக்களைப்பெறுவார்கள் என்பது போன்ற தலப் பெருமைகள் ஸ்ரீபத்மபுராணத்தில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மாயூரத்தின் மிக அருகே உள்ள இந்தளூர்ப் பரிமளரங்கன் சினந்திருக்கும் திருமங்கை ஆழ்வாருக்கு இத்தலத்தில் ஓடிவந்து தானே காட்சி தந்தார் என்றும், நயம்படப் பெரியோர் பேசுவார்கள்.

மேலும் இது கம்பன் பிறந்த ஊர், நான்மறைபயின்று தமிழ்மறைபாடும் உத்தமர்கள் வாழும் ஊர். பங்குனி அத்தத்தில் இன்றும் தமிழ்ப் பேரறிஞர்கள் குழுமிக் கம்பன் சீர் பாடும் ஊராகும். ஐந்து கிருஷ்ண க்ஷேத்திரங்களுள் ஒன்ருய் விளங்கும் ஊர். "அந்தி மூன்றும் அனலோம்பும் அணியார்வீதி அழுந்தூரே" எனவும், "புள்ளுப்பிள்ளைக்கு இரை தேடிப்போன காதல் பெடையொடும் அள்ளல் செறுவில் கயல் நாடும் அணியார் வயல் சூழ் அழுந்தூரே" எனவும் அஞ்சனக் குன்றம், அங்கமலக் கண்ணன், தேவாதி தேவன் நின்றஊர் எனவும் திருமங்கைக் கிளி பேசிமகிழ்ந்த ஊரும் இதுவே. கருடவிமானத்தின் நிழல்படரும் இடமானதால் விஷ ஜந்துக்களின் தொந்தரவு இருக்காது எனவும் ஊரார் நம்பிக்கை.

கோயிலும் குளமும் :

ஆமருவி அப்பன், கோசகன், தேவாதி தேவன், அழுந்தை அழகன் என்றெல்லாம் பெருமாள் திருநாமம். ஊருக்கு மேற்கே கிழக்கே திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலத்தில் மூலவர் சாளக்கிராம ரூபியாய் எழுந்தருளி யுள்ளார். இவருக்கு நேர் எதிரில் வேதபுரீசர் சௌந்தரநாயகி அம்மனுடன் கருடதீர்த்தக்கரையில் காட்சி தருகிருர். மறைகாத்த மஹாதேவன் இவரே. ஆமருவி அப்பனுக்குவலப்பக்கத்தில்பிரகலாதன், மார்க்கண்டன் அமர்ந்துள்ளனர். இடதுபுறம், நேர் எதிரில் இருக்கவேண்டியகருடன் மண்டியிட்டுக்காவிரித் தாயாருடன் அமர்ந்துள்ளார். வீதி உலா உத்ஸவமூர்த்தியோ, பின்பக்கம் பசு

மாட்டை அணிந்துகொண்டு, தோள் கண்டார் தோளேகண்டார் என்னும்படிக்கு ஆண்களும் பெண்மை அவாவும் தோளுடன்காண்பார்கண்களுக்குப்பெருவிருந்தாகமுளரிநீங்கிய தையலாகிய தனிக்கோவில் செங்கமலத் தாயாருடன் தரிசனம் தருகிருர். கருட விமானம் மேலே, எதிரில் தைஅமாவாசைச் சிறப்புடன் கூடிய தர்சபுஷ்கரிணியும், சற்றுத் தூரத்தில் கஜேந்திரபுஷ்கரிணியும் உண்டு. 350 அடிகள் நீளமும் 320 அடிகள் அகலமும் கொண்ட பெரிய கோயிலும், உள்ளே ஆங்காங்குச் சுற்றுக் கோயில்களும், கொண்ட மிகப் புனிதமான ஆலயமாகவும் விளங்குகிறது. சிவபெருமானுக்காக மாசி புனர்வசுவில் ஆமருவியப்பன் இராமனுக இன்றும் தரிசனம் தருகிருர்.

தல வரலாறு :

கிருதி என்பவனுடைய மகனும், தவத்தைக் கண்டு மெச்சி இந்திரனுல் கொடுக்கப்பட்ட விமானத்தையும் உடைய, பாதாளவாசியான உபரிசரவணன் என்பவன் தன் விமானத்தில் ஏறிக்கொண்டு செல்லும்பொழுது ஆமருவியப்பனிடம் மரியாதைக் குறைவாக நடந்துகொண்டான். அதனுல் சினம்கொண்ட கருடனுல் ''சாயாகர்ஷணம்'' என்ற மந்திரத்தினுல் தன் கட்டை விரலால் அரசன் தேர்நிழலை மிதிக்க, அது அரசனுடன் இந்த ஊர் தர்சபுஷ்கரிணியில் அமிழ்ந்தது. அகத்தியரின் அருளால் ஆமருவியப்பனை வணங்கி அழுந்திய தேரை மீட்டுக் கொண்டான். ஆயிரம் குடம் வெண்ணெயிட்டு அவன் பெருமையை உணர்ந்தான். அதனுல் தேரழுந்தூராயிற்று. இத்தலம் கன்றுகளை மறைத்துவைத்த பிர்மாவின் கர்வம் அடங்கித் தரிசனம் தந்ததலமாதலால்கிருஷ்ணாரண்யமாயிற்று. இந்திரன் கொடுத்த விமானத்தை ஆமருவியப்பனுக்குக் கருடன் அளித்ததால் கருடன் பெருமாள் அருகே அமர்ந்தார். அகத்தியர் சாபத்தால் காவிரியும் காவிரியின் சாபத்தால் அகத்தியரும் துன்பப்பட அவர்களுக்கு அருளியதலமாகும். மார்க்கண்டனுக்கு மோக்ஷமளித்த தலம். பிரகலாதனுக்குக் கண்ணனைக் காட்சிதந்த தலம். சிவனும் திருமாலும் விளையாடிய சொக்கட்டான் விளையாட்டில் திருமாலுக்குப் பரிந்துபேசி அதனுல் சிவபெருமானுடைய சாபத்தால் பசுமாடாக ஆன பார்வதி அம்மைக்கு இடையனுக இருந்துஆமருவியப்பன்திருவிளையாடல் புரிந்த தலம். பார்வதி பசுமாடாக ஆன கதையை அருகே உள்ள திருவாவடுதுறைஎன்ற ஊரின் பெயருடன் பொருத்தியும் கூறுவார்கள். திருமங்கை மன்னனுக்கு ராஜவேஷம் களைந்து ஆமருவியப்பனுர் பெயர் மாற்றித் தரிசனம் தந்த இடமாகும். தருமதேவதைக்கு பிரத்யக்ஷமானவர்.

திருமங்கை ஆழ்வார் சரணுகதி பண்ணிய நைமிசாரணியம், திருநறையூர், தேரழுந்தூர் என்ற மூன்று தலங்களுள் இதுவும் ஒன்று என்ற ஏற்றத்துடன், இந்த ஊர்ப்பெருமாள் ஆமருவியப்பனின் வலதுதிருக்கையில் லக்ஷ்மி விலாசம் இருக்கிறது என்ற ஏற்றமும் அதிகமுண்டு. கம்பனைத் தந்த ஊர் என்ற சிறப்பாலும் பழமைக்கும் புதுமைக்கும் இந்தஊர் ஒற்றுமையாக அமைந்துள்ளது. இக்கம்பனையும் அவன் மனைவியையும் இன்று கோவில் கோபுரத்தின் உள்பக்கத்தில் தென்பாகத்தில் இன்றும் காணலாம். ஆமருவி அப்பன் கோவிலுக்குத் தென்மேற்கு மூலையில், கம்பர் பிறந்த இல்லம் என்று கூறப்படும் ஒரு மேட்டை இன்றும் காணலாம். அது இன்று புதைபொருள் ஆராய்ச்சி இலாக்காவின் பாதுகாப்பில் உள்ளது. இதற்கு அருகே நடுவயலில் இரவில் பந்தம் பிடித்துக் கம்பன் மூலமாய் இராமாயணத்தை எழுத உதவிய காளி கோவிலையும் காணலாம். கம்பன் பவனி வரும்பொழுது பொதுமக்கள் பயிரை மிதித்து அழித்த இடத்திற்குச்சோழன் வரித்தள்ளுபடி செய்தான் என்ற கருத்தும் மோடி எழுத்தில் எழுதிவைக்கப்பட்டுள்ளது என்பர் பெரியோர். இதன் பெருமையை எழுதினுல் அது ஒரு மாபாரதமாகும்.

சங்ககாலத் தலைநகரம் :

சங்க நூல்களில் இந்த ஊரை ''அழுந்தை'' என்று அழைக்கிருர்கள். புறநானூறு, அகநானூறு, தொல்காப்பியம் அகத்திணைச்சூத்திர உரை இவைகளைக் கொண்டு அழுந்தை மாறன் என்பவர் சில ஆராய்ச்சிக் கருத்துக்களைக் கூறியுள்ளார். வெண்ணிப் பறந்தலையில் சேரமன்னனையும், பதினேரு குறுநில மன்னர்களையும், பாண்டியனையும் வென்ற முதற்கரிகாலன் தலைநகரமாகத் தேரழுந்தூர் இருந்திருக்கவேண்டும் என்பர். ''பதினேரு வேளிரோடு வேந்தர்சாய'' என்று அகநானூற்றடியால் இக்கருத்து உறுதிப்படுகிறது. அழுந்தூர்வேளின் அருமை மகள் அழுந்தை வேண்மாளை மணந்த இளஞ்சேட்சென்னி என்ற மன்னனுக்கும் அழுந்தை தலைநகராகவே இருந்தது என்பதையும் நச்சினுர்க்கினியர் உரையால் அறியலாம். பின்புதான் உறையூர் சோழர்களின் தலைநகரமாயிற்று. முதற் கரிகாலனுடைய படைத்தலைவனும், அறமன்றத் தலைவனுமான 'திதியன்' என்பவனும், புலவர் இரும்பிடர்த் தலையார் என்பவரும் இந்த ஊரில்தான் வாழ்ந்தார் எனவும் தெரியவருகிறது. 'விழுமியனுர்' என்றதிதியன் அவைக்களப் புலவரும் இவ்வூரில் தங்கியிருந்தாராம். இத்துடன் சேக்கிழார் பெருமானும் இவ்வூரின் சிறப்பினை எடுத்துகூறி இந்த ஊரை ஓர் இலக்கியக் களஞ்சியமாக ஆக்கினுர்.

# 'கோது குலாவிய குணம்'

(பாலகவி வயிநாகரம். வே: இராமநாதன் செட்டியார் (தத்புருஷ தேசிகர்)
தேவகோட்டை.

சித்துப் பொருள்களாகிய பதிக்கும் பசுவுக்கும் அடிப்படையிலிருந்தே பற்பல வேற்றுமைகள் இயல்பாக அமைந்திருக்கின்றன. பதி, குற்றஞ்சலவாத குணத்தையுடையவர். பசுக்கள் குற்றங்களுடன் கூடிய குணத்தையுடையவை. அக்குற்றங்கள், அவற்றின் மலத் தொடர்புகளுக்கேற்ப ஏற்றத் தாழ்வுகளுடையனவாய்ப் பொருந்தியிருக்கும். பசுக்களைக் குற்றங்கள் சார்ந்து நிற்பதற்குக் காரணம், அவை அநாதியாகவே பாசத் தொடர்புடையனவாயிருப்பதே யாகும். பதி இயல்பாகவே பாசங்களின் நீங்கியவர் ஆதலின் அவரை எந்த நாளிலும் குற்றம் பற்ற மாட்டாது. செம்பைப் பற்றியிருக்கின்ற களிம்பு பொன்னைப்பற்றுவதில்லை யல்லவா?

சித்தாந்த சைவத்தில் அளவைகள் கொண்டு உறுதி செய்யப் பெற்ற அநாதி நித்தியப் பொருள்களுள் ஆணவ மலமும் ஒன்று. இது செப்பிற் களிம்பு போன்று அநாதியாகவே ஆன்மாக்களைப் பற்றியிருப்பது. "நெல்லிற் குமியும் நிகர் செப்பினிற் களிம்பும், சொல்லிற் புதிதன்று தொன்மையே" என்பது சிவஞான போத உதாரண வெண்பாப் பகுதி. இந்த ஆணவ மலத்தை யொட்டி உயிர்களைப் பற்றியிருக்கும் மற்றொரு மலம் 'மூல கன்மம்' என்று சொல்லப் பெறும். இவ்விரண்டு மலங்களுடன் 'ஆகந்துக மலம்' என்னும் மாயா மலம் படைப்புக் காலத்தில் உயிர்களுடன் இறைவனால் சேர்க்கப் பெற்றுள்ளது. இங்ஙனம் வந்த மும்மலங்களின் சேர்க்கையினாலேயே இயல்பிற் பொருந்துதலில்லாத குற்றங்கள் வந்து பொருந்த, அதனால் எல்லா உயிர்களும் இடுக்கணெய்தி அலமருகின்றன.

உயிர்த் தொகைகள் அனைத்தும் மூன்று பெரும் பிரிவுகளுள் அடங்குவனவாகும். விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் ஆகிய இம்மூவகைப் பிரிவனருள் முதற் பிரிவினர் ஆணவ மலமொன்றே யுடையவர். இரண்டாம் பிரிவினர் அதனோடு கன்ம மலமும் உடையவர். மூன்றும் பிரிவினர் அவற்றொடு மாயா மலமும் உடையவர். இம்மூன்று மலங்களும் தத்தமக்கெனத் தனித் தனியாக அமைந்த குற்றங்களையே குணங்களாக உடையவையாதலின், இவை சார்ந்த உயிர்களும் இக்குற்றங்களைக் கொண்டனவாக ஆகியிருக்கின்றன.

ஆணவ மலத்தின் குணங்களாகிய குற்றங்கள் எட்டு. அவை விகற்பம், சங்கற்பம், குரோதம், மோகம், கொலை, அனுர், மதம், நகை என்பன. மாயா மலத்தின் குணங்களாகிய குற்றங்கள் ஏழு. அவை அஞ்ஞானம், பொய், அயர்வு, மோகம், பைசா சூன்யம், மாத்சரியம், பயம் என்பன. கன்ம மலத்தின் குணங்களாகிய குற்றங்கள் ஆறு. அவை இருத்தல், கிடத்தல், இருவினையியற்றல், விடுத்தல், பரநிந்தை, மேவல் என்பன. இவற்றை,

> கூறிய மூன்று மலத்தின் குணக்குறி
> வேறு கிளக்கின் விகற்பங் கற்பம்
> குரோதம் மோகம் கொலையனு மதநகை
> விராயெண் குணனுமா ணவமென விளம்பின;
> அஞ்ஞானம் பொய் யயர்வே மோகம்
> பைசா சூன்யம் மாத்சரி யம்பயம்
> ஆயவேழ் குணனும மாயைக் கருளின;
> இருத்தலுங் கிடத்தலு மிருவினை யியற்றலும்
> விடுத்தலும் பரநிந்தை மேவலென் றெடுத்த
> அறுவகைக் குணனும் கருமக் கருளின.

என்னும் இருபா இருபஃதுப் பகுதியால் அறியலாம.

உயிரறிவு யாதொன்றுக்கேனும் தன்னை விகற்பித்துக்கொண்டு தன்னையொழிய மற்றை எவரும் அதற்கு ஒவ்வாதவரென்று நிற்பது விகற்பம். ஒன்றைச் செய்வதற்கு உறுதி கொள்ளுவது சங்கற்பம். கோபம் கொள்ளுவது குரோதம். ஆசைப்படுவது மோகம். ஒன்றைச் சொல்லுவது கொலை. துன்பம் பொறுது வருந்தவது அனுர். அகங்காரம் அடைவது மதம். சிரிப்பது நகை.

பொய்யை மெய்யாகக் கொள்ளுவது அஞ்ஞானம். மெய்யை மறைத்துப் பேசுவது, பொய். மறதியால் மயங்குவது அபர்வு. தொடர்பில்லாத பொருளில் இச்சை வைப்பது மோகம். இச்சை இருந்தும் இல்லையென்று ஒளிப்பதுபைசாசூன்யம். பொறாமை கொண்டு பிறர்பால் பகைமை பாராட்டுவதுமாத்சரியம். அஞ்சுவது பயம்.

ஓரிடத்தில் தங்குவது இருத்தல். நோயுற்றுப் படுப்பது கிடத்தல். நல்வினை தீவினைகளைச் செய்வது இருவினை இயற்றல். பற்றுக்களிலிருந்து சிறிது சிறிதாக நீங்குவது விடுத்தல். பிறரைத் தூற்றுவது பரநிந்தை. பால்மாறிப் பிறந்து தூற்றப்பட்டாருடன் பொருந்துவது மேவல்.

இங்ஙனம் ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மலங்களின் இருபத்தொரு குற்றங்களைச் சகல வர்க்கத்து உயிர்களும், ஆணவம் கன்மமாகிய இருமலங்களின் பதினான்கு குற்றங்களைப் பிரளயாகல வர்க்கத்து உயிர்களும், ஆணவ மலத்தின் எட்டுக் குற்றங்களை விஞ்ஞானகலவர்க்கத்து உயிர்களும்உடையனவாயிருக்கும். சிவத்துடன் இரண்டறக் கலத்தலாகிய பரமுத்தியைப் பெறுதலில்லாத எல்லா உயிர்களும் மலச் சேர்க்கையை யுடையனவாதலின் அவையனைத்தும் இம்மூவகை வர்க்கத்துள் அடங்கிக் குற்றமுடையனவாகவே இருக்கும்.

பதியாகிய பரம்பொருள் ஒன்றும், பசுக்களாகிய உயிர்கள் பலவுமாக உள்ளன. உயிர்த்தொகைகளுள் அமரர்கூட்டமும் தேவர் கூட்டமும் இடம் பெற்றிருப்பன. அமரராவார் பசு புண்ணியங்களைச் செய்து அவற்றின் பயனாகவுள்ள இன்ப நுகர்ச்சியின் பொருட்டு மேலுலகத்தை யடைந்து வாழ்ந்து மரணமில்லாதவர் என்ற சிறப்பை உபசாரமாகப் பெற்றிருப்பவர். தேவராவார் சிவபெருமான் அதிட்டித்து நின்று செயற்படுத்த அதனால் தெய்வத் தன்மையும் உருவமும் பெற்றவர்.

அசுத்தமாயா புவனங்களுக்கு அதிபதிகளான பிரமவிட்டுணுக்கள், மும் மலங்களுமுடைய சகல வர்க்கத்து ஆன்மாக்களுள் புண்ணிய மிகுதிப் பாட்டினால் அதிகார சக்தி பெற்றிருப்பவர்கள். உருத்திரன் இரு மலங்களுமுடைய பிரளயாகலர் வர்க்கத்துள் பக்குவனாய் தூலமல வாசனையையுடையவன். இங்ஙனம் படைப்பு, காப்பு, அழிப்பு ஆகிய முத்தொழில்களுக்கும் அதிபதிகளாயிருக்கின்ற பிரமனைப் போன்றார் கடவுளராகக்கூறப் பெறுவார்களாயினும், உயிர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே யாவார்கள். இவர்களே 'தேவர்கள்' என்றும் சொல்லப் பெறுபவர்கள்.

பசு புண்ணியச்சிறப்பும் அதிகாரமலக்குறையும் உடைய இவர்கள் பதி, புண்ணியச் சிறப்பும் மலநீக்கத்துடன் மலவாசனை நீக்கமும் பெற்ற முத்தான்மாக்களைவிடத் தகுதியில் தாழ்ந்தவர்களாதலின், இவர்கள் சிவத்தோடு கொள்ளும் உறவு அத்துணைச் சிறந்ததாகமாட்டாது. இதனாலேயே திருக்கயிலாய மலையில் திருநந்தி தேவரது தடைக்குட்பட்டுப் பிரம விட்டுணு வாதியோரும் அவரால் தடுக்கப் பெறாதவர்களாய்த் திருத்தொண்டர்களும் உள்ளார்கள் என்று திருத்தொண்டர் புராண முதலிய அருள் நூல்கள் கூறுகின்றன. இதனைத் திருமூலதேவ நாயனார் தமது திருமந்திரமாலைக்கடவுள்வாழ்த்துப்பதினாறுவதுசெய்யுளில் தெளிவு படுத்துகின்றார். அத்திருப் பாட்டு,

> கோது குலாவிய கொன்றைக் குழற்சடை
> மாது குலாவிய வாணுதல் பாகனை
> யாது குலாவி அமரரும் தேவரும்
> கோது குலாவிக்குணம்பயில் வாரே.

என்பதாகும்.

சிவபெருமான் உமையொரு பாகர். அவரது அருட் சக்தி வடிவமே உமையம்மை யாராவார். 'அருளது சத்தியாகும் அரன் தனக்கு' என்பது சிவஞான சித்தியார். ஆன்மாக்களுக்கு அருட்சத்தி பதிவதனாலேயே மலநீக்கமும், சிவப்பேறும் சித்திக்கும். எனவே முத்திப் பேற்றுக்குச்சிவசத்திகளின் கூட்டுறவு இன்றியமையாதது. அங்ஙனம் சிவசத்திகள் ஒன்றியிருக்கும் திருவுருவமே, இத்திருப் பாடலிற் குறிக்கப் பெற்றிருப்பது உணரத் தக்கதாகும்.

சிவபெருமான் கொன்றைப் பூவைச் சூடுபவர். அது, கோது எனப்பெறும் பூ நரம்புகளையுடையது. அதனைச் சூடிய முடி கூந்தலாகவும், சடையாகவும் இருக்கின்றது. கூந்தல் பெண்பாலையும் சடை ஆண்பாலையும் காட்டும். மாது என்பது அழகு. அழகுக்கு எல்லையாக விளங்குபவள் உமாதேவி. ஒளிமிக்க நெற்றியை யுடைய அவளை ஒருபாகத்தில் கொண்டிருப்பவர் சிவபெருமான்.

அம்மையப்பராகிய சிவபெருமானை அமரரும் தேவரும் குலாவிக் கூடிமகிழ விரும்புகி

றார்கள். சுற்றமற்ற குணப்பொருளாகிய அவரை மலச் சேர்க்கையால் உண்டாகிய குற்றங்களையும், அவர் வழங்கிய அதிகார சத்தியால் உண்டாகிய குணங்களையும் உடையவர்கள் கூடிக் குலாவி என்ன பயனை அடைய முடியும்? தாமரைத் தடாகத்தில் வாழும் தவளை தாமரை மலரின் நலங்களை நுகரும் தகுதி பெறாதிருத்தல்போல, திருவருளில் தோயும் அமரரும், தேவரும் அதன் நலத்தை முற்ற நுகரும் வாய்ப்பில்லாதிருப்பர். மல நீக்கம் பெற்ற சிவஞானியரே சிவபரம் பொருளைக் கூடி மகிழ்ந்து இன்புறுதற்குரியர் என்பது முதலாகிய பேருண்மைகளை இத்திருப்பாடலின் மூலம் ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார்.

—தொடரும்.

## செய்திச் சுருக்கம்

சிவஞான போத வகுப்பு: கோவை மாவட்டம் புன்செய்ப் புளியம்பட்டி அருள்நெறி மன்றத்தின் சார்பில், அவிநாசிப் பெருந்தலத்தில் 14.6.67 முதல் 9.7.67 முடிய, ஏறத்தாழ ஒரு மாத காலம், காஞ்சிபுரம் தொண்டமண்டல ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களால், அவிநாசி ஐந்நூற்றுச் செட்டியார்களின் திருமடத்தில் சிவஞான போத வகுப்பு நடத்தப் பெற்றது. நாடோறும் 500 பேருக்கு மேல் வகுப்பிற்கு வந்து பாடம் கேட்டுப் பயன் பெற்றனர். அவிநாசியப்பர் திருக்கோயிலில் 9.7.67 அன்று சிவஞான போத வகுப்பு நிறைவு விழா, மிகவும் சிறப்புற நடைபெற்றது. புன்செய்ப் புளியம்பட்டி அன்பர்களில் 16 பேரும், அவிநாசி அன்பர்களில் 14 பேரும், சமய தீக்கை செய்து கொண்டனர். அன்பர் ஒருவர் விசேட தீக்கை பெற்றார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளுரைகளால், அவிநாசித் தலத்திலும், அதனைச் சார்ந்த பல ஊர்ப் பகுதிகளிலும், நல்ல சமயவுணர்வும் எழுச்சியும் ஏற்பட்டுள்ளன.

— ஆசிரியர்.

# வேதங்களில் காணப்படும் காவிய ரசம்

(வேதார்த்த ரத்னகர ஸ்ரீ அக்நிஹோத்ரம் ஸ்ரீ தாதாசாரியார் அவர்கள், கும்பகோணம்.)

ஒரு மரத்தில் இரு பறவைகள்:

வேதம் ஒரு சிறந்த இலக்கிய நூல். மந்திரங்களிலும் பிராமணங்களிலும் பலவித காவிய ரசத்தை நாம் அனுபவிக்கிறோம். சிறப்பாகச் செய்யுள் நடையில் அமைந்துள்ள மந்திரங்களில் காவிய நடை விளையாடுவதை நாம் கவனிக்காமலிருக்க முடியாது. வேதம் மத நூல் ஆதலால் கடவுளைப் பற்றியும் ஆன்மாவைப் பற்றியும் பேசும் இடங்களில் காவியச் சுவை வெளியாகியது. உயர்ந்த கொள்கைகளை மறை முகமாக வெளியிட்டு மறைஎன்றபெயரைப் பெற்ற வேதம் உருவகத்தைப் பின்பற்றிக் கொளகைகளை வெளியிடுவது மிகவும் கவனத்திற்குரியது. இருக்கு வேத மந்திரங்களில் உருவகம் தாராளமாகக் கையாளப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். இருக்கு வேத மண்டலத்தின் 164-ஆவது சூக்தம், உலக அறிவாளிகளால் கொண்டாடப்பட்ட உருவகக் கயஞ்சியம். அங்குள்ன உருவகத்தை இபபோது நாம் கவனிப்போம.

கடவுள் உலகத்தைப்படைத்தார். உயிரினங்களுக்கு உடலைக் கொடுத்தார். பரமாத்வாகிய தானும் ஜீவாத்மாவும் இயற்கையில் ஒன்று சேர்நது வாழ்நது வருகிறார்கள். கடவுள் இயற்கையில் வாழும் நோக்கம் வேறு. ஜீவாத்மாவின் நோக்கம் வேறு. இந்த உணமையை ஒரு மந்திரம் உருவகத்தில் பின்வருமாறு குறிபபிடுகின்றது. ''இரண்டு பறவைகள் சேர்ந்தே வாழ்பவைகள். இணைபிரியாத நண்பர்கள். ஒரே மரத்தைத்தழுவிககொண்டு இருக்கின்றன. அவைகளில் ஒன்று அநத மரத்தின் கனியைத் தின்று வாழ்கிநது. மற்றொன்று கனியைத் தின்னுமலே விளங்கி வருகிறது'' என்று.

இங்குக் குறிப்பிடப்படும் மரம் வாழ்நாளைத் தவிர வேறு இல்லை. இதுவும் இயற்கையின் அடிப்படையில் அமைந்து உள்ளது. இங்கு சொல்லப்படும் இரண்டு பறவைகளில் ஒன்று ஜீவாத்மா. மற்றொன்று இறைவன். தான் படைத்த இயற்கையில் கடவுள் இருந்து வருவதையும், ஜீவாத்மா வினைப்பயனை அனுபவிக்க இயற்கையில் வாழ்ந்து வருவதையும் இந்த உருவகம் விளக்குகிறது. வினைப்பயனை அனுபவிக்க ஜீவாத்மா இயற்கையில் வருகிறான். அவனுக்கு உதவி செய்ய ஜீவாத்துமா இயற்கையை நுகர்ந்து அனுபவிக்கிறான். இறைவன் இயற்கையின் வாழ்க்கையில் உறவில்லாமலே வாழ்கிறான். இனி இங்குள்ள சில உட்கருத்துக்களைக் கவனிப்போம்.

பறவைகளைக் குறிப்பிடும்போது மூன்று அடை மொழிகள் காணப்படுகின்றன. ''நல்ல இறக்கை உள்ளவைகள்'', ''சேர்ந்தே வாழ்பவைகள்'', ''இணைபிரியாதவை'' என்று இம்மூன்றும் ஜீவபர சம்பந்தத்தை விளக்க ஏற்பட்டவை. மற்றொரு வழியில் இறைவன் ஆத்மா இவர்களின் இயற்கையையும் இவை குறிப்பிடுகின்றன என்றும் கூறலாம். அதைக் கவனிப்போம்.

நல்ல இறக்கைகள் உள்ள பறவைகள் என்ற அடைமொழி, பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும்உள்ள தெவிய்க அழகைக் குறிப்பிடுகிறது என்று கூறலாம். பறவைகளுக்கு இரண்டு பக்கத்தில் இறக்கைகள் இருந்து வருகின்றன. அதே விதமாகவே ஜீவாத்மாவிற்கு, இரண்டு இறக்கைகள் போல இரண்டு இயல்புகள் இருக்கின்றன. பரமாத்மாவிற்கும், இரண்டு இறக்கைகள் போல, இரண்டு இயல்புகள் இருந்து வருகின்றன. ஜீவாத்மாவிற்குள்ள இரண்டு இயல்புகளில் ஒன்று கர்மா, மற்றொன்று ஞானம். கர்மா என்பது ஆன்மாவின் செயல்களைக் குறிக்கும். ஞானம் என்பது இவைகளின் அடிப்படையான அறிவைக் குறிப்பிடும். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று உதவியாக இருப்பதைப் பார்க்கிறோம். அறிவை அடிப்படையாகக் கொண்டுதான்செயல்கள் ஏற்படுகின்றன. செயல்களுக்குப் பயன்படாத அறிவு பயன் அற்றது. அறிவு வடிவாக உள்ள ஆத்மா

வின் செயல்கள் இதனாலேயே இயற்கையின் செயல்களிலிருந்து வேறுபட்டு நிற்கின்றன. அறிவு செயல் இரண்டும் ஆன்ம வர்க்கத்திற்கு இன்றியமையாதவையாக இருப்பதால், இவைகளை இறக்கைகளாகக் குறிப்பிடத் தடையில்லை. இனி, இறைவனுடைய இறக்கைகளைப் பற்றிக் கவனிப்போம். இறைவனின் இயல்புகளில் நிக்கிரகம், அனுக்கிரகம் இவை முக்கியமானவை. அனுக்கிரகம் என்பது ஆன்ம வர்க்கத்தைக் கை தூக்கி விட ஏற்பட்டது. நிக்கிரகம் என்பது ஆன்மாக்கள், தத்தம் வினைப்பயனை அனுபவிக்க உதவுகிறது. அவ்விதமே அறம் அருள் என்ற இரண்டு கூறுகளும் கடவுளிடமிருந்து வருகின்றன. இவைகளையும் இறக்கைகளாகக் குறிப்பிடலாம். அறம் என்பது உலக நிலையைப் பாதுகாக்க ஏற்பட்டது. இதனால் இறைவன் பட்சபாத நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு நடுநிலையையிலிருந்து உயர்த்தப்படுகிறான். அவரவர் செயலுக்குத் தகுந்தாற்போல் கடவுள் பயன் அளிப்பதால், அறநெறி இறைவனுக்கு அவசியமாகிறது. அவ்விதமே அறநெறியை எப்போதும் பின்பற்றினால் மோட்சத்தை அடைய இடம் ஏற்படாததால் அறநெறிக்கு எதிர்த் தட்டாகத் தவறு செய்தவனைத் திருத்தி மோட்சத்தை அளிக்க அருள் நிற்கிறது. அருள் அறநெறிக்கு அப்பாற்பட்டது. இந்த இரண்டும் கடவுளிடம் வருவதையே இறக்கையாக வேதம் குறிப்பிடுகிறது எனக்கூறலாம்.

இனி ஜீவ்பரர்கள் சேர்ந்தே இருப்பவர்கள் என்று சொல்லப்படுவதைக் கவனிப்போம். இது ஜீவபரர்களுக்குள்ள ஒற்றுமையைக் குறிப்பிடுகிறது. ஜீவாத்மாவும் பரமாத்மாவும் வேறுபட்டவர்களாய் இருந்தாலும் இரண்டு பேர்க்கும் உள்ள சொரூபம் பொதுவானதாகவே காணப்படுகிறது. இருவரும் மெய்ம்மை, அறிவு, தூய்மை, ஆனந்தம் இவைகளை இயற்கையாகக் கொண்டவர்கள். ஒரே இயற்கை உள்ள இரண்டு தத்துவங்களாகப் பிரிந்து நிற்பதால் இவைகளின் ஒற்றுமை இங்குக் குறிப்பிடப்படுகிறது. இவர்களுள் காணப்படும் ஒற்றுமை அல்லது ஒருமை இயற்கைக்கு எதிர்த் தட்டானது. இயற்கை ஜடவஸ்து மாறுதலை அடிக்கடி அடைவது. ஒரே சுபாவம் உள்ள ஜீவாத்மா, பரமாத்மா இருவரையும் ஏன் ஒப்ப வேணும் என்பது தனி சர்ச்சை. உண்மையாகவோ தோற்றம் காரணமாகவோ ஜீவாத்மா, பரமாத்மா இவர்கள் வெவ்வேறாக இருந்தாலும் இருவர்களுடைய இயற்கையும் ஒன்று என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆக இவ் ஒற்றுமையைக் குறிப்பிடவே இங்கே ஒரே இயற்கை உள்ளவர்கள் என்று குறிப்பிடப்படுகிறது. அடுத்தாற்போல், ஜீவபர சம்பந்தத்தைக் குறிப்பிட "இருவர்களும் நண்பர்கள்" என்று சொல்லப்படுகிறது. ஜீவனுக்குப் பரனே துணைவன்; பரனுக்கு ஜீவனே துணைவன். ஜீவ பர சம்பந்தம் பல காரணங்களைக் கொண்டு இருந்து வந்தாலும், நட்பு இங்கே முக்கியமானதாக விளங்குகிறது. நட்பு என்பது சமமானவர்களிடமே சாத்தியமானதால் இந்த உருவகமும் ஒரு வழியில் ஜீவபரர்களின் சமமான நிலையினைக் குறிப்பிடுகிறது எனக் கூறலாம். இறைவன் ஆத்மாவிற்குத் துணைவனாகவும் வழிகாட்டியாகவும் இருந்து வருகிறான். ஜீவனுடைய சுக துக்கங்களைத் தன்னுடையனவாகவே பாவிக்கிறான். அவைகள் சுகத்தை அடையச் செய்யவும், கஷ்டத்தைத் தவிர்த்துக்கொள்ளவும் இறைவன் உதவுகிறான். அவ்விதமே ஆன்மாவும் கடவுளுக்குத் துணையாகவே நிற்கிறான். எங்ஙனே எனில், தன்னால் படைக்கப்பட்டுள்ள உலகில் ஜீவனின் துணையைக் கொண்டே கடவுள் தன் காரியங்களைச் செய்கிறான். அதனாலும் இறைவனுக்கு ஆன்மா துணைவன் ஆகிறான்.

இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள உறவுகளில் நண்பன் என்ற உறவு மிகவும் புனிதமானது. பெருமை வாய்ந்தது. ஜீவனுடைய நிலையை உயர்த்துவது. அதனாலேயே இருக்கு வேதம் பல இடங்களில் இறைவனை ஜீவனின் நண்பனாகக் குறிப்பிடுகிறது. இவ்விரண்டு பட்சிகளும் வாழுமிடம் ஒரு மரம். மரத்தில் அல்லவோ பட்சி வசிக்கும். ஆனால் ஜீவபரம் ஆகிய பறவைகள் வசிக்கும் மரம் சாதாரண மரம் அல்ல. வாழ்நாள் ஆகிய மரம்! இயற்கையில் அல்லவோ இறைவனும் ஆத்மாவும் இருந்து வருகிறார்கள்! தான் படைத்த உலகைக் கடவுள் கைவிட்டு விடாமல் ஜீவாத்மாவின் உதவியைக் கொண்டு இயற்கையின் உட்புகுந்து வசித்து வருகிறான். இயற்கையில் புகுந்ததன் மூலமும் ஜீவாத்மாவிற்கு உதவுதன் மூலமும், இயற்கையையும் இயங்க வைக்கிறான். இதனால் இருவர்களுக்கும் இயற்கையில் வாழ்வு ஏற்படுகிறது. வாழ்க்கையை மரமாகக் குறிப்பிடுவது வேதத்தின் மரபு. ஒரு சிறு விதையிலிருந்து உண்டான கப்பும் கிளையுடனும்

கூடியமரத்தை, வாழ்க்கைக்கு உருவகமாக நினைப்பது ஆச்சரியம் அன்று. ஒரு சிறிய வினைப் பயன் மகத்தான வாழ்க்கையை விளைவித்திருக்கிறது அன்றோ? வாழ்க்கையின் மூலம் தெரியாமல் இருக்கிறது என்பதைக் காண்பிக்க, வாழ்க்கை ஆகிய மரத்தைத் தலைகீழான மரம் என்று மற்றொரு இடத்தில் வேதம் கூறுகிறது. கீதையில் பகவான் இந்த வழியைப் பின்பற்றுகிறான். இந்த மரத்தில் ஜீவபரர்கள் வசித்து வருவதை அன்புடன் தழுவுவதாகவேதம் கூறுகிறது.

ஜீவாத்மா தன்னுடையவினையின் பயனை அனுபவிக்க இயற்கையை அன்போடு தழுவி நிற்கிறான். ஆனால் பரமாத்மாவிற்கு இது பொருந்துமா என்ற கேள்வி பிறக்கிறது. உண்மையில் இது பொருந்தும். ஏனென்றால் தன்னுடைய நண்பனை ஆத்மாவிற்கு உதவுதற்காகவே இவனும் அன்போடு தழுவுகிறான். ஜீவாத்மாவினிடத்தில் உள்ள அன்பு அவனுடைய அன்பிற்குரிய இயற்கையிலும் பிரதிபலிக்கிறது. மரத்தில் வாழும் பறவைகள் அதன் பயனை நுகர்வனவாக இருக்கும். ஆனால் இந்த இரண்டுபறவைகள்விஷயத்தில்மாறுதலைக் காண்கிறோம். ஒரு பறவை மரத்தின் கனியைப் புசிக்கிறது. மற்றொன்று கனியைப் புசிக்காமலே விளங்கி வருகிறது. ஜீவாத்மா வினைப்பயனுகை விளைந்த வாழ்க்கையைச் சுவைத்துப் புசித்து வளர்ந்து வருகிறான். பரமாத்மாவிற்கு வினைப்பயன் இல்லாததால் மரத்தின் கனியைச் சுவைப்பதற்கு இடமே இல்லை. ஆனால் இது இறைவனுக்குக் குறைவாக அமையவும் இல்லை.

கடவுளைப் பறவையாக விளக்குவது ஒரு புராதனமான வழி. ஒரு காலத்தில் ஜெருசலம் ஆலயத்தில் ஒரு பட்சி வடிவத்துடன் கடவுளை வழிபட்டு வந்தார்கள் என்று சரித்திரக்காரர்கள் கூறுகிறார்கள். குறிப்பாக இரண்டு பட்சிகள் ஒருமரத்தில் இருப்பதான கருத்து, மொஹஞ்சோ தாரோ முத்திரையிலும் காணப்படுகிறது.

## செய்திச் சுருக்கம்

குருபூசை விழா :

திருநாவுக்கரசு சுவாமிகள் திருவவதாரம் செய்தருளிய திருவாமூரில் சித்திரை மாதம் 18, 19, 20 தேதிகளில் சிறப்புற நிகழ்ந்தது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ மாதினியார் சிவபூசை நிலையத்தைத் திறந்தருளினார்கள். ஸ்ரீலஸ்ரீ மீனாட்சிசுந்தர தேசிக சுவாமிகள் அவர்கள் திருமுன்னர், 81 சிவனடியார்கள் சிவபூசை புரிந்தனர். அப்பர் தேவார அருந்தமிழ் மகாநாடு, பண் ஆராய்ச்சி மகாநாடு முதலியனவும் சிறப்புற நடைபெற்றன. பேரறிஞர்களும் பெருமக்களும் ஆகிய பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சிதம்பரம் சுரலய இசைவள்ளல் ஓதுவாமூர்த்தி திரு. கனகசபைப் பிள்ளை அவர்கள், அப்பர்சுவாமிகளின் சந்நிதியில் ''திருமுறைக் கலாநிதி', என்னும் சிறப்புப் பட்டம் பொறித்த பொற்பதக்கமும், பணமுடிப்பும் வழங்கிப் பொன்னாடை போர்த்திச் சிறப்பிக்கப் பெற்றார்.

—ஆசிரியர்.

# பெரும் பயணம்
## (பாண்டவர்களுடைய வரலாறு)

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

பாண்டவர்கள் துரியோதனாதிகளின் வதத்திற்குப் பின்னர், அத்தினபுரத்தை முப்பத்தாறு ஆண்டுகள் அறநெறி வழுவாது அரசு புரிந்தார்கள்.

தருமர் யதுகுலத்தினர் அழிந்தையறிந்து திடுக்கிட்டார்; அருச்சுனனைப் பார்த்துக் கூறுகின்றார். "அறிவுள்ளவனே! காலமானது எல்லா உயிர்களையும் முடிவு பெறச் செய்கின்றது. இனி நாம் இந்த அரசாட்சியில் ஈடுபட்டிருப்பது நன்றன்று. துறவு என்ற ஒன்றினால்தான், பிறவிப் பெருங் கடலைத் தாண்ட முடியும். காலத்தை வென்றவர்கள் ஒருவருங் கிடையாது. காலம் என்ற சக்கரம், இடையறாது சுழன்று கொண்டிருக்கின்றது. நாம் அதில் அகப்பட்டிருக்கின்றோம். காலாதீதமான பரம் பொருளை, நாடி நாம் தவ வனம் போவோம்" என்றார்.

தனஞ்சயன், "அண்ணா! தங்கள் கருத்தின்படி செய்வோம். இதுவே கடைத்தேறும் வழி" என்றான். பீமனும் நகுலனும் சரியென்றார்கள்.

சகாதேவன், "நிலத்தை விற்றவனும் வாங்கினவனும், பொருளாசையால் சண்டையிடக் கண்டேன். அங்குள்ள அதிகாரியும் பொருள் இச்சையுடன் இருக்கிறான். கலியுகம் வந்துவிட்டது; இனி நாம் இங்கிருப்பது உசிதம் ஆகாது" என்றான்.

யுதிஷ்டிரர், அபிமன்யுவின் குமாரனை பரிட்சித்துக்கு முடி சூட்டினார். அவனிடம் அரசுரிமையை ஒப்புவித்தார். திருதராஷ்டிரனுக்கு வைசியமாதிடம் பிறந்த யுயுத்சு என்பானை அழைத்து "நீ பரிட்சித்துக்கு நல்ல துணையாக நின்று அரசாங்க வேலையைப் பார்த்துக்கொள். இந்த அரசை நலல முறையில் நடத்துவது நின் பொறுப்பு" என்றார்.

சுபத்திரையைப் பார்த்து, "அம்மா! நீ எங்களுடன் வரக்கூடாது. உன் பேரனாகிய அந்தப் பரிட்சித்தைப் பாதுகாப்பாயாக. இவன் குருகுலத்துக்கு இனி தலைவன். கண்ணபிரானுடைய பேரனுடைய மகன் வஜ்ரன், இந்திரப்பிரஸ்தத்தை அரசு புரிவான். அவனையும் பரிட்சித்தையும், நீ இரு கண்களாகக் காத்தருள் புரிவாயாக" என்று கட்டளை யிட்டார்.

தருமபுத்திரர் வசுதேவர் பலராமர், கண்ணன் முதலியவர்கட்கு நீரால் தர்ப்பணம் செய்து, அவர்களின் நலங்களை வேண்டித் தான தருமங்களைச் செய்தார். மார்க்கண்டேயர், பாரத்துவாசர், யாக்ஞவல்கியர் என்ற முனிவர்களைச் சுவையுள்ள உணவு தந்து உபசரித்தார். பட்டாடைகள் நவரத்தினங்கள், கிராமங்கள், வாகனங்கள் முதலியவைகளை, உலகப் பொதுநலங் குறித்தே காலங்கழிக்கும் அந்தணர்கட்கும் வறியவர்கட்கும் வழங்கினார். குருநாதராகிய கிருபரை அழைத்து, ஆசனத்தில் அமரச் செய்து பூசித்து, சீடனை பரிட்சித்தை அவரிடம் ஒப்பித்தார். பின்னர் பட்டினத்து மக்களை யெல்லாம் அழைத்து, "நான் தவவனம் போவேன், இனி இந்த பரீட்சித்து உங்கட்குத் தலைவன்; உங்களை இவன் புரப்பான்; குறைகளை யகற்றுவான். எனக்கும் என் தம்பியர்கட்கும், நீங்கள் மனம் உவந்து விடை கொடுங்கள்" என்றார்.

நகரமாந்தர்கள் தருமருடைய சொல்லைக் கேட்டுத் துயரம் உற்றார்கள். "எங்கள் அரும்பெருந் தலைவராகிய தாங்கள் எம்மை விட்டுப் பிரிவதை நாங்கள் எவ்வாறு சம்

மதிப்போம்?'' என்று கூறிக் கண்ணீர் சிந்தினார்கள். தருமர் அவர்களைச் சமாதானப் படுத்தினார்.

பின்னர் பாண்டவர்கள் ஐவர்களும் திரௌபதியும் தங்கள் உடம்பில் அணிந்திருந்த விலை மதிக்க முடியாத அணிகலன்களைக் கழற்றி விட்டார்கள். மரப்பட்டைகளைக் கட்டிக் கொண்டார்கள். தினம் வளர்த்த அக்கினியை, முடிவில் செய்யக் கூடிய யாகத்தைச் செய்து, நீரில் விடுத்துப் புறப்பட்டார்கள்.

அப்போது ஆண்களும் பெண்களும் 'ஓ' என்று உரக்க அழுதார்கள். தருமர், தம்பியர் நால்வரும், துருபதராஜகுமாரியும் பின்வரக் கானகத்தை நோக்கிச் சென்றார். அவருடன் ஒரு நாயும் தொடர்ந்து சென்றது. நகரத்து ஜனங்களும் கிருபரும் சிறிது தூரம் போய் வழிவிட்டார்கள். நாக கன்னிகையான உலூபி கங்கையில் பிரவேசித்தாள். சித்திராங்கதை பப்ருவாகனன் ஆளுகின்ற மணலூர்புரத்தை (மதுரைக்கு அருகில் உள்ள பட்டினம்) நோக்கிப் புறப்பட்டாள். சுபத்திரை முதலியவர்கள் பரிட்சித்தினிடம் நின்றார்கள்.

பாண்டவர்கள் சன்யாசிகளாகி, யோக நெறியை மேற்கொண்டு, ஒன்றிலும் பற்றின்றி, கீழ்த்திசை நோக்கிச் சென்றார்கள்.

பாண்டவர்கள் இப்போது மஹாப்ரஸ்தானம் என்ற ஒரு விரதத்தை மேற்கொண்டார்கள். இது பெரும்பயணம் என்று பொருள்படக் கூடியது. அதாவது எங்கும் தங்காமலும் நிற்காமலும் இருக்காமலும் சென்று கொண்டே யிருப்பது. முத்தியை நாடிச் செல்லும் பெரும்பிரயாணம்.

முதலில் யுதிஷ்டிரர் சென்றார். அவர் மனம் எதையும் நாடவில்லை. அது பரம்பொருள் 'ஒன்றையே நாடி, சித்திரத்தில் எழுதிய தீபம்போல் ஆடாமல் அசையாமல் இருந்தது.

அவருக்குப்பின் பீமன், பீமனுக்குப் பின் அர்ச்சுனன், அர்ச்சுனனுக்குப்பின் நகுலன், நகுலனுக்குப்பின் சகாதேவன், சகாதேவனுக்குப் பின் திரௌபதி தேவி, அம் மாதரசிக்குப் பின் நாய். இப்படிச் சென்றார்கள். அர்ச்சுனன் மட்டும் காண்டீபத்தையும், குறைவில்லாத இரு அம்புப் பெட்டிகளை யும் விடாமல் சுமந்து சென்றான். அதனை அவனுக்கு விட மனம் இல்லை. பல தேசங்களையும் மலைகளையுங் கடந்து லௌஹித்தியம் என்ற கடலைக் கண்டார்கள்.

எதிரில் மலையைப் போல் ஒருபெரிய வடிவம் வழி மறைத்து நின்றது. ''பாண்டவர்களே! நான் அக்கினித்தேவன். இந்தக் காண்டீபத்தால் இனி என்ன பயன்? முன் நான் இதனைக் காண்டவவனம் எரிக்கும் தருணத்தில் தந்தேன். இதனை இந்தக் கடலில் எறிந்தால் வருணனிடம் சேரும். கிருஷ்ணனிடம் இருந்த சக்கரமும் போய் விட்டது. ஆதலால் இந்த வில்லையும் அம்பருத்தூணிகளையும் விட்டுவிடுங்கள்'' என்று கூறி அந்த உருவம் மறைந்து விட்டது.

உடனே அர்ச்சுனன் காண்டீபம் என்ற புனிதமான வில்லையும், அம்புப் புட்டில்களையும் கடலில் எறிந்து விட்டான்.

பாண்டவர்கள் பூமியைவலமாகவருபவர்களாகிச் சென்றார்கள். மேற் கடலைக் கண்டார்கள். வடதிசை நோக்கிச் சென்று, இமயமலையைப் பார்த்தார்கள். அதனைக் கடந்து வாலுகார்ணவம் (பெரிய மணல் மேடு) என்ற இடத்தைப் பார்த்தார்கள். அதனையும் தாண்டி மேருமலையைக் கண்டார்கள்.

யோகநெறியைத்தாங்கி வடக்கு நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்தார்கள். திரௌபதி யோகந் தவறினவளாகிப் பூமியில் விழுந்தாள். தருமரைத் தவிர மற்ற நால்வர்களுந் திரும்பிப் பார்த்தார்கள். இரக்கம் நிறைந்த பீமசேனன், 'அண்ணா! திரௌபதிஅறநெறி வழுவாதவள். அவள் இவ்வண்ணம் விழுந்ததற்குக் காரணம் யாது?' என்று கேட்டான்.

தருமநந்தனர், ''பீமா! உலகப்பற்றை விட்டுவிடு; பந்த பாசத்தைச் சுடு; திரௌபதி அர்ச்சுனனிடத்தில் அதிக அன்பைச் செலுத்தினாள்; சமமானதன்மை யின்மையால் அவள் விழுந்தாள்'' என்றார்.

சிறிது தூரம் சென்றதும் கூரிய அறிவும் சீரியகுணமும் படைத்த சகாதேவன் கீழே விழுந்து விட்டான். பீமசேனன் திரும்பிப் பார்த்துப்பரிவுடன், ''அண்ணா! நமக்கு அன்புடன் பணிவிடை புரிந்த சகாதேவன் விழுந்து விட்டான். என்ன காரணம்?'' என்று வினவினான்.

CONNEMARA PUBLIC LIB

தருமராஜர், "பீமா! இவன் கல்வியில் தனக்கு நிகரானவன் ஒருவனும் இல்லை யென்று கருதியிருந்தான். அந்தக் குற்றத்தால் இவன் வீழ்ந்தான்" என்றார்.

பின்னர் நகுலன்விழுந்து விட்டான். அழகுள்ளவனும் வீரனுமான நகுலன் விழுந்ததைக் கண்ட பீமன், "அண்ணா! இதோ நகுலன் விழுந்துவிட்டான். இதற்கு என்ன காரணம்?" என்று கேட்டான்.

தருமர், "தம்பீ! இவன் அழகில் எனக்குச் சமானமானவன் ஒருவனும் இல்லை; நான் ஒருவனே அழகில் மேலானவன் என்று கருதியிருந்தான். அதனால் விழுந்தான். எதிலும் அகங்காரம் கூடாது. திரும்பிப் பாராமல் வா" என்றார்.

திரௌபதி சகாதேவன் நகுலன் இவர்கள் ஒருவர்பின் ஒருவராக விழுந்ததைக் கண்டு மனம் வருந்திய அருச்சுனன் விழுந்தான். ஒருவராலும் வெல்லமுடியாதவனும் இந்திரனுக்குநிகரானவனும், பகைவர்களை அழிப்பவனும் ஆகியவிஜயன் விழுந்துமரிப்பதைக் கண்ட பீமசேனன், "அண்ணா! இதோ அர்ச்சுனன் விழுந்துவிட்டான். இவன்பரிசுத்தமானவன். விளையாட்டுக்கும் பொய்சொல்லாதவன். அவ்வாறிருக்க ஏன் விழுந்தான்?" என்று வினவினான்.

தருமர், "தம்பீ! மூன்றாம் நாள் போரில் இவன்கிருஷ்ணரிடம், "நான் ஒருவனாகவே பகைவர்கள் அனைவரையும் வதைப்பேன்" என்று கூறினான். அப்படிச் செய்யவில்லை. எல்லா வில்லாளிகளையும் அவமதித்தான். அதனால் இது நிகழ்ந்தது என்று சொன்னார். சிறிது தொலைவு போனதும் பீமன் விழுந்தான். "அண்ணா! இதோ நானும் விழுந்தேன். இதற்கு என்ன காரணம்?" "பீமா! நீ வலிமையால் பிறரை மதியாமல் தற்புகழ்ச்சி செய்துகொண்டாய்; இன்சொல் கூறினாயில்லை. அதனால் பூமியில் விழுந்தாய்" என்று கூறினார். யுதிஷ்டிரர் பீமனையும் திரும்பிப் பாராமல் சென்றார். நாய் மட்டுந் தொடர்ந்து சென்றது.

இந்திரன் பொன் மயமான ஒரு தேருடன் வந்தான். விண்ணிலும் இனிய ஒலியுண்டாகியது. இந்திரன் தருமபுத்திரரைப் பார்த்துத் "தங்களுக்கு என்று பொற்றேர் கொண்டு வந்தேன். இதில் இந்த உடம்புடன் ஏறும்" என்றார்.

தருமர், "இந்திரனே! சுவர்க்கம் வருவதற்கு எனக்கு விருப்பம் இல்லை. என்னுடைய தம்பியரும் தரும பத்தினியும் விழுந்து மரித்தார்கள். அவர்கள் இன்றி நான் மட்டும் மேல் உலகம் போக விரும்பேன்" என்றார்.

இந்திரன், "தருமரே நீர் துயரப்பட வேண்டாம். அவர்கள் மானிட உடம்பை இங்குப் போட்டுவிட்டுச் சுவர்க்கம் சென்றிருக்கிறார்கள். நீர் அவர்களைச் சுவர்க்கத்தில் பார்ப்பீர். நீர் மட்டும் இந்த உடம்புடன் சுவர்க்கம் செல்வீர்; ஏறும்" என்றான்.

யுதிஷ்டிரர், "தேவர் கோமானே! என் உள்ளம் இரக்கமுள்ளது. இந்த நாய் என்னிடம் அன்புள்ளது. இது என்னுடன் வர வேண்டும்" என்றார்.

இந்திரன், "உத்தமரே! நீர் தெய்வத் தன்மையையும், எனக்கு நிகரான உயர்வையும், எல்லாச் செல்வத்தையும், சிறந்த சித்தியையும், சுவர்க்கத்தையும் அடைந்திருக்கின்றீர், நாய் சுவர்க்கத்திற்கு வரக் கூடாது. இதில் உமது கருணைக்குக் குறையென்பதில்லை. நீர் மட்டும் ஏறும்" என்றான்

யுதிஷ்டிரர், "தேவபதியே! நீர் சொல்வது நான் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக வில்லை. நம்பி வந்தவர்களை நான் ஒரு போதும் விடமாட்டேன். சுகமோ துக்கமோ இந்த நாயுடன் சேர்ந்தே அநுபவிப்பேன். நாய்க்காக நான் மோக்ஷ இன்பத்தை விட்டு விடுகின்றேன்" என்றார்.

இந்திரன், "தருமபூபதியே! நீர் பிடிவாதம் பண்ண வேண்டாம்; சுவர்க்கத்துக்கு நாய் வருவது கூடாது. இந்திரனாகிய என் சொல்லை நீர் மறுப்பதும் முறையன்று. இதோ உமக்கென்று வந்திருக்கும் இந்தச் சிறந்த புண்ணியத் தேரில் ஏறும்; தாமதிக்காதீர்" என்றான்.

தருமபுத்திரர். "வஜ்ரபாணியே! உலகத்தில் பக்தனை விடுவது மகத்தான பாவமாகும். ஆதலால் நான் சுகத்தை விரும்பி எக்காலத்திலும் பக்தனை விடமாட்டேன். பயந்தவனையும், பக்தனையும், துன்பமுற்றவனையும், வேறுகதியின்றி வந்தவனையும், மெலிந்தவனையும், உயிரைக் காத்துக் கொள்ள விருப்பமுள்ளவனையும், நான் உயிரைவிட நேர்ந்தாலும் விடமாட்டேன்.

இது எனக்கு நித்தியமான விரதம்''என்று உறுதியுடன் உரைத்தார்.

இந்திரன், ''தருமரே! நாயினால் பார்க்கப்பட்ட அன்னமே உண்ணத்தக்கதன்று என்று ஆன்றோர்கள் கூறுகின்றார்கள். எல்லாவற்றையும் விட்ட நீர் நாயை விடாமல் ஏன் மதிமயக்கங் கொள்ளுகின்றீர்?'' என்றான்.

யுதிஷ்டிரர், ''ஐயா! இறந்தவர்களுடன் நட்பும் பகையும் இல்லை என்பது உறுதி. இறந்தவர்களை எழுப்ப என்னால் இயலாது ஆதலால் அவர்களை விட்டேன். உயிருள்ளவர்களை நான் விடவில்லை. அடைக்கலம் புகுந்தவனைக் காப்பாற்றாமை; பெண்மணியைக் கொல்வது; நல்லவர்கள் பொருளைக் கவர்தல்; நண்பனுக்குத் தீங்கு புரிதல், ஆகிய இந்த நான்கு பாவங்கட்கு நிகரானது, நம்பி வந்தவனை விடுவது! எனவே நான் இந்த நாயை விட்டுச் சுவர்க்கம் வரமாட்டேன். நீர் செல்லும்'' என்றார்.

தருமபுத்திரருடைய இந்த நன்னடையைக் கண்ட தருமதேவதை, நாய் வடிவத்தை விடுத்துத் தன்சொந்த வடிவைக் கொண்டு நின்றார். தன் மகனை யுதிஷ்டிரரைப் பார்த்துக் கூறுகின்றார். ''பாரத! உன் இனிய அறநெறியைக் கண்டு மகிழ்ச்சியுறுகின்றேன். உன் தந்தை பாண்டுவின் நற்குணங்கள் உன்னிடம் அமைந்துள்ளன. நாயை விடுத்து விமானம் ஏறியிருப்பாயானால், உனக்குப்பெரிய பாவம் நேர்ந்திருக்கும். முந்தி நான் ஒரு முறை உன்னைச் சோதித்தேன். நச்சுப் பொய்கையில் மாண்ட துணைவர்களில் ஒருவனை மட்டும் எழுப்பு என்றேன். அத்தைவத வனத்தில் நீ குந்தி-மாத்ரி என்ற இரு தாயாரையும் சமமாக நினைத்து, பீமனையும் தனஞ்சயனையும் விடுத்து, மாற்றாந் தாய் மகன் நகுலனை எழுப்பினாய். இப்போது நாய் ஒரு பக்தன் என்று எண்ணி, சுவர்க்கத்தை விடுத்தனையல்லவா? ஆதலால் உனக்கு நிகரான ஒருவன் விண்ணிலுமில்லை; மண்ணிலுமில்லை. முன்னும் இல்லை; பின்னும் இருக்கப்போவதில்லை. நீ உடம்புடன் சுவர்க்கம் செல்வாய். உன் புகழ் வாழ்க'' என்று உள்ளங் குளிர்ந்து வாழ்த்தி அருள் புரிந்தார்.

பின்னர் தருமரும், இந்திரனும், மருத்துக்களும், அச்வநி தேவர்களும், ஏனைய அமரர்களும், தேவ ரிஷிகளும், சித்தர்களும், முத்தர்களும் தருமரை வரவேற்க, தருமபுத்திரர் புண்ணிய விமானத்தில் ஏறித் தன் ஒளியினால் உலகத்தை நிரப்பிக்கொண்டு மேல் உலகஞ் சேர்ந்தார்.

அப்போது சிறந்த முனிவரான நாரதர் உரத்த குரலில் கூறினார். ''இப்படி உடம்புடன் சுவர்க்கம் வந்தவர்கள் இதுவரை ஒருவரும் இல்லை. தங்கள் முன்னோர்களின் புகழை எல்லாம் சுருக்கித் தன் பெருமையால் எல்லா உலகங்களையும் தருமர் பெற்றார். தருமரே! இதோ இந்த புண்ணிய உலகங்களையும், இங்குள்ள துயரங்களையும் பாரும்'' என்றார்.

யுதிஷ்டிரர், ''என்னுடைய சகோதரர்கள் எங்கே? அவர்கள் சென்ற இடத்தை நான் அடைய விரும்புகின்றேன்'' என்றார்.

இந்திரன், ''யுதிஷ்டிரரே! நீர் ஏன் இன்னும் மானுடத்தன்மையுடன் இருக்கின்றீர். உன் தம்பியர்கள் நரகில் இருக்கின்றார்கள் என்றார்.

யுதிஷ்டிரர், ''பகவானே! இதோ இந்த உயர்ந்த ஆதனத்தில் துரியோதனாதிகள் மிகச் சிறப்பாக இருக்கின்றார்கள். பரம புனிதர்களான என் தம்பியரும் திரௌபதியும் நரகம் போனார்களா? கர்ணன் எங்கே? என் தம்பிமார்கள் எங்கே? அங்கே என்னையும் விடுங்கள்'' என்றார்.

இந்திரன் கட்டளைப்படி தேவதூதன் வந்து நரக உலகிற்கு அவரை அழைத்துச் சென்றான். நரகம் இருள் சூழ்ந்து உதிரச் சேறு, உரோமம், கடும் வெப்பம், நாற்றம் கொடிய விஷப்பிராணிகள், நெருப்புமுதலியவைகளுடன் கூடிப் பார்க்க அருவருப்பாக இருந்தது. இரும்பு முட்களும், கொதிக்கின்ற எண்ணெயும், வழுக்கு நிலமும், அனல் காற்றும் உள்ள நரகினைப் பார்த்து 'அப்பா தேவதூதனே! நான் இவ்வழியில் இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டும்' என்று கேட்டார்.

''நீர் இத்துடன் திரும்பும். இதற்குமேல் உம்மை அழைத்துப் போகவேண்டாம் என்று, தேவர்கள் எனக்குக் கட்டளையிட்டார்கள்'' என்றான்.

அப்போது நாற்புறங்களிலும் தீனமான குரல்களைக் கேட்டார். 'உத்தமரே! உமக்கு

வந்தனம்' உமது காற்றுப் படுவதனல், எமக்கு வேதனை குறைகின்றது. நீர் சற்று நில்லும்' என்ற அழுகுரல்களைக் கேட்டார். அவர்களின் உருவம் தருமருக்கு நன்கு தெரியவில்லை. ''நீங்கள் யார்?'' என்று கேட்டார்.

''நான் கர்ணன்'', ''நான் பீமன்'' ''நான் விஜயன்'', ''நான் சகாதேவன்'', ''நான் திரௌபதி'', ''நாங்கள் திரௌபதி குமாரர்கள்'' என்று உரக்கச் சொன்னூர்கள்.

தருமர், ''இது என்ன ஆச்சரியம்? நான் காண்பது கனவா? நனவா? பாவிகளான துரியோதனுதிகள் மேல்உலகில் சூரியனைப் போல் ஒளியுடன் வீற்றிருக்கவும், புண்ணியவான்களான இவர்கள் நலிந்திருக்கவும் கண்டேன். இது என்ன விந்தை? இது என்ன நியாயம்? தேவதூதனே, நீ போய்வா? நான் தம்பியருடன் நரகிலே வாசஞ் செய்வேன். இவர்களை விடுத்து வரமாட்டேன்'' என்ருர்.

அப்போது சகல தேவர்களும் தருமதேவதையும் காட்சி யளித்தார்கள். நரக வுலகம் மறைந்தது. எங்கும் நறுமணம் வீசியது.

இந்திரன், ''நீர் மிகப் பெரிய நற்குண சீலர். உமக்கு அழியாத உலகங்கள் கிடைத்திருக்கின்றன. சிறிது பாவமும் அதிக புண்ணியமும் செய்தவர்கள், முதலில் நரகமும் பிறகு சுவர்க்கமும், அடைவார்கள். சிறிது புண்ணியமும் அதிகபாவமும் செய்தவர்கள் முதலில் சுவர்க்கமும், பிறகு நரகமும் அடைவார்கள். நீர் துரோணவதத்தின்போது ஒருசில பொய் புகன்றீர். அதனுல் நரக தரிசனம் ஏற்பட்டது. துரியோதனுதிகள் சிறிது தவம் புரிந்த படியால் சுவர்ககத்தில் இருந்தார்கள். அவர்கள் இப்போது நரகஞ்சேர்ந்து

---

## செய்திச் சுருக்கம்

**மாதாந்தர வழிபாடு:**

சென்னைத் தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையத்தினர் செய்துவரும் மாதாந்தர வழிபாட்டு நிகழ்ச்சியின் எட்டாவது ஆண்டு நிறைவு விழா சென்னைக்கு அருகேயுள்ள வடதிருமுல்லை வாயிலில், 30-4-57 ஞாயிறு அன்று தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களின் திருமுன்னிலையில் சிறப்புற நடை பெற்றது. நமது அறநிலைய ஆணையர் திரு. மா. சே. சாரங்கபாணி முதலியார் அவர்களும் சென்னைத் துணை ஆணையர் திரு. ஏ. சிதம்பரம் அவர்களும், தஞ்சைத்துணை ஆணையர் திரு, ஏ. மாரக்கண்ட வேல் ராஜன் அவர்களும், பெருமக்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள், வித்துவான் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரையும் நன்றியுரையும் நவின்ருர்கள். சென்னையில் இருந்து அன்பர்கள் பெருந்திரளாக வந்து கலந்து கொண்டமை, சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது.

—ஆசிரியர்.

விட்டார்கள். உம்முடைய தம்பியரும் கர்ணனும், திரௌபதி முதலியோரும் இதோ சுவர்க்கத்தில் வசிக்கின்றார்கள்; பாரும். வருந்தற்க; பகீரதன், பரதன் முதலிய சிறந்த மன்னர்களுடன் வாசஞ் செய்யும். இந்த ஆகாய கங்கையில் முழுகும், உமக்கு மனிதத் தன்மை மாறிவிடும்'' என்றான்.

தரும தேவதை தோன்றி, "தருமா! உன்னை இப்போது மூன்றும் முறையாகச் சோதித்தேன். தம்பியர்க்காக நீ நரகத்தில் வசிக்கத் துணிந்தாய். இனி உனக்கு அழியாத புண்ணிய உலகங்கள் யாவும் உரியவை'' என்றார்.

தருமபுத்திரர் வானதியில் ஆடினார். மனித உடம்பு நீங்கித் தெய்வ வடிவுபெற்றார். ஒளி மிகுந்த விண்ணுலகிலே அவர் கர்ணனையும், தம்பியர்களையும், திரௌபதியையும், பீஷ்மர், அபிமன்யு, பாண்டு, குந்திதேவி, மாத்ராதேவி, திருதராஷ்டிரன் முதலியோர்களையும் பார்த்து மகிழ்ந்தார்.

சுவர்க்க இன்பத்தைத் துய்த்த பின் பீஷ்மர் வசுக்களிடமும், தருமர் தருமதேவதையிடமும், கர்ணன் சூரியனிடமும், பீமன் வாயுவினிடமும், அர்ச்சுனன் இந்திரனிடமும், அபிமன்யு சந்திர குமாரன் வாசன் என்பவன் அம்சம் ஆதலால் அவன் சோமனிடமும், துரோணர் வியாழனிடமும், நகுல சகாதேவர்கள் அசுவனி தேவர்களிடமும், திரௌபதி லட்சுமியிடமும் ஒடுங்கினார்கள்.

